2014, February 01 - 15

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/146/News/2014

## தமிழ்த்தேசிய இனத்தின் எதிர்காலம்

ஜெனீவாவும் அரசும்

சுற்றுலா விசாவும் வெளியுறவுக்கொள்கையும்

அரசும் புலம்பெயர் தமிழ்ச்சமூகமும்

முதலாவது உலக யுத்தத்திற்குப்பிறகு கடந்துவிட்ட ஒரு நூற்றாண்டு

என்ன நடக்குது வங்கதேசத்தில்?

சூடான் நெருக்கடிக்கு அடிப்படைக்காரணம்



போட்டி தொடங்கு முன்னரே

## தோல்வியை ஒப்புக்கொண்ட மாதிரி...


| | | |
|---|---|---|
| INDIA..............IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA..........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

# வீரகேசரி
# இ-பேப்பர்
# இப்பொழுது
# புதுப்பொலிவுடன்..!





VIRAKESARI
வீரகேசரி

epaper.virakesari.com


நாம் துவண்டு
போவதில்தான் எமது
மிகப்பெரிய பலவீனம்
இருக்கிறது. மீண்டும் ஒரு
தடவையாவது
முயற்சிப்பதே நாம்
எப்போதும் வெற்றி
பெறுவதற்கான
நிச்சயமான வழி.
- தோமஸ் அல்வா
எடிசன்





சமகாலம்
2014, பெப்ரவரி 01 - 15
பக்கங்கள் - 68




11 தமிழ்த் தேசிய இனத்தின் எதிர்காலம்

14 அரசும் புலம்பெயர் தமிழ்ச்சமூகமும்

18 ஜெனீவாவும் அரசாங்கமும்

22 சுற்றுலா விசாவும் அரசின் வெளியுறவுக் கொள்கையும்

24 வலையில் சிக்குமா மீனவர் பிரச்சினை?

28 மலேசியாவும் இலங்கையும்; ஒற்றுமைகளும் வேற்றுமைகளும்

32 முதலாவது உலக யுத்தத்திற்குப்பிறகு கடந்துவிட்ட ஒரு நூற்றாண்டு

34 என்ன நடக்குது வங்க தேசத்தில்?

41 சூடான் நெருக்கடிக்கு அடிப்படைக்காரணம்

44 வலசைப்பறவை

49 ஏரியல் ஷரோன்

54 டில்லி டயறி


58 சென்னை மெயில்

66 கடைசிப்பக்கம்









*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

ஆசிரியரிடமிருந்து...

# இன்னொரு சுற்றுத்தேர்தல்


மீண்டும் ஒரு தேர்தல் காலம் வந்திருக்கிறது. மறுவார்த்தைகளில் சொல்வதானால், பொது மேடைகளில் பொய்சொல்வதற்கும் போலி வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கி ஏமாற்றுவதற்குமான இன்னொரு கால கட்டம் வந்திருக்கிறது; அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கு மதுபானப் போத்தல்களை விநியோகிப்பதற்கும் கண்டபடி சுவரொட்டிகளை ஒட்டுவதற்கும் அரசியல் எதிரிகளைத் தாக்குவதற்கும் ஏன் கொலை செய்வதற்குமான இன்னொரு கால கட்டம் வந்திருக்கிறது.

தேர்தல் சட்டங்களை எவரும் மீறுவதற்கு அனுமதிக்கப்போவதில்லை என்று தேர்தல் திணைக்கள அதிகாரிகள் இப்போது கூறுவார்கள். ஆளும் கட்சி அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தேர்தல் பிரசாரங்களின் போது அரசாங்க உடைமைகளையும் ஊடகங்களையும் துஷ்பிரயோகம் செய்ய அனுமதிக்கப்போவதில்லை என்றும் அந்த அதிகாரிகள் தவறாமல் கூறுவார்கள்.

எவ்வாறெனினும் பட்டப்பகலிலேயே அதிகாரிகளின் கண்முன்னாலேயே தேர்தல் சட்ட மீறல்கள் இடம்பெறத்தான் போகின்றன. மூலை முடுக்குகள் எல்லாம் சுவரொட்டிகள் ஒட்டப்படத்தான் போகின்றன. ஆலயச் சுவர்களும் கூட இதற்கு விதிவிலக்காக இருக்கப் போவதில்லை. இவையெல்லாவற்றையும் கண்டும் காணாதவர்கள் போன்று பொலிஸார் இருக்கத்தான் போகிறார்கள். சில சந்தர்ப்பங்களில் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் திடீரென்று நித்திரை விட்டெழுந்தவர்கள் போன்று பொலிஸாரைப் பணிக்கமர்த்தி சுவரொட்டிகளை கிழித்து அகற்ற நடவடிக்கைகளை எடுக்கவும் செய்வார்கள். ஆனால், தேர்தல் பிரசாரங்கள் நடைபெறுகின்ற சகல இடங்களிலும் அவ்வாறு செய்யமாட்டார்கள். தேர்தல் அதிகாரிகளின் உத்தரவுகளையும் மீறி பலம்பொருந்திய அரசியல்வாதிகளின் பிரமாண்டமான 'கட்அவுட்கள்' அமைக்கப்படத்தான் போகின்றன.

மேல்மாகாண சபைக்கும் தென்மாகாண சபைக்கும் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யும் பணிகள் பெப்ரவரி 6 ஆம் திகதி முடிவடைகிறது. அதன் பிறகு அழகுராணிகளுக்கா, நடிகர் நடிகைகளுக்கா, சண்டியர்களுக்கா, போதைப்பொருள் கடத்தல் காரர்களுக்கா அல்லது அரசியல் வாதிகளுடன் இருக்கும் உறவுகள் மற்றும் தொடர்புகள் காரணமாக பிரபல்யமடைந்தவர்களுக்கா வாக்களிப்பது என்ற தெரிவை மக்கள் எதிர்நோக்கப் போகிறார்கள். படித்த கண்ணியமான வேட்பாளர்களைக் காட்டிலும், பணத்தை வீசியெறிந்து பிரசாரங்களை மேற்கொள்ளக்கூடிய வல்லமை கொண்ட வேட்பாளர்களினால் பெருவாரியான வாக்காளர்கள் கவரப்படக்கூடிய நிலைமை உண்டு.

ஒரு மாதத்துக்கும் கூடுதலான காலத்துக்கு வேட்பாளர்களின் பிரசாரங்கள் உக்கிரமாக முன்னெடுக்கப்படும். மக்களுக்கு தாங்கள் எத்தகைய பணிகளைச் செய்யப் போகிறார்கள் என்பதைக் காட்டிலும் எதிர்த்தரப்பு வேட்பாளர்கள் பற்றி வசைபாடல்களிலேயே அரசியல்வாதிகள் கூடுதல் அக்கறை காட்டுவார்கள். மக்களும் அவற்றுக்கு கைதட்டி ஆரவாரம் செய்வார்கள். பிறகு வாக்களிப்புத் தினத்தன்று தங்கள் வாக்குகளை மக்கள் பதிவு செய்வார்கள். அத்துடன், அவர்களின் 'ஜனநாயகக் கடமை' முடிந்துவிடுகிறது. அதற்குப் பிறகு நான்கு தொடக்கம் ஆறு வருடங்களுக்கு மக்களுக்கும் அவர்களின் பிரதிநிதிகளுக்கும் இடையேயான நெருக்கம் இல்லாமற் போய்விடும். அடுத்துவரும் நாட்களில் பெருவாரியான 'மக்கள் பிரதிநிதிகள்' அண்மைக்காலத்தில் இழைத்ததைப் போன்ற கொலைகள், பாலியல் வல்லுறவுகள், போதைப்பொருள் கடத்தல்கள், அடாவடித்தனங்கள் பற்றிய செய்திகளை மக்கள் ஊடகங்களின் மூலம் அறியக்கூடியதாக இருக்கும். ■















# கடிதங்கள்

## தென்சூடானும் தமிழர்களும்

ஜனவரி 01 -15 சமகாலம் சஞ்சிகையில் தென்சூடானின் உள்நாட்டு அமைதியின்மை பற்றி செய்தி ஆய்வு பகுதியில் வாசித்தேன். இதை ஏனோ எனது மனம் எமது இலங்கைத் தமிழர் பிரச்சினையுடன் முடிச்சுப் போட்டுக்கொண்டது.

இன்று வடமாகாண சபை இயங்குகின்றது. ஆனால், அதன் அடித்தள கட்டுமானத்திலேயே பலவீனங்கள் மலிந்து காணப்படுகின்றன. அதில் ஒன்றுதான் நிறைவேற்றுத் துறையின் ஆளுநர் மூலமான தலையீடு. அவற்றை எல்லாம் விடுத்து இன்று வட மாகாண முதல்வர் அவர்களின் கொள்கையையும் தாண்டி தமிழருக்கு தன்னாட்சி என்று ஒன்று இலங்கைத் தீவினுள் அமையுமாயின் அது எவ்வாறு இருக்குமோ என்பது என் கண் முன்னே இன்று நிழலாடுகின்றது. ஆட்சியில் இருக்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினுள்ளேயே எண்ணற்ற முரண்பாடுகளும் வெளிப்படையான மறுதலிப்புக்களும் தேர்தலின் முன்னரும் பின்னரும் அம்பலமாகி மக்களுக்கு ஏமாற்றத்தையும் விரக்தியையும் தருகின்றன.

இது பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் சர்ச்சைக்குரிய பாராளுமன்ற உரையின் பின் மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தென்சூடானின் அதிகாரபூர்வ தனிநாட்டு பதவிப்பிரமாண வைபவத்தின் போது புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் முக்கியஸ்தர்கள் அதை தமிழரின் விடுதலைக்கு அல்லது தமிழீழ கனவிற்கு ஓர் நடைமுறை உதாரணம் என புகழ்ந்துரைத்தார்கள்.

ஆனால், இன்று அந்த தனிநாடு முன்னரை விடவும் மோசமான நிலைக்கு தனது குடிகளை இட்டுச் சென்றுள்ளது. பதவி ஆசையும் அதை கொள்கை வேறுபாடு மற்றும் நாட்டுப்பற்று எனும் மெழுகுகள் பூசி மறைக்கும் செயற்பாடுகளும் தென்சூடானை பிடித்தாட்டும் சாத்தான்கள். அதைப்போன்று ஒரு நிலை இன்றைய தமிழ் அரசியல் களத்தில் தனியான ஆட்சியதிகாரம் அமையுமாயின் தமிழர்களுக்கு ஏற்படும் என்பதற்கு எவ்வித மான பரிசோதனைகளையும் நடத்த வேண்டிய அவசியமில்லை.

அத்தோடு, இன்றைய யதார்த்தங்கள் நாளைய நடைமுறையிலும் பிரதிபலிக்கும் என்பதை பல தமிழ் இளைஞர்கள் நம்புவதால் இன்றைய தமிழ் அரசியலின் கீழ் ஓர் பாகுபாடு இல்லாத மத்திய அரசின் கீழ் அனைவரும் தமிழர் என்ற முறையில் நடத்தப்படுவதையே விரும்புகின்றனர். இது மாற்றம் பெற வேண்டுமெனில் தமிழ் அரசியல்வாதிகள் கொள்கை எனும் மெழுகை அகற்றிவிட்டு தீர்வு எனும் கற்பாறைக்காய் ஒன்றுபட வேண்டும்.

அரியரெட்ணம் அர்ஜுன்,
இறுதி வருடம், சட்டத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

## தயானின் கருத்துகள்

புதுவருடத்தின் முதலாவது சமகாலம் இதழில் அரசியல் ஆய்வாளர் கலாநிதி தயான் ஜெயதிலகவுடன் நடத்திய பேட்டி பிரசுரமாயிருந்தது. கலாநிதி ஜெய்திலக இலங்கையின் தலைசிறந்த ஆங்கில பத்திரிகையாளராகிய காலம் சென்ற மேர்வின் டி சில்வாவின் ஒரே மகனாவார். கடந்த 25 ஆண்டுகளில் இலங்கை கண்ட சிறந்த அரசியல் விஞ்ஞானி என ஜெயதிலகவை வர்ணிக்கலாம்.

கலாநிதி ஜயதிலக முன்னாள் ஜனாதிபதி காலம் சென்ற ரணசிங்க பிரேமதாசவுடன் நெருக்கமாக இருந்தவர். அவருடைய ஆலோசகராக பணியாற்றியவர். அதே போல இன்றைய ஜனாதிபதிக்கும் மிகவும் நெருக்கமானவர். வேண்டப்பட்டவர். வேண்டப்படுபவர்.

வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தேர்தல் காலத்தில் பிரபாகரனை ஹீரோவாக வர்ணித்ததாகவும் அதனால் அரசாங்கத்திலுள்ள கடும்போக்கு தீவிரவாத சக்திகள் சூடாகியுள்ளதாகவும் கலாநிதி கவலைப்படுகிறார். முதலமைச்சர் தனது கருத்தை பிரபாகரனின் ஊரான வல்வெட்டித்துறையில் வைத்து கூறியிருந்தார்.

அக்கூற்று தேர்தலில் அதிக வாக்குகளைப் பெறுவதற்காக என்று கூறப்பட்டது. யாழ்ப்பாணத்தில் நின்று கொண்டு புலிகளின் 'பயங்கரவாதத்தை' பற்றிப் பேச முடியாது. அரச பயங்கரவாதத்தின் கோர நினைவுகள் மக்கள் மனங்களில் இன்னும் நிலைத்து நிற்கின்றன. ஒரு தேர்ந்த, பண்பட்ட அரசியல்வாதி செய்யக்கூடியதையே முதலமைச்சர் அவர்களும் செய்தார். அதில் எந்தத் தவறும் இல்லை. சிங்கள தீவிரவாதிகளுக்கு பிடித்தமானதையே தமிழ் அரசியல் தலைவர்கள் செய்ய வேண்டும் என்று நினைப்பது அபத்தமானதாகும்.

ஒரு பேச்சுக்கு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் புலிகளை பகிரங்கமாகக் கண்டிக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். என்ன நடக்கும்? ஜனாதிபதி உள்ளிட்ட சிங்கள தீவிரவாதிகள் தமிழர்களுக்கு நியாயமான தீர்வை உடனே தந்து விடுவார்களா? கலாநிதி ஜயதிலக போன்ற 'மிதவாதிகள்' தமிழ்த்தரப்புடன் சேர்ந்து சிங்கள தீவிரவாதத்தை பலவீனப்படுத்துவார்களா? இவை எதுவும் நடக்கப்போவதில்லை. சிங்கள தீவிரவாதம் ஆட்சிக்கட்டிலில் மிகப்பலமாக கோலோச்சுகிறது. சிங்கள 'மிதவாதிகள்' தமிழ்த் தரப்பை குற்றஞ்சாட்டுவதையே தொடர்ந்து செய்வார்கள். தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் புலிகளை பாராளுமன்றத்தில் கண்டித்திருக்கிறார்கள். கூட்டமைப்பில் புலிகளுக்கு சார்பானவர்கள் உள்ளார்கள் என்பது உண்மையே.

ஆனால், அவர்களும் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். வட பகுதித் தமிழர்கள், குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள். அவர்களது காணிகள் அபகரிக்கப்படுகின்றன. வழிபாட்டிடங்கள் தகர்க்கப்பட்டு, சூறையாடப்படுகின்றன. இதற்கு கலாநிதி ஜயதிலக என்ன பதில் வைத்திருக்கிறார்? அம்மக்கள் மேலும் மேலும் புலிகளை இப்பொழுது நினைக்கிறார்கள். புலிகளின் செயற்பாடுகளை முன்னர் எதிர்த்தவர்கள் கூட இப்பொழுது மௌனமாகி விட்டனர். அவர்களுக்கு கலாநிதி ரத்னஜீவன் ஹூல் போன்றவர்களுக்கு கலாநிதி ஜயதிலக என்ன பதில் வைத்திருக்கிறார்?

கலாநிதி ஜயதிலகவின் கருத்து வெளியிடும் சுதந்திரத்தை நான் மதிக்கிறேன். தனது அரசாங்கத்திற்கும் அவர் சில விடயங்களை கூறித்தான் இருக்கிறார். ஆனால் இப்படியான விடயங்களைப் பிரசுரிக்கும்போது அதே இதழில் அல்லது அடுத்தடுத்த இதழிலேனும் கலாநிதியின் கருத்துக்கான எதிர்வினையை (கூட்டமைப்பின்/ வடபகுதி தமிழ் மக்களின் குரலை) வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வாகீஷயன், வெள்ளவத்தை.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 02 இதழ் 15

2014, பெப்ரவரி 01 - 15

A Fortnigtly Tamil News Magazine


**எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
**தொலைபேசி : +94 11 7322700**
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)

**உதவி ஆசிரியர்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

**பக்க வடிவமைப்பு**
எம்.ஸ்ரீதரகுமார்

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்



சாத்தியமான வேளைகளிலெல்லாம் மற்றவர்களுக்கு இரக்கம் காட்டுங்கள். அது எப்போதுமே சாத்தியமானது
- தலாய் லாமா

**வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:**
**ஆசிரியர்,**
**சமகாலம்**
**185, கிராண்ட்பாஸ் ரோட்,**
**கொழும்பு -14.**
**இலங்கை.**
**மின்னஞ்சல் :** samakalam@expressnewspapers.lk

பெக்ஸ்; 011 7778752, 011-7767704, 011-2327827,

# வாக்குமூலம்....



வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நீதியரசர் என்ற வகையில் எமது மதிப்பைப் பெற்றவர். இப்போது ஏறுகின்ற மேடைகளில் எல்லாம் அவர் தனது முத்திரையைப் பதித்துச் செல்கிறார். இதனால் சந்தோசப்படுவதா கவலைப்படுவதா என்று எனக்குத் தெரியவில்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ




ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து அனுமதி கிடைக்குமானால், ஜெனீவாவுக்குச் சென்று இலங்கைக்கு ஆதரவாக பிரசாரம் செய்யத் தயாராயிருக்கிறேன். வெளியுறவு விவகாரங்களைப் பொறுத்தவரை அரசாங்கமும் எதிர்க்கட்சியும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.

எதிர்க்கட்சி பிரதம கொறடா ஜோன் அமரதுங்க



ஈழப்போரில் விடுதலைப் புலிகள் வெற்றி பெற்றிருந்தால் எவருமே இலங்கைக்கு எதிராக போர்க் குற்றங்களைச் சுமத்தியிருக்கமாட்டார்கள்; மனித உரிமைகள் நிலைவரங்களை அவதானிக்க இலங்கைக்கு எந்த வெளிநாட்டுப் பிரதி நிதியும் விஜயம் செய்திருக்கமாட்டார். ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையில் எந்தவொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருக்காது.

வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச



இன்று வேடுவ சமூகத்துக்கு உகந்ததொரு தலைமைத்துவம் இருக்கிறது. ஆனால், அத்தகையதொரு தலைமைத்துவம் சிங்கள பௌத்தர்களுக்கு இருக்கிறதா என்பது பெரிய தொரு கேள்வி. ஏனென்றால், சிங்கள பௌத்தர்களின் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் நாட்டைப்பற்றியோ அல்லது மதத்தைப் பற்றியோ அக்கறைப்படுவதில்லை. அவர்களின் அக்கறையெல்லாம் அதிகாரத்தைப் பற்றியதுதான்.

பொதுபலசேனா பொதுச்செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரர்



நான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தினால் தத்தெடுக்கப்பட்ட பிள்ளை. நாமல் ராஜபக்ஷ எனது சகோதரர். அவர்களிடமிருந்து என்னை எவராலும் பிரிக்க முடியாது. என்னைப் பற்றி ஏதாவது முறைப்பாடு கிடைக்கப்பெற்றால் எந்த நேரத்திலும் என்னை அழைத்துப் பேசுமாறு நான் ஜனாதிபதியிடம் வேண்டிக் கொண்டேன்.

கொழும்பு மத்தி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் ஹிருணிக்கா பிரேமச்சந்திர



பிரபாகரன் பயங்கரமான ஒரு கொலையாளியாக இருந்தாலும் ஒரு உறுதியான இலட்சியத்தைக் கொண்டவர். எங்களது குடும்பங்களை அவர் பழிவாங்கவில்லை. எங்களது பிள்ளைகள் மீது அவர் வஞ்சம் தீர்க்கவில்லை. இன்றைய ஆட்சியாளர்கள் பிரபாகரனின் ஒரு மயிருக்குக் கூட பெறுமதியில்லாதவர்கள்.

ஜனநாயகக் கட்சித் தலைவர் சரத் பொன்சேகா




ஹெரோயினோ எதனோலோ எதுவென்றாலும், கள்ளச் சரக்கு நாட்டுக்குள் கடத்தப்படும் போது பிடிபட்டால், முக்கியமான சில அரசியல்வாதிகள் அதில் சம்பந்தப்பட்டிருப்பதாக விசாரணைகளில் தெரிய வருகிறது. இது மிகவும் கவலைக்குரிய விடயம். எனக்கு எதிராக அத்தகைய குற்றச்சாட்டு எதுவும் சுமத்தப்படுமானால், அந்த அபகீர்த்திக்கு முகங்கொடுக்க அடுத்த விநாடி நான் உயிருடன் இருக்க மாட்டேன்.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன்

செய்தி ஆய்வு

# ஜனாதிபதியை கடுமையாகத் தாக்கிப்பேச ஆரம்பித்திருக்கும் முதலமைச்சர் விக்னேஸ்வரன்





வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கடுமையாக விமர்சித்துப் பேச ஆரம்பித்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அலரிமாளிகையில் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்தது தொடக்கம் பல்வேறு நடவடிக்கைகள் மூலமாக அரசாங்கத்துக்கு காண்பித்த நல்லெண்ணச் சமிக்ஞைகளுக்கு உரிய முறையில் பிரதிபலிப்பு வெளிக்காட்டப்படாததால் ஏற்பட்ட விரக்தி காரணமாகவே முதலமைச்சர் இவ்வாறு நடந்துகொள்கிறார் என்றே கருதவேண்டியிருக்கிறது.

வடக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண அரசு பதவியேற்று நான்கு மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அதனால் உருப்படியான முறையில் செயற்படமுடியாதிருக்கிறது. அதற்கான காரணங்களை எடுத்துவிளக்கியும் கூட அரசாங்கம் அதன் போக்கை மாற்றுவதாக இல்லை. குறிப்பாக மாகாணசபை வெறுமனே கூட்டங்களை நடத்தி தீர்மானங்களை நிறைவேற்றுகின்றதே தவிர, மற்றும்படி நிருவாகத்தில் ஆளுநரின் விருப்பப்படியே காரியங்கள் நடைபெறுகின்றன.

ஆளுநருக்கும் முதலமைச்சருக்கும் இடையிலான முறுகல் நிலையைத் தணிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்துவந்த நிலையில், ஜனவரி 2ஆம் திகதி அலரிமாளிகையில் ஜனாதிபதிக்கும் விக்னேஸ்வரனுக்கும் இடையே நடந்த சந்திப்பு ஓரளவுக்கேனும் பயனைத் தருமென்று அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்க்கப்பட்டது. அடுத்த மாதம் ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரை மனதிற்கொண்டு அரசாங்கம் முதலமைச்சர் விக்னேஸ்வரனால் சுட்டிக்காட்டப்பட்டுவருகின்ற பிரச்சினைகளில் சிலவற்றையாவது தீர்ப்பதற்கு முன்வரக்கூடும் என்று கருதப்பட்டது. ஆனால், எதுவுமே நடைபெறுவதாக இல்லை.

இந்நிலையிலேயே முதலமைச்சர் அரசாங்கம் மீது அதுவும் குறிப்பாக, ஜனாதிபதி ராஜபக்ஷ மீது கடுமையான தாக்குதல்களைத் தொடுக்க ஆரம்பித்திருக்கிறார்.

சிறப்பாகச் செயற்பட்ட உள்ளூராட்சி சபைகளைப் பாராட்டும் வைபவமொன்று வலிகாமத்தில் ஜனவரி 23 ஆம் திகதி நடைபெற்றது. அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட விக்னேஸ்வரன் நிகழ்த்திய உரை அவர் பதவியேற்றதற்குப் பிறகு ஜனாதிபதி மீது தொடுத்த மிகவும் கடுமையான தாக்குதலாக அமைந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

'இராணுவத்தின் உதவியுடன் வடமாகாண சபைத்தேர்தலில் வெற்றி பெறலாம் என்று ஜனாதிபதி ராஜபக்ஷ நினைத்தார். ஆனால், அதில் அவர் தோல்வியையே கண்டார். அவரால் அதை சகித்துக்கொள்ள முடியவில்லை. ஜனாதிபதி சொல்வதொன்று செய்வது வேறொன்று.

'அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு ஜனாதிபதி விஜயம் செய்தபோது அவரைச் சந்தித்தேன். எமது மக்களின் தேவைகளையும் அபிலாசைகளையும் பூர்த்தி செய்வதாக அவர் என்னிடம் கூறினார். வடமாகாண சபையின் பிரதம செயலாளரை இடமாற்றுவதாகவும் என்னிடம் உறுதியளித்தார். ஆனால், இன்றுவரை அது நடந்தேறவில்லை.

'2009ஆம் ஆண்டிலிருந்து வடமாகாண சபைத்தேர்தலை நடத்தாமல் பின்போட்டுவந்த ஜனாதிபதி, இறுதியில் இந்தியாவின் நெருக்குதல் காரணமாக கடந்த வருடம் தேர்தலை நடத்த வேண்டியதாயிற்று. பெந்தோட்டை ஆற்றுக்கு அப்பால் உள்ள பகுதிகளைச் சேர்ந்தவர்களை நம்பக்கூடாது என்று தென்னிலங்கைவாசிகள் கூறுவது வழக்கம். ஜனாதிபதியும் கூட தெற்கில் அந்த ஆற்றுக்கு அப்பால் உள்ள பகுதியைச் சேர்ந்தவர் தான்.

(52ஆம் பக்கம் பார்க்க...)

செய்தி ஆய்வு

# டியூனீசியாவில் ஆரம்பித்து எகிப்தில் வழிதவறிப் போன அரபு வசந்தம்

மத்திய தரைக் கடலின் தென்கரையோரங்களில் அரபு வசந்தம் புரட்சியின் மூன்றாவது வருடாந்த நிறைவு இரு புதிய அரசியலமைப்புக்களைத் தரிசித்திருக்கிறது.

டியூசினியாவில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாரா ளுமன்றம் அரபுகிலேயே மிகவும் தாராள மனப்பான்மை கொண்டதென்று வர்ணிக்கப்படக்கூடிய அரசியலமைப்பு ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறது. ஆனால், சில நூறு மைல்கள் கிழக்கே எகிப்தில் பகிஷ்கரிப்பு மற்றும் வன் முறைகளுக்கு மத்தியில் அரசியலமைப்பு மீது நடத்தப் பட்ட சர்வஜன வாக்கெடுப்பு (மக்களால் தெரிவு செய்யப் பட்ட முதலாவது ஜனாதிபதி முஹமட் முர்சியை அதிகா ரத்திலிருந்து விரட்டிய) இராணுவம் வழிநடத்திய சதிப் புரட்சியை 'செல்லுபடியானதாக்கியிருக்கும்' துரதிர்ஷ்ட வசமான நிலைவரத்தைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இருநாடுகளுக்குமே அவற்றுக்கிடையே பல விடயங்க ளில் பொதுவான அம்சங்களைக் கொண்டிருக்கின்றன; சனத்தொகையில் பெரும்பான்மையினர் சுன்னி முஸ்லிம் கள். மதச்சார்பற்ற அரசாங்கங்கள் நீண்டகாலம் பதவியில் இருந்த வரலாறு ஒன்றும் இருக்கிறது. ஆனால், இரு நாடு களும் அவற்றின் அயல்நாடான லிபியாவைப் போன்று மிகுந்த எண்ணெய் வளத்தைக் கொண்டவையல்ல. சிறியளவு எண்ணெய் வளமே இருக்கிறது.

புரட்சிக்கு முன்னதாக எகிப்தும் டியூனிசியாவும் உண வுப் பொருட்களின் விலை அதிகரிப்பு, கடுமையான அளவுக்கு ஏற்றத்தாழ்வைக் கொண்ட வருமானம், இளை ஞர்கள் மத்தியில் வேலையில்லாத்திண்டாட்டம், வயது முதிர்ந்த எதேச்சாதிகாரிகளின் ஆட்சி என்று பல நெருக்க டிகளினால் திணறிக் கொண்டிருந்தன. டியூனிசியா பெரு மளவுக்கு சரியான திசையில் சென்ற அதேவேளை எகிப் தில் நிலைவரங்கள் ஏன் பிழையாகப் போயின?

இருநாடுகளிலுமே நடைபெற்ற முதன் முதலான சுதந்தி ரமான தேர்தல்களில் வெற்றிபெற்ற இஸ்லாமியக் குழுக்க ளின் குணாதிசயத்தில் ஒரு முக்கிய வேறுபாடு இருக்கி றது. டியூனிசியா என்னாஹ்டா (Ennahda) என்ற இஸ்லா மியக் குழுவும் எகிப்தில் முஸ்லிம் சகோதரத்துவ இயக்க மும் வெற்றி பெற்றன. டியூனீசிய இஸ்லாமியக்குழு மிகு ந்த நிதானமாக நடந்துகொண்டதுடன் கருத்தொருமிப் பைக் காண்பதில் அக்கறை கொண்டு செயற்பட்டது. ஆனால், எகிப்தின் முஸ்லிம் சகோதரத்துவ இயக்கம் வரைந்த அரசியலமைப்பை புரட்சியில் பங்குவகித்த பல தரப்பினர் நிராகரித்ததையே காணக்கூடியதாக இருந்தது.

மதவாதிகளின் ஆட்சி வந்துவிடுமென்று அஞ்சியவர்க




எகிப்திய கிளர்ச்சியின் 3ஆவது வருடாந்த தினமான ஜனவரி 25ஆம் திகதி கெய்ரோ தஹ்ரிர் சதுக்கத்தில் இராணுவத்தளபதி அப்தெல் பதாஹ் அல்-சிசியின் படத்தை தாங்கிய வண்ணம் திரண்டு நிற்கும் அவரது ஆதரவாளர்கள்

ளில் சிலர் இராணுவத்தைத் துணைக்கு அழைத்தார்கள். தருணம் பார்த்துக் கொண்டிருந்த இராணுவத் தளபதி அப் தெல் பதாஹ் அல்-சிசி முதன் முறையாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியைக் கைது செய்ய உத் தரவிட்டு அரபு வசந்தம் புரட்சியைக் கொன்று விட்டார். டியூசினியாவைப் பொறுத்தவரை, அதன் இராணுவம் சரித்திர ரீதியாக அரசியலில் பெரிதாக அக்கறை காட்டிய தில்லை. ஆனால், எகிப்தின் பெரிய இராணுவம் அப்துல் கமால் நாசருக்குப் பிறகு ஒவ்வொரு ஜனாதிபதியின் அரி யாசனத்துக்கு நெருக்கமாகச் சுற்றித் திரிந்த வண்ணமே இருந்திருக்கிறது. எகிப்தின் கலாசாரத்திலும் பொருளாதா ரத்திலும் இராணுவம் ஆழமாக வேர்விட்டிருக்கிறது.


எகிப்துக்கான புதிய அரசியலமைப்புக்கு சர்வஜன வாக் கெடுப்பில் வாக்களித்தவர்களில் 98.1 சதவீதமானவர்க ளின் அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. மேலோட்டமாகப் பார்க்கும் போது அரசியலமைப்பு வரைவுக்கு கிட்டத்தட்ட ஏகமனதான அங்கீகாரம் கிடைத்திருப்பதாகவே தோன் றும். ஆனால், உண்மை நிலை அதுவல்ல.

எகிப்தின் சுமார் 5 கோடி 30 இலட்சம் வாக்காளர்களில் ஆக 38.6 சதவீதத்தினரே வாக்கெடுப்பில் பங்கேற்றார் கள். தவிரவும், எகிப்தின் அரசியலில் முக்கிய பாத்திரத்தை வகிக்கும் (தடை செய்யப்பட்ட) முஸ்லிம் சகோதரத்துவ இயக்கம் சர்வஜன வாக்கெடுப்பை பகிஷ்கரித்தது. முர்சி யினால் வரையப்பட்ட அரசியலமைப்பை புதிய அரசிய லமைப்பு பதிலீடு செய்யும்.

*(53ஆம் பக்கம் பார்க்க...)*

உள்நாட்டு அரசியல்

சுரேந்திர அஜித் ரூபசிங்க



# தமிழ்த்தேசிய இனத்தின் எதிர்காலம்

> இனவாத அரசியல் கருத்தியல் மகிந்த ராஜபக்ஷவின் கண்டு பிடிப்பு அல்ல. அடுத்தடுத்து வந்த ஆட்சியாளர்களினால் பின்பற்றப்பட்ட ஒன்றிற்குப்பலம் கொடுத்ததுதான் அவரின் கைங் கரியம். ராஜபக்ஷ அதனை புதியதொரு மட்டத்திற்கு உயர்த்தியுள்ளார். அவரின் ஆட்சி யின் நிலைபேறே இந்த இன வாதக் கருத்தியலில் தான் தங்கியுள்ளது

### அரசியல் வரலாற்றின் இன்றைய கட்டம்

விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் தோல்வியடை யச் செய்த பின்னர் தமிழ்த்தேசிய இயக்கம் முடங்கிப் போயுள்ளது. அரசு ஒருதலைப்பட்சமான முடிவுகளை எடுக்கிறது. பலவீனமடைந்த தமிழ்த்தேசிய இயக்கம் அந் நியச் சக்திகளிடம் சரணடைந்துள்ளது. புலம்பெயர் உறவு களை (டயஸ்போறா) நம்பியுள்ள நிலையில் ஏகாதிபத்தி யங்களிடம் இருந்து நிற்கும் தேவை உள்ளது. உள்நாட்டில் புரட்சிகர, ஜனநாயகச்சக்திகள் தேசிய விடுதலைக்காக ஒன்றிணைவது தடுக்கப்பட்டுள்ளது. பாட்டாளி வர்க்கத் தின் போராட்டத் தலைமையில் தேசியங்கள் ஒன்றுபட் டால் காலனிய ஏகாதிபத்திய ஒழுங்கமைப்புக்கு ஆபத்து என்பதை உணரும் ஆளும் குழுக்கள் நிலைமையில் மாற் றத்தை விரும்பவில்லை. இருக்கும்நிலை தொடர்வதையே அவை விரும்புகின்றன.

### விஞ்ஞானபூர்வமான கோட்பாடு

இலங்கை அரசின் ஒத்துழைப்புடன் பல்வேறு வகை யான பிற்போக்குச்சக்திகள் தம் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றன. இந்நிலையில் தமிழ்த்தேசிய இயக்கமும் பிளவுபடுத்தப்பட்டுள்ளது. பல பிரிவுகள் பல் வித நிகழ்ச்சி நிரல்களுடன் செயற்படுகின்றன. இது தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் மீண்டும் படுகுழிக்குள் தள்ளப்படுவதற்கே வழிவகுக்கும். உண்மையான எதிரி யார் என்பது பற்றி தெளிவு இல்லாத வரை தெளிவான பாதை எது, தந்திரோபாயம் எது, என்ன திட்டத்தின் படி செயலாற்றுவது என்பன பற்றி குழப்பமே நீடிக்கும். ஒடுக்குமுறைக்கு ஆதாரமாக உள்ள பொருளாதார அடித் தளத்தை தகர்க்கவும், அரசியல் முறையை ஆட்டம் காண வைப்பதற்கும், தேசிய ஒடுக்குமுறைக்கு உதவும் கருத்தி யல் மூலங்களை வேரறுக்கவும் கூடிய வேலைத்திட்டம் வேண்டும். சிங்களப்பெரும்பான்மைத் தேசியவாதம் ஆரிய சிங்களப் மேலாதிக்கவாதமாக முதலாளித்துவ அரசின் கருத்தியலாக மாறியுள்ளது. சிங்கள-பௌத்தர் அல்லாத எல்லாச்சிறுபான்மையினரையும் எதிரியாக இது சித்தரித்துக் காட்டுகிறது. இனவாத வெறுப்பையும் வன் முறையையும் இம் முதலாளித்துவ அரசு தூண்டி வளர்க்கி றது. பொதுபலசேனா, மகாசேனன் படை போன்ற குழுக் கள் முதலாளித்துவ அரசு யந்திரத்தின் கைப்பாவைகளா கச் செயற்படுகின்றன. அரசுக்கும் இக்குழுக்களுக்கும் பிரிக்க முடியாத பிணைப்பு உள்ளது.

### அமைப்பியல் ரீதியான தேவை

இனவாத அரசியல் கருத்தியல் ராஜபக்ஷவின் கண்டு பிடிப்பு அல்ல அடுத்தடுத்து வந்த ஆட்சியாளர்களால் பின்பற்றப்பட்ட ஒன்றிற்கு பலம்கொடுத்தது தான் அவ ரின் கைங்கரியம்,மஹிந்த ராஜபக்ஷ அதனைப் புதிய தொரு மட்டத்திற்கு உயர்த்தியுள்ளார். அவரது ஆட்சியின் நிலைபேறே இந்த இனவாதக் கருத்தியலில் தான் தங்கி யுள்ளது. அரசை இனவாத இராணுவ யந்திரமாகவும் பொய்யையும் ஏமாற்றையும் சிருஷ்டித்து அடக்கு முறையை முன்னர் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு முடுக்கிவிடும் காரியம் நிறைவேறியுள்ளது. முதலாளித் துவ நிலப்பிரபுத்துவ சக்திகளின் கருவியாக பிரித்தானியர் களால் மாற்றப்பட்ட அரசு இன்றுவரை அதன் அடக்கு முறை ஆட்சியைத் தொடருகிறது. இனவாதக் கருத்தியலி ற்கு அமைப்பியல் ரீதியான தேவையுள்ளது. சாதாரண சிங்கள மக்களையல்லாமல் உயர்தட்டு வர்க்கங்கள் உட் பட்ட அனைத்து வகுப்புகளையும் உள்ளடக்கிய பெரும் கூட்டணியை உண்டாக்கி 'தேசிய இணக்கம்' ஒன்றை ராஜ பக்ஷ அரசு கட்டி வளர்க்க முயல்கிறது. போரின் வெற்றி யைக் காட்டி வளர்க்கப்படும் இணக்கம் உண்மைகளை மூடி மறைத்து யதார்த்தத்தை தலை கீழாகப் புரட்டிக் காட் டுகிறது. பயங்கரவாதியை ஜனநாயகவாதியாகவும், அடக் குவோரை அடக்கப்படுவோராகவும் இது சித்தரிக்கிறது. ஏகாதிபத்தியமும் முதலாளித்துவமும் இணைந்து நடத் தும் கருத்தியல் நாடகம் இது. போர் வெற்றியின் சடங்கு கள் காலத்துக்குக் காலம் நடைபெற்று வருகின்றன. இச்ச டங்குகள் இக்கருத்தியலை மக்கள் மத்தியில் பரப்புகின்றன. நாம் எதிர்கொள்ளும் இந்த இனவாத அரசின் சுயரூபத்தை தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

இராணுவ வெற்றியை சிங்கள இனம் தமிழ் இனத்தின் மீது தொடுத்த யுத்தத்தின் வெற்றியாகவும் தமிழ்த்தேசிய இனத்தின் இருப்பை யும், தமிழர்களின் அரசு என்ற எண் ணத்தையும் பூண்டோடு அழித்தொழித்த பெரு நிகழ்வாக வும் இந்த அரசு பிரசாரம் செய்கிறது. இக்கருத்தியலின் அரசியல் சாராம்சம் என்ன என்பதைக் கவனிக்க வேண் டும். இராணுவ ஆக்கிரமிப்பு, இராணுவ வெற்றி, அரசி யல் அடிமைத்தனம் என்பனவே இதன் சாராம்சம் ஆகும். ஒடுக்கப்பட்ட மக்களையும், ஒடுக்கப்பட்ட தேசிய இனங்க ளையும் இக்கருத்தியல் நிரந்தரமான மோதலுக்குள் தள்ளி விடும் நோக்கம் உடையது. இக்கருத்தியல் ஒடுக்கப்பட்ட சிங்கள மக்களிடம் உறைந்துள்ள ஏகாதிபத் திய காலனிய எதிர்ப்புணர்வையும் தனது தீய நோக்கங்களுக்காகத் தவ றான திரிபுபட்ட முறையில் உபயோகப்படுத்துகிறது. ராஜ பக்ஷவின் அரசை பிரிவினைவாதிகள் ஏகாதிபத்தியத்து டனும் அந்நிய முகவர்களுடனும் இணைந்து கவிழ்த்து விடுவதற்குச் சதிசெய்கிறார்கள் என்று சித்தரிக்கப்படுகின் றது. தமிழ்த்தேசிய விடுதலை இயக்கத்தை இவ்விதம் தவ றாகச் சித்தரித்து தனது அதிகாரத்தைப் பலப்படுத்திக் கொள்ள இந்த அரசு முயல்கிறது.

> பிற்போக்குத்தனமான இனவாதக் கருத்தியலை மக்கள் ஏற்றுக் கொள் ளும்படி செய்வதற்காக இராணுவமய மாக்கல் திட்டத்தைச் செயற்படுத்தும் அரசு ஆயுதப் படைகளினதும் பொலிஸினதும் எண்ணிக்கையை கூட்டி பயங்கரவாத சர்வாதிகாரத்தைத் தொடர்கிறது. சிங்கள-பௌத்த இனவாதக் கருத்தியல் இந்த சர்வாதிகாரத்திற்கு துணைபோகும் கருவியாக அமைகிறது தமிழ்த் தேசிய இனத்தை ஆக்கிரமிப்பின் மூலம், அடக்குமுறை யின் மூலம் நிரந்தரமாக அடிபணிய வைக்கும் தந்திரம் இதுவாகும்

### ராஜபக்ஷ அரசின் அரசியல் பொருளாதாரம்

பல்வேறு சமூகக் குழுக்கள் வர்க்கங்கள் ராஜபக்ஷ ஆட் சியின் இனவாதக் கருத்தியலில் ஏன் ஒற்றுமைப்பட வேண் டும்? இவ்வரசு எந்த வொரு சாத்தியமானதுமான மாற்றுக் கருத்தைக் கொண்டதல்ல. அதனால்தான் இக்குழுக்களும் வர்க்கங்களும் மாற்றம் எதையும் கொண்டுவர முடி யாத இந்த அரசுக்கு ஆதரவு கொடுக்கின்றன. 'பிரிவினைவாத பயங்கரவாதத்தை' ஒழித்து சமாதானத்தையும் சுவர்க்கத் தையும் கொண்டு வருவேன் என்று உறுதிகூறும் இந்த அரசு மிக மோசமான முதலாளித்துவ வடிவத்தை இந்நாட் டில் புகுத்தியுள்ளது. ஊழலும், லஞ்சமும் இந்த அரசின் பிரிக்க முடியாத அம்சங்கள். போதைப்பொருள் வாணி பம் கட்டுக் கடங்காமல் செயற்படுகிறது. 'தாய்நாடு, அதன் நிலம், சிங்களவரின் மொழியும் சமயமும்' என்பவற்றைக் காப்போம் என்ற கோஷத்தையும் 'இறைமை, ஜனநாயகம், சுதந்திரம்' என்ற கோஷத்தையும் உரக்கக்கூறிக் கொண்டு சட்ட விரோதமான கொள்ளை வியாபாரம் நடத்தப்படுகி றது.

ராஜபக்ஷ அரசைச் சூழ்ந்து ஏகபோக முதலாளிகள், மத் தியதட்டு முதலாளிகள், உயர்வர்க்கங்கள், உயர் தொழில் வல்லுநர் வகுப்பு, முகாமைத்துவ தொழில்நுட்ப உயர் வகுப்பு என்பனவும் சேவைத்துறைத் தொழிலாளர்களும் பக்கபலமாக நிற்கின்றனர். இவர்களின் சுயநலத்தேவை கள் இவ்வாட்சியால் பூர்த்தி செய்யப்படுகின்றன. ராஜ பக்ஷ அரசின் பிற்போக்குவாத அரசியல் பின்னணியை

நாம் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாட்சியின் கீழ் தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள் ஆகிய உழைக்கும் வர்க்கங்கள் அடக்கி ஒடுக்கப்படுகின்றன. பயப்பீதியினால் அவை செயலிழந்துள்ளன. அவற்றிடம் முறையான தலைமையும் ஒழுங்கமைப்பும் இல்லை. ஆட்களைக் கடத்திக் கொலை செய்தல், கட்டுப்பாட்டின் கீழ் உள்ளவர்களைக் கொண்டு நடத்தும் கும்பல் வன்முறை, வன்முறையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்காதுவிடும் பாராமுக நடவடிக்கை என் பன காரணமாக பயங்கரவாதத்தின் பிடியில் நாடு சிக்கியுள்ளது. இப்பயங்கரவாதச் சூழலில் ஊழலும் லஞ்சமும் கொள்ளையும் தொடர்கின்றன.

### இராணுவ மயமாக்கல்

பிற்போக்குத்தனமான இனவாதக் கருத்தியலை மக்களை ஏற்றுக்கொள்ளும்படி செய்வதற்காக இராணுவமயமாக்கல் திட்டத்தை அரசு செயற்படுத்துகிறது. ஆயுதப்படைகளினதும் பொலிஸினதும் எண்ணிக்கையைக் கூட்டி பயங்கரவாதச் சர்வாதிகாரத்தைத் தொடர்கிறது. சிங்கள - பௌத்த இனவாதக் கருத்தியல் இந்த சர்வாதிகாரத்திற்குத் துணைபோகும் கருவியாக அமைகிறது. தமிழ்த்தேசிய இனத்தினை ஆக்கிரமிப்பின் மூலமும் அடக்குமுறையின் மூலமும் நிரந்தரமாக அடிபணிய வைக்கும் தந்திரம் இதுவாகும். இலங்கையின் நிலமானிய முதலாளித்துவ அரசு தமிழ்த்தேசிய இனத்தின் தலைவிதியை இவ்விதம் பிணைத்து வைத்திருப்பதன் காரணமாக தமிழ்த்தேசியத்தின் விடுதலையும் இலங்கையின் எதிர்காலப் புரட்சியுடன் பிரிக்க முடியாதபடி தொடர்புபட்டுள்ளது.

### இராணுவ ஆக்கிரமிப்பும் அரசியல் அடிமைத்தனமும்

தமிழ்த்தேசிய இனத்தின் அரசியல் அந்தஸ்தை முற்றாக நிராகரிக்கும் தந்திரம் அதன் மீது நிரந்தரமாக பிரகடனப் படுத்தப்படாத யுத்தம் ஒன்றைத் தொடர்வது தான். இலங்கையின் இராணுவமயப்படுத்தப்பட்டதும், தீவிரமான அளவில் மத்தியப்படுத்தப்பட்டதும் அரசியல் மயப் படுத்தப்பட்டதுமான அரசு யந்திரமும் அரசுக் கட்டமைப்பும் தமிழ்த்தேசியத்தை அடிமை நிலையில் வைத்திருக்க உபயோகிக்கப்படுகிறது. தமிழ்த்தேசியத்தின் அரசியல் அந்தஸ்தை ஒழிப்பது ராஜபக்ஷ அரசின் நீடித்த வாழ்வுக்கு அவசியமானது. இந்த அரசு ஏகாதிபத்தியத்துடனும், பிராந்திய வல்லரசுகளுடனும் சேர்ந்து தமிழ்த்தேசியத்தை அழிப்பதற்கான கபட நாடகத்தைத் தொடர் ந்து நடத்தும். ராஜபக்ஷ இலங்கையில் செயற்படுத்தும் அரசு மாதிரி உலகெங்கிலும் செயற்படுத்தப்படும் நவகாலனிய அரசு மாதிரியே அன்றி வேறன்று. இந்த அரசு மாதிரி மக்களை ஏமாற்றவும், அவர்களைப் பிரித்தாளவும், பயங்கரவாத அடக்குமுறையைத் திணிக்கவும் ஏற்றது. அத்தோடு நவதாராளவாத அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலைத் தொடர்வதற்கும் மிகவும் வாய்ப்பானது.

> தமிழ்த் தேசியத்தின் எதிர்காலம் இலங்கையின் முழு மக்களினதும் எதிர்காலத்துடன் பின்னிப்பிணைந்துள்ளது. தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை முழு இலங்கை மக்களினதும் விடுதலையிலிருந்தும் பிரிக்க முடியாதது. நாம் எல்லோரும் சுதந்திரம் பெற்றவர்களாவோம் அல்லது யாவரும் ஒன்றாக அடிமைத்தனத்தில் வீழ்வோம்

### விடுதலைப் புலிகளின் தோல்வியும் தலைமைத்துவ நெருக்கடியும்

இனவாத, இராணுவ அரசின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகத் தமது வாழ்க்கையையும் உரிமைகளையும் பாதுகாத்துக்கொள்வதற்கு ஒடுக்கப்படும் தமிழ் மக்களுக்கு இன்று தலைமைத்துவம் இல்லை. விடுதலைப் புலிகளின் தோல்வியின் பின்னர் இத்தலைமைத்துவ வெற்றிடம் ஆக்கிரமிப்புக்கு வாய்ப்பாகியுள்ளது. தமிழ் மக்களில் பெரும்பான்மையினரான உழைக்கும் மக்களும் தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், பெண்கள், இளைஞர்கள், முதியோர் ஆகியோரும் தலைமைத்துவம் இன்மையால் செயலற்றவர்களாய் உள்ளனர். இந்த அடித்தள மக்கள் தமது சுயகௌரவத்தையும் சுதந்திரத்தையும் இழந்து நிற்கிறார்கள். அவர்களது நிலமும் வாழ்வாதாரமும் பறிக்கப்படுகிறது. இராணுவ அதிகாரிகள், அமைச்சர்கள் அரசின் ஒட்டுண்ணிப் படைகள் என்ற வகையினரின் முன்னால் மண்டியிட வேண்டிய நிலையில் அவர்கள் உள்ளனர். நவபாசிச அரசு யந்திரத்தின் கட்டுப்பாடும் அடக்கு முறையும் தமிழ் மக்கள் மீது தொடர்கிறது.

### இயக்கத்தினைக் கொண்டியக்கும் பொறுப்பை ஏற்றல்

உண்மை எதிரியின் இயல்பு யாது என்பது பற்றிய விஞ்ஞான முறையிலான விமர்சனமும் பகுப்பாய்வும் இன்றைய அவசியத் தேவையாகும். ஏகாதிபத்திய நவகாலனிய ஆதிக்கத்தை வேரோடு அழிப்பதற்கான போராட்டம் உண்மையான எதிரியின் இயல்பு பற்றிய புரிதலினாலேயே சாத்தியமாகும். மக்கள் தமது ஒற்றுமை மூலம் சுயகௌரவம், சமத்துவம், சுயாதிபத்தியம், ஜனநாயகச் சுதந்திரம் என்பனவற்றை நிலை நிறுத்த இப்புரிதலின் வழியான செயற்பாடுகளே வழிவகுக்கும். சிங்கள இளைஞர்களின் இரு கிளர்ச்சிகளும், தமிழ் மக்களின் ஒரு போராட்டமும் இராணுவ ரீதியாக அழித்தொழிக்கப்பட்டன.

*(52ஆம் பக்கம் பார்க்க...)*

உள்நாட்டு அரசியல்



கலாநிதி ஜெஹான் பெரேரா



புலம்பெயர் தமிழர்களை அலட்சியம் செய்ய முடியும் என்று அல்லது அரசாங்கத்தின் எதிர் பிரசாரங்களினால் அவர்களை மௌனமாக்கிவிட முடியும் என்று நினைத்தால் அது புத்திசாலித் தனமான காரியமாக இருக்காது.

# இலங்கை அரசும் புலம்பெயர் தமிழ்ச்சமூகமும்

போர்க்குற்ற விவகாரம் தொடர்பில் சர்வதேச அரங்கில் இலங்கையை மேலும் மேலும் நெருக்கடிக்குள்ளாக்குவதற்கு புலம் பெயர் தமிழ்ச் சமூகத்தினால் மேற் கொள்ளப்படுகின்ற முயற்சிகள் தினமும் தொடர்ச்சியாக ஊடகங்களில் முக்கியமான இடத்தைப்பிடிக்கின்றன. தற்போது புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் பெரிய பிரிவினர் இலங்கையில் இருந்து முற்று முழுதாக அந்நியப்படுத்தப்பட்டு இருப்பதுடன் அரசாங்கத்துக்கு எதிரானவர்களாகவும் விளங்குகின்றனர். இலங்கை அரசாங்கம் சிங்களப் பெரும்பான்மையினத்தின் நலன்களை மேம்படுத்துவதில் மாத்திரம் அக்கறை கொண்டிருக்கிறதேயன்றி, சிறுபான்மை இனங்களின் கதி பற்றி கவலைப்படுவதேயில்லை என்று அவர்கள் கருதுகிறார்கள். கனடிய எம்.பி.யான ராதிகா சிற்சபேசன் அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின் விளைவான சர்ச்சை நாட்டுக்குள் கடுமையான உணர்வுகள் கிளறிவிடப்பட்ட இன்னொரு சம்பவமாக அமைந்தது.

மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் நாட்டைவிட்டு வெளியேறத் தொடங்கியதிலிருந்து புலம்பெயர் தமிழர்கள் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான உணர்வு நிலையிலேயே இருந்து வருகிறார்கள். ஆரோக்கியமான முறையில் ஊடாட்டத்தைச் செய்வதற்கு இருதரப்பினரும் எந்த முயற்சியையும் எடுக்கவில்லை. நாட்டுப் பிரிவினைக்காக விடுதலைப் புலிகள் நடத்திய ஆயுதப் போராட்டத்தை ஆதரித்து வந்த புலம்பெயர் தமிழர்கள் அந்தப் போராட்டம் இறுதியில் வெற்றிபெறும் என்று நம்பிக்கை கொண்டிருந்ததே அதற்கு பிரதான காரணமாகும். தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆட்சி செய்து அபிவிருத்



திகளை மேற்கொண்டு பாதுகாப்புடன் வாழக்கூடிய தமிழ்த்தாயகமொன்று பற்றிய வனப்பான நோக்கை ஆதரிக்கும் அடிமூலமாக புலம்பெயர் தமிழ்ச் சமூகம் மாறியது. இலங்கையின் அறிவு ஜீவி மற்றும் சமூக உயர்மட்ட பிரிவினரில் ஒரு பகுதியினராக முன்னர் விளங்கிய புலம்பெயர் தமிழ்ச்சமூகம் தமிழீழம் என்ற கருத்துருவத்தை ஆதரிப்பவர்களாக இருந்து வருகிறார்கள். அத்துடன் பிரிவினைக்கான போராட்டத்தில் முன்னணியில் நின்ற விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளித்த பிரதான தளமாகவும் அவர்கள் விளங்கினார்கள்.

இலங்கை அரசாங்கமும் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தினரும் பரஸ்பரம் தாங்கள் எதிரிகள் என்ற எண்ணத்தை வளர்த்து வலுப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். வெளிநாடுகளில் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் தலைவர்கள் தங்களது சமூகத்தில் பொருத்தமான ஒரு பாத்திரத்தைத் தொடர்ந்து வகிக்கக் கூடியதாக இருக்கிறது. இதனால் அவர்களால் தங்கள் நாடுகளில் பரந்தளவு சமூகத்திடம் தங்களது கருத்துகளை எடுத்துச் செல்ல முடிகிறது. சுதந்திரமான தமிழீழ அரசொன்றைக் காண முடியுமென்ற நம்பிக்கையைக் கொடுப்பதற்கு ஒரு இராணுவ வல்லமை கொண்ட சக்தியாக விடுதலைப் புலிகள் தற்போது இல்லை. ஆனால், இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக போர்க்குற்றங்கள் தொடர்பில் குற்றச்சாட்டுகளைக் கொண்டுவருவதில் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தினருக்கு இருக்கின்ற மனவுறுதி ஒரு நோக்கத்துக்காக தொடர்ச்சியாகச் செயற்படக்கூடிய சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறது. அதேவேளை, தேசிய பாதுகாப்பு அக்கறைகளைக் காரணங்காட்டி ஜனநாயக சுதந்திரங்கள் மீது இலங்கையில் விதிக்கப்படுகின்ற கட்டுப்பாடுகளை நியாயப்படுத்துவதற்கு (இந்த புலம்பெயர் தமிழர்களினால் தோற்றுவிக்கப்படுகின்ற) சர்வதேச அச்சுறுத்தலை அரசாங்கத்தினால் பயன்படுத்தக் கூடியதாக இருக்கிறது.

போர்க்குற்றங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கும் புலம்பெயர் தமிழ்ச்சமூகத்துக்கும் இடையே இழுபறி தொடர்ந்து கொண்டிருக்கின்ற அதேவேளை, முன்னாள் போர் வலயங்களில் பாதிக்கப்பட்ட மக்களின் துன்ப துயரங்கள் இவ்விருதரப்பினரில் எவரினதும் முறையான கவ

னத்தைப் பெறு வதாக இல்லை என்பது துரதிர்ஷ்டவசமானது. இலங்கை அரசாங்கத்தை சர்வதேச நீதியின் முன்னிறுத்துவதற்கான முயற்சிகளுக்கு புலம்பெயர் தமிழ்ச்சமூகம் செலவிடுகின்ற சக்தியை போரினால் பாதிக்கப்பட்டு வழமை வாழ்வுக்குத் திரும்புவதற்கு பெரும் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்ற மக்களின் கஷ்டங்களைத் தணிப்பதில், அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் செலவிடுவதாக இல்லை. இன்று குறிப்பாக வன்னியிலும் கிழக்கு மாவட்டங்களிலும் மிகவும் நலிந்த, ஓரங்கட்டப்பட்ட மக்கள் பிரிவினர் இருக்கிறார்கள். இவர்களுக்கு கிரமமாகப் பொருளாதார உதவிகளைச் செய்வதற்கு குடும்பத்தவர்களோ அல்லது உறவினர்களோ வெளிநாடுகளில் இல்லை. கொழும்பில் அல்லது யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற தமிழர்களின் குடும்ப உறுப்பினர்களும் உறவினர்களும் பெரும் எண்ணிக்கையில் வெளிநாடுகளில் வாழ்கிறார்கள். வன்னியிலும் கிழக்கிலும் இந்த நலிந்த பிரிவினரில் பெரும்பாலானோருக்கு தனிப்பட்ட வளங்கள் எதுவும் இல்லையென்பதால் அரசாங்கத்தின் அல்லது தொண்டர் அமைப்புகளின் உதவிகளே அவர்களுக்குத் தேவைப்படுகிறது. இப்போது அரசாங்கத்திடமிருந்து கிடைக்கின்ற உதவிகள் மிக மிகச் சொற்பமே. போரினால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களின் வாழ்வை மீளக் கட்டியெழுப்புவதற்கு கூடுதலான உதவி தேவைப்படுகிறது. ஆனால், போர் முடிவுக்கு வந்து இன்னும் சிலமாதங்களில் ஐந்து வருடங்கள் பூர்த்தியடையப் போகின்ற நிலையிலும், அவர்கள் தொடர்ந்தும் நிர்க்கதியான நிலையிலேயே இருக்கிறார்கள்.



**அரசாங்கம் புலம்பெயர் தமிழர்களைக் கவர்வதற்கு முதலில் எடுத்து வைக்க வேண்டிய முக்கியமான அடி இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுப்பதேயாகும். புலம்பெயர் தமிழர்களுடன் ஆக்கபூர்வமான முறையில் ஊடாட்டங்களைச்செய்வது என்பது பொருளாதாரக் காரணங்களுக்காகவும் கூட முக்கியமானதாகும்**

கடந்த டிசம்பரில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளர் ஷலோக்யா பெயானி வடமாகாணத்தில் அதிகரித்த வகையில் உணவுப் பாதுகாப்பின்மை நிலவுவதாகவும் மக்கள் கடனாளிகளாக கஷ்டப்படுவதாகவும் குறிப்பிட்டிருந்தார். இடம்பெயர்ந்த மக்களும் மீள்குடியேற்றப்பட்ட மக்களும் தொடர்ந்தும் பாதிப்புக்குள்ளாகக் கூடிய நிலையிலேயே இருப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார். உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களில் கணிசமான எண்ணிக்கையானவர்கள் தொடர்ந்தும் அவலப்படுவதாகவும் சொந்த இடங்களுக்குத் திரும்பியவர்கள் அல்லது வடக்கில் வேறு எங்காவது மீள் குடியேற்றப்பட்டவர்களின் நிலைமை இடர்மிகுந்ததாக இருக்கிறது. அவர்களுக்கு நிலைபேறான வீட்டு வசதிகள் தேவைப்படுகின்றன. சமூக சேவைகளும் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். வாழ்வாதாரத்துக்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறியிருந்தார். அத்துடன் அவர் இனங்கண்ட முக்கிய பிரச்சினைகளில் பெண்களினதும் சிறுமிகளினதும் உடல் ரீதியான கண்ணியத்துக்கும் அவர்களின் இனவிருத்தி உரிமைக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டிய அவசியமும் அடங்குகிறது. இவையெல்லாம் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சினைகளாகும்.

அண்மைக்காலங்களில் இலங்கை அரசாங்கம் சிறந்த ரக சர்வதேச விளம்பரக் கம்பனிகளை பணிக்கமர்த்தியதன் மூலம் சர்வதேச சமூகத்தில் தன்னை நியாயப்படுத்தும் காரியங்களைச்செய்ய முயற்சித்திருக்கிறது. ஊடகத்துறையிலும் விளம்பரம் மற்றும் ஆதரவுதேடும் பிரசாரச் செயற்பாடுகளிலும் அரசாங்கம் பெருமளவுக்கு முதலீடுகளைச் செய்திருக்கி றது. இந்த விளம்பரக் கம்பனிகளினால் இலங்கையைப் பற்றி நல்லதொரு தோற்றப்பாட்டைக் காண்பிக்கக்கூடியது சாத்தியமாகியிருக்கக் கூடும். அவற்றுக்கு அந்தத்துறையில்

நிபுணத்துவம் உள்ளது. சர்வதேச விளம்பரக் கம்பனிகளினால் காட்டப்பட்ட தோற்றப்பாடு உண்மையில் சரியானது என்று சர்வதேச சமூகத்தின் சில பிரிவினரை நம்பச் செய்வதும் சாத்தியமாகியிருக்கக்கூடும். ஆனால், சர்வதேச விளம்பரக் கம்பனியொன்றினால் செய்யப்பட்டிருக்கக்கூடிய எந்தளவு மேல் மினுக்கலினாலும் இலங்கைக்குள் வாழ்கின்ற தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற யதார்த்த நிலையை மாற்ற முடியாது.


எனவே அரசாங்கம் புலம்பெயர் தமிழர்களைக் கவருவதற்கு முதலில் எடுத்து வைக்க வேண்டிய முக்கியமான அடி இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுப்பதேயாகும். ஐ.நா. விசேட அறிக்கையாளர் பெயானி கூறியதைப் போன்று இடம் பெயர்ந்த மக்களினால் எதிர்நோக்கப்படுகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வகுக்கும் நோக்கில் அவர்களுடன் அர்த்தமுடைய கலந்தாலோசனைகள் நடத்தப்பட வேண்டும். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகள் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மீளக்குடியமர்த்தப்பட்டவர்களும் தொடர்ந்தும் இடம்பெயர்ந்தே வாழ்பவர்களும் தங்களது உடைமை உரிமைகளை செயற்படுத்துவதற்கு உகந்த சூழ்நிலையே உருவாக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்களை அறியவும் சட்ட உதவிச் சேவைகளை நாடவும் குடும்பத்தவர்களுக்கும் உறவினர்களுக்கும் வாய்ப்பு இருக்கக்கூடிய சூழ்நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும். இந்தக்காரியங்கள் மான சீகமான அக்கறையுடன் முன் னெடுக்கப்படுமாயிருந்தால் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்துடன் ஊடாட்டங்களைச்செய்வதற்கு பல்வேறுபட்ட வழிகளில் வாய்ப்புகள் ஏற்படும்.

புதிய வருடத்தில் அரசாங்கம் முன்னெடுக்க வேண்டிய முக்கியமான பணிகளில் ஒன்று புலம்பெயர் தமிழர் சமூகத்துடன் ஊடாட்டங்களை ஆரம்பித்து அவர்களை பங்காளிகள் ஆக்குவதாகும். புலம்பெயர் தமிழர்களை அலட்சியம் செய்ய முடியுமென்று அல்லது அரசாங்கத்தின் எதிர்ப்பிரசாரங்களினால் அவர்களை மௌனமாக்கிவிட முடியுமென்று நினைத்தால் அது புத்திசாலித்தனமான காரியமாக இருக்காது. அவர்கள் இலங்கையில் இருந்து தொலைவில் வாழ்ந்தாலும் கூட, நவீன தொழில்நுட்பம் இலங்கையில் அவர்களின் மெய்யான பிரசன்னத்தை இயலுமாக்குகிறது. அவர்கள் தங்களது அபிப்பிராயங்கள் ஊடாக, நிதிப்பலம் ஊடாக இலங்கைத் தமிழர்களின் சிந்தனையில் செல்வாக்கைச் செலுத்த முடியும். புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் உள்ள தங்கள் உறவுகளுக்கு தொடர்ச்சியாகப் பணம் அனுப்பி உதவிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் வாழுகின்ற நாடுகளில் பல தசாப்த காலமாக கட்டியெழுப்பிய தொடர்புகளும் வலையமைப்புகளும் காரணமாக, அங்குள்ள அரசியல்வாதிகளையும் ஊடகங்களையும் கருத்துகளை உருவாக்கும் தலைவர்களையும் இலங்கைக்கு பாதகமான முறையிலோ அல்லது அனுகூலமான முறையிலோ தங்கள் செல்வாக்கிற்குட்படுத்தக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

புலம்பெயர் தமிழர்களுடன் ஆக்கபூர்வமான முறையில் ஊடாட்டங்களைச் செய்வதென்பது பொருளாதாரக் காரணங்களுக்காகவும் கூட மிகவும் முக்கியமானதாகும். ஐக்கியப்பட்டதும் சுபிட்சமானதுமான ஒரு நாடு என்ற வகையில் இலங்கையின் எதிர்காலத்துக்கு பொருளாதார அபிவிருத்தியே முக்கியமானது என்று நம்புகின்ற அரசாங்கம் தற்போது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு கடுமையாக முயற்சி மேற்கொண்டு வருகிறது. ஆனால், அரசாங்கத்தின் சொந்த முதலீடுகளுக்கு துணை நிறைவாக அமையக்கூடிய வெளிநாட்டு முதலீடுகள் துரிதமாக வருவதாக இல்லை. இலங்கையின் பங்குச் சந்தையிலும் தொழில் முயற்சிகளிலும் புலம்பெயர் தமிழர்கள் முதலீடுகளைச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இன்னமும் அது சித்திக்கவில்லை. புலம்பெயர் தமிழர்களின் செல்வத்தில் ஒரு பகுதியாவது இலங்கையில் முதலீடு செய்யப்படுமானால், அதுவே வெளிநாட்டு முதலீட்டுச் செயன்முறைகளுக்கு பெரும் ஊக்குவிப்பாக அமைய முடியும்.

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வலுவூட்டுவதற்கான முக்கியமான பொருளாதார மற்றும் மனிதவள ஆதாரங்களாகவும் புலம்பெயர் தமிழர் சமூகம் இருக்க முடியும். அவர்களிடம் வளங்களும் செயல்நோக்கமும் இருக்கிறது. ஆனால், அவர்களை பெருமளவில் அணி திரட்டிச் செயலில் இறக்குவதற்கு அவர்களுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையேயான பகைமை முடிவுக்குவர வேண்டியது அவசியமாகும். எல்லை வரையறை தெரியக்கூடிய எதிர்காலத்தில் இப்பகைமை முடிவுக்கு வருமா என்ற கேள்வி எழுகிறது. மறுபுறத்தில் போரினால் பாதிக்கப்பட்டவர்களைப் பொறுத்தவரை புலம் பெயர் தமிழ்ச் சமூகத்தின் சிறியளவிலான உதவி கூட பயனுறுதியுடையதாகவே இருக்கும். இருதரப்பிலும் இருக்கக்கூடிய பரந்த மனப்பான்மையுடையவர்கள் அதைப் பயன்படுத்த வேண்டியது அவசியமாகும். ■

உள்நாட்டு அரசியல்





குசல் பெரேரா

# ஜெனீவாவும் அரசாங்கமும்

நாலரை வருடங்கள் வீணாக்கப்பட்டு விட்டன. போர்க்குற்றங்களுக்காக சர்வதேச நீதிமன்றம் ஒன்றில் ராஜபக்ஷ ஆட்சியை நிறுத்தும் நோக்குடனான தங்களின் செயற்பாடுகளை புலம்பெயர் தமிழர்களும் மனித உரிமைகள் ஆர்வலர்களும் முடிவுக்குக் கொண்டுவரும் வரை இன்னும் எவ்வளவு காலத்திற்கு இலங்கையில் உள்ள தமிழர்கள் ராஜபக்ஷாக்களின் கீழ் இராணுவக்கட்டுப்பாட்டில் வேதனைகளை அனுபவிக்க வேண்டியிருக்குமோ?


ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடருக்கு முகங்கொடுப்பதற்கான ஏற்பாடுகளில் இலங்கை அரசாங்கம் தீவிரமாக இறங்கியிருக்கிறது. பத்திரிகைகளில் எல்லாம் அதைப் பற்றித்தான் செய்திகள். ஒருவருடத்துக்கு முன்னர் 2013 மார்ச்சில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்குப் பிறகு முன்னெடுக்கப்பட்டிருக்கக் கூடிய நடவடிக்கைகள் குறித்து ஆராய மனித உரிமைகள் பேரவையின் 25ஆவது கூட்டத்தொடர் இன்னும் இருமாதங்களில் இடம்பெறவிருக்கிறது. 2009 மேயில் இராணுவ மோதல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதற்குப் பின்னரான நாலரை வருட காலத்தில் புலம் பெயர் தமிழர்கள் மத்தியில் உள்ள குழுக்களும் மனித உரிமைகள் ஆர்வலர்களும் கிரமமாக ஜெனீவாவுக்கு மேற்கொண்ட விஜயங்களின் விளைவாக மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் இரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இவ்விரு தீர்மானங்களையும் நிறைவேற்றுவதற்காக இரு டசின் வாக்குகளைத் திரட்டுவதற்கு புலம் பெயர் தமிழர் அமைப்புகளும் மனித உரிமைகள் அமைப்புகளும் ஆர்வலர்களும் நாலரை வருடங்களாக அயராது பாடுபட்டுக் கொண்டிருந்த வேளையில், முழு யாழ்ப்பாணமும் வன்னியும் கிழக்கும் தொடர்ந்து இராணுவத்தின் இறுக்கமான கட்டுப்பாட்டின் கீழேயே இருந்துவந்தன. கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு எந்தச் சலுகையும் காட்டப்படவில்லை. போர்க்குற்றங்கள், போருடன் தொடர்புடைய பதில் கூறும் கடப்பாடு, போருக்குப் பின்னரான நல்லிணக்கம் மற்றும் தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய அரசியல் தீர்வு ஆகியவை குறித்து ராஜபக்ஷ ஆட்சிக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்ந்தும் எந்தவித தளர்வுமின்றி உறுதியானவையாகவே இருந்து வருகின்றன.

நாலரை வருடங்கள் இப்போது விரயமாக்கப்பட்டுவிட்டன. போர்க் குற்றங்களுக்காகவும் பதில் கூறும் கடப்பாட்டுக்காகவும் சர்வதேச நீதிமன்றமொன்றில் ராஜபக்ஷ ஆட்சியை நிறுத்தும் நோக்குடனான தங்களின் செயற்பாடுகளை புலம்பெயர் தமிழர்களும் மனித உரிமைகள் ஆர்வலர்களும் முடிவுக்குக் கொண்டு வரும் வரை, இன்னும் எவ்வளவு காலத்துக்கு இலங்கையில் உள்ள தமிழர்கள் ராஜபக்ஷாக்களின் கீழ் இராணுவக் கட்டுப்பாட்டில் வேதனைகளை அனுபவிக்க வேண்டியிருக்

குமோ? போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் தமிழர்களுக்கு எதிர் வரும் மார்ச்சில் கூடவிருக்கும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத்தொடர் எத்தகைய ஆறுதலை, நம்பிக்கையைக் கொடுக்கும்? உலகத் தமிழர் பேரவை (Global Tamil Forum) ஜனவரி 3ஆம் திகதி அறிக்கையொன்றை விடுத்திருந்தது. 'உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை அமைக்கப் போவதாகக் கூறி சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கு ஜனாதிபதி ராஜபக்ஷவின் ஆட்சிக்கு 2014 மார்ச் ஜெனீவா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் மேலும் அவகாசம் வழங்கப்படக்கூடாது' என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி ராஜபக்ஷவின் ஆட்சிக்கு மேலும் அவகாசம் வழங்கப்படக்கூடாது என்று கூறுவதன் மூலம் உலகத் தமிழர் பேரவையின் சுரேன் சுரேந்திரன் என்ன அர்த்தத்தைக் கற்பிக்க முயற்சிக்கின்றார்? கடந்த நாலரை வருடங்களாக சர்வதேச சமூகத்தினால் இந்த ஆட்சிக்கு அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தானே? உலகச் சந்தையில் ஆயுதங்கள் மற்றும் இராணுவத்தள பாடங்கள் வியாபாரத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் சர்வதேச சமூகத்தின் முன்னணி வல்லாதிக்க நாடுகள் இவ்வாறு அவகாசம் வழங்குவதைத் தவிர வேறு வழியில்லை. அந்த நாடுகளின் வியாபாரத்தையும் இலாபத்தையும் தான் மனித உரிமைகள் ஆர்வலர்களும் புலம் பெயர் தமிழர்களும் பேரத்துக்கு உட்படுத்துகிறார்கள். அந்த நாடுகள் அவற்றின் போலி ஜனநாயகப் பெருமைகளைப் பற்றி பேசிக் கொள்வதற்காகவே போரின் அனர்த்தங்கள் பற்றி அக்கறை காட்டுவதாக நடந்துகொள்கின்றன. 2014 செப்டெம்பர் வரை ஒரு 6 மாத கால அவகாசம் ராஜபக்ஷ ஆட்சிக்கு கொடுக்கப்படும். பிறகு 2015 மார்ச் வரையும் இன்னொரு அவகாசமும் கொடுக்கப்படும். பதில் கூறும் கடப்பாடு, குற்றங்கள், விசாரணைகள் என்ற சொற்பதங்களுடன் அடுத்த வருடமும் ஒரு தீர்மானம் ஜெனீவாவில் வரும் என்று நிச்சயமாக எதிர் பார்க்கலாம்.



போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அவர்களின் வாழ்வை கட்டியெழுப்பி தலை நிமிர்ந்து நிற்பதற்கு உருப்படியான நடவடிக்கைகளே தேவை. வட மாகாண சபைத் தேர்தலில் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தினால் பெரிதும் விரும்பப்படாத முதலமைச்சருக்கு தமிழ் மக்கள் பேராதரவை அளித்தார்கள். தமக்குத் தேவையானது எது என்பதை அதன்மூலம் அவர்கள் வெளிக்காட்டினார்கள்

ஜெனீவாவிற்குப் போவதும் ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர்களைப் பற்றி பரபரப்புக் காட்டுவதும் மாத்திரமே இலங்கையில் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வைக் கொண்டுவந்து விடுமா என்ற விவகாரத்தைப் பொறுத்தவரையில் நாம் நேர்மையாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஊழல்த்தனமானதும் குற்றப்பழியுடையதுமான மேற்குலக வல்லாதிக்க நாடுகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் மனித உரிமைகள் பேரவையிடம் இருந்து பெரிதாக எதையும் எதிர்பார்க்க முடியாது. 2014 செப்டெம்பர் வரை அந்தப் பேரவையில் உயர்ஸ்தானிகர் நவிபிள்ளை பெரும் போராட்டங்களை நடத்த வேண்டியிருக்கிறது. இந்த வல்லாதிக்க நாடுகள் அவற்றின் ஆயுதத் தொழிற்சாலைகளை உலகப்பொருளாதார ஒழுங்கையும் நடத்துவதற்கு அவற்றிற்கு ஆயுத மோதல்கள் தேவைப்படுகின்றன. இதனால், இந்த நாடுகள் ருவாண்டாவில், பொஸ்னியாவில், சூடானில், மியன்மாரில், காசாவில், ஈராக்கில் அல்லது ஆப்கானிஸ்தானில் முன்னர் எதையும் செய்துவிடவில்லை. ஆயிரக் கணக்கில் சிறுவர்கள் உட்பட குடிமக்கள் கொல்லப்பட்டுக்கொண்டிருக்கின்ற சிரியாவில் என்ன செய்வதென்பது குறித்து இந்த வல்லாதிக்க நாடுகள் வாதித்துக் கொண்டிருக்கின்றன, யோசித்துக்கொண்டிருக்கின்றன. ஆனால், ஏதாவதொரு நாடு புதிதாக அணுவாயுதங்களைத் தயாரித்துக்கொண்டால் உடனடியாகவே அதற்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானித்து விடுகின்றன. தங்களிடம் மாத்திரமே சகல அணுவாயுதங்களும் இருக்கவேண்டும் என்று இவை இறுமாப்பாக நினைத்துக்கொள்கின்றன.

சர்வதேச சமூகம் குற்றச்செயல்களுக்காக தலைவர்களைத் தண்டிக்க நடவடிக்கை எடுக்கவில்லையென்று இல்லை. ஐரோப்பிய ஒன்றியத்திற்கோ, வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள் அமைப்புக்கோ (நேட்டோ) மற்றும் பெரிய வல்லாதிக்க நாடுகளுக்கோ அனுகூலமாக அமையுமென்றால் தலைவர்களைத் தண்டிக்க அவை நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றன. இவ்வாறாக தண்டனைக் குட்படுத்தப்பட்ட தலைவர்களின்

பெயர்கள் அடங்கிய குறுகிய பட்டிய லில் முக்கியமானவர் சிலோபோடன் மிலோசெவிக். காலம் தாமதித்து மிலோ செவிக்கிற்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை பொஸ்னியாவிலும் ஹெர்சோ கோவினாவிலும் உள்ள மக்கள் கண்ணியமானதும் அமைதியுமானதுமான வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு உதவவில்லை. பொஸ்னியாவிற்கான அமெரிக்க உதவிகள் குறைவடைந்தது மாத்திரமல்ல அதிமுக்கியத்துவம் வாய்ந்த டேய்ரன் சமாதான உடன்படிக்கை மதிக்கப்பட்டு முரண்நிலையில் உள்ள இனங்களுக்கிடையில் அரசியல் உறுதிப்பாடு ஏற்படுத்தப்படவும் இல்லை. இந்தச் சமாதான உடன்படிக்கையைக் கண்காணிப்பதற்கென உருவாக்கப்பட்ட உயர் பிரதிநிதித்துவ அலுவலக த்தையும் (Office of High Representation) இந்த வல்லாதிக்க நாடுகள் கைவிட்டுவிட்டன.

பிரச்சினைகளைத்தட்டிக்கழிக்க வேண்டியிருக்கும் போது இந்த வல்லாதிக்க நாடுகளும் அவற்றின் தலைவர்களும் வெவ்வேறு நேரங்களில் வெவ்வேறு அரங்குகளைப் பற்றிப் பேசுகிறார்கள். இலங்கையைப்பொறுத்தவரை அது பொதுநலவாய உச்சிமகாநாடாக அமைந்தது. பொதுநலவாயத்தின் பிரதான நாடான பிரிட்டனின் பிரதமர் டேவிட் கமரூன் எவ்வாறு நடந்து கொண்டார் என்பது எல்லோருக்கும் தெரியும். உச்சி மகாநாட்டைப் பகிஷ்கரிக்க மறுத்த அவர் அந்த மகாநாட்டில் இலங்கையின் போர்க் குற்றங்கள் மற்றும் பொறுப்புடைமையுடன் தொடர்புடைய பிரச்சினைகளை கிளப்பப்போவதாக உறுதியளித்தார். ஆனால், லண்டனில் உறுதியளித்ததன் பிரகாரம் அவர் உச்சிமகாநாட்டில் மனித உரிமைப் பிரச்சினைகளைக் கிளப்பவில்லை. பொறுப்புள்ள ஒரு தலைவராக அவர் நடந்துகொள்ளவில்லை. பதிலாக கமரூன் அங்குமிங்கும் அலைந்து கமராக்களுக்கு புன்னகைத்து ஆட்களைச் சந்தித்தார். அவ்வளவு தான்.

அவரால் வேறு எதைச் செய்திருக்க முடியும்? கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய தொழிலதிபர்கள் உச்சிமகாநாட்டில் கலந்து கொண்டவர்களின் விருப்பத்திற்கேற்ப கமரூன் நடந்து கொள்ள வேண்டியிருந்தது. ஏனென்றால், அவரது கன்சர்வேட்டிவ் கட்சிக்கு நிதியுதவி அளிப்பவர்கள் அவர்கள் தான். அந்தத் தொழிலதிபர்கள் ராஜபக்ஷ ஆட்சி விரும்பிய முதலீடுகளைப் பற்றிப் பேசினார்கள். அந்த மகாநாட்டில் பிரிட்டனைச் சேர்ந்த 100க்கும் அதிகமான தொழிலதிபர்கள் கலந்துகொண்டார்கள். பிரிட்டிஷ் வர்த்தகத் துறையினரின் நலன்களுக்கு எதிராக கமரூனால் செயற்பட முடியவில்லை. இந்த ஏமாற்று வேலையை அமெரிக்கர்கள் மிகவும் கூடுதலான அளவிற்கு திறமையாகச் செய்வார்கள். எனவே உலகத் தமிழர் பேரவை எது நடக்கவேண்டும் என்று விரும்புகின்றதோ அதற்கெதிராக எதிர் வரும் மார்ச் மாதத்தில் அமெரிக்கர்கள் நிச்சயமாக நடந்துகொள்வார்கள். முடிவில்லாமல் தொடரும் இந்த ஜெனீவா சர்க்கஸ் இலங்கையில் உள்ள தமிழ் மக்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கவே செய்யும். அவர்களின் பிரச்சினைகளுக்கு பதில் கிடைக்கப்போவதில்லை. இலங்கைக்கு எதிரான தீர்மானங்களுக்கு ஆதரவாக வாக்களித்த 25 நாடுகளும் ராஜபக்ஷ அரசாங்கம் அதற்கு இருக்கக் கூடிய பொறுப்புடைமையை உறுதிப்படுத்துவதற்கு நிர்ப்பந்தத்தைக் கொடுக்க எத்தகைய நடவடிக்கைகளை எடுத்தன?

**வடக்கில் இராணுவமய செயற்பாடுகளுக்கு தெற்கில் கிடைக்கின்ற ஆதரவு பொருளாதாரத் துறையில் இராணுவத்தின் ஊடுருவல்களுக்கு வசதியானதாக அமைந்து விடுகிறது. ஊழலும் இதனால் பெருகுகிறது. ஆனால் ஊழலுக்கு எதிராகப் போராட இலங்கையில் ஒரு அண்ணா ஹசாரேயோ, ஆம் ஆத்மி கட்சியோ இல்லை**



இந்த நாடுகள் விடுத்திருக்கக் கூடிய அறிக்கைகளுக்குப் புறம்பாக இலங்கைக்கு பல பிரதிநிதிகள் அடிக்கடி வந்து செல்கின்றார்கள். இந்த விஜயங்களின் மூலமாக அவர்கள் இங்கு வந்து அறிந்து கொள்வதற்கு புதிதாக எதுவும் இல்லை. அறிகுறிகள் மாத்திரமல்ல நோய்களும் கூட நன்கு தெரிந்தவையே. தேவைப்படுவது என்னவென்றால் நல்ல, சரியான சிகிச்சையே ஆகும். ஆனால்,நடப்பதோ எதிர்மாறானதாக இருக்கிறது. பொருளாதார நோக்கில் பார்க்கும் போது ராஜபக்ஷ அரசாங்கம் தப்பிப் பிழைப்பதற்கு அமெரிக்கா உதவிக்கொண்டிருக்கிறது. பிரிட்டன் உட்பட ஐரோப்பிய ஒன்றியமும் இந்தியாவும் கூட இதையே செய்கின்றன. பல திட்டங்களை முன்னெடுப்பதற்காக மீள் குடியமர்வு, புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி என்ற பெயரில் இலங்கைக்கு பெருமளவு நிதியுதவிகள் செய்யப்படுகின்றன. தோல்வியுறும் பொருளாதாரத்தைப் பாதுகாக்கவே




இவை உதவுகின்றன. இந்த உதவிகள் வல்லாதிக்க நாடுகளின் இரட்டைத்தனமான அணுகுமுறைகளையே வெளிப்படுத்துகின்றன.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மீண்டும் தமது வாழ்வைக் கட்டியெழுப்பி தலைநிமிர்ந்து வாழ்வதற்கு வேறுவிதமான நடவடிக்கைகளே தேவைப்படுகிறது. வடமாகாண சபைத் தேர்தல்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு தமிழ் மக்கள் அமோக ஆதரவை அளித்தார்கள். புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தினால் பெரிதும் விரும்பப்படாத முதலமைச்சருக்கு தமிழ் மக்கள் பேராதரவை அளித்தார்கள். இதன் மூலம் தங்களுக்குத் தேவையானது எது என்பதை அந்த மக்கள் வெளிக்காட்டினார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் ஜனநாயக வாழ்வின் ஒரு மீளெழுச்சியை நாடி நிற்கிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. பல்வேறுபட்ட தீவிரவாத குரல்களின் நெருக்குவாரத்திற்குட்பட்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் இந்த எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ற முறையில் செயற்படக்கூடிய வல்லமையைக் கொண்டிருக்கிறதா? இதுவொரு முக்கியமான கேள்வி. தமிழ் மக்கள் அரசியல் அதிகாரத்தில் தங்களது பங்கைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக அரசியல் அணுகுமுறையை வகுக்கவேண்டிய கடப்பாடு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு இருக்கிறது. உருப்படியான அரசியல் எதிரணி இல்லாத நிலையில் தென்னிலங்கையில் தூண்டிவிடப்படுகின்ற சிங்கள உணர்வுகளுக்கு மத்தியில் அரசாங்கம் ஊழல்த்தனமானதாகவும் கூடுதலான அளவிற்கு அதிகாரங்கள் மத்தியமயப்படுத்தப்பட்டதாகவும் இருக்கிறது. இது தமிழ் மக்களின் பிரச்சினைகளை மேலும் தீவிரப்படுத்தவே உதவிக்கொண்டிருக்கின்றன.

செயல்முறையில் ஜனநாயக தேசம் என்ற வகையில் இலங்கை எதிர்காலம் வடக்கோ, தெற்கோ அதன் ஒரு பகுதியிலுள்ள ஒரு இனக்குழுவினரால் மாத்திரம் தீர்மானிக்கப்போவதில்லை. சிங்களத் தீவிரவாதமே பெரும்பான்மைச் சமூகத்தில் புதுமையான கருத்து என்ற எண்ணம் சரியானதொரு நிலைப்பாடாக ஒருபோதும் இருக்கப்போவதில்லை. ஐக்கியதேசியக் கட்சி உட்பட சிங்கள எதிர்க்கட்சிகளின் பலவீனமான நிலையே இன்றைய தென்னிலங்கையின் பிரச்சினையாகும். இந்தப் பலவீனமான நிலை காரணமாக சிங்கள மத்தியதர வர்க்கத்தினர் தீவிரவாதக் கருத்து நிலையுடன் இசைந்துபோகவேண்டிய சூழ்நிலை தோன்றியிருக்கின்றது. பெரும்பான்மையான மக்கள் இந்தப் போக்கை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் இதற்கு சவால் ஏற்படுத்தக்கூடிய முறையில் எதிரணியின் செயற்பாடுகள் இல்லாத காரணத்தினால் நிலைவரங்களில் மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை.

வடக்கின் இராணுவமயத்தை நீக்க வேண்டும் என்பது முக்கியமானதும் அவசரமானதுமான ஒரு பிரச்சினை. ஆனால், இதை வடக்கு-கிழக்கினால் மாத்திரம் சாதித்து விட முடியாது. வடக்கு -கிழக்கை இராணுவமயப் படுத்திய அரசாங்கத்தின் போக்கை நகர்ப்புற சிங்கள நடுத்தர வர்க்கத்தினர் ஆதரிக்கிறார்கள். பொருளாதார ரீதியில் தங்களுக்கு வாய்ப்பான தற்போதைய சூழ்நிலை தொடர வேண்டும் என்பதற்காகவே அவர்கள் இந்த ஆதரவை வழங்குகிறார்கள். வடக்கில் இராணுவமயச் செயற்பாடுகளுக்கு தெற்கில் கிடைக்கின்ற ஆதரவு பொருளாதாரத்துறையில் இராணுவத்தின் ஊடுருவல்களுக்கு வசதியானதாக அமைந்து விடுகின்றது. ஊழலும் இதனால் பெருகுகின்றது. ஆனால், இலங்கையில் ஊழலுக்கு எதிராக ஒரு அண்ணா ஹசாரேயோ அல்லது ஒரு ஆம் ஆத்மி கட்சியோ இல்லை. சகல குற்றச் செயல்களையும் லஞ்ச ஊழலையும் போதைப் பொருள் கடத்தலையும் அதிகரிக்கின்ற பாலியல் வல்லுறவு மற்றும் பாலியல் தொல்லைகளையும் எதிர்த்து சவால் விடுக்க இங்கு உருப்படியான சிவில் மற்றும் எதிரணியின் அரசியல் சக்திகள் இல்லை. வடக்கு-கிழக்கில் நிலைநிறுத்தப்பட்டிருக்கின்ற இராணுவ மயத்தின் ஒரு விரிவாக்கமே தென்னிலங்கையில் காணப்படுகின்ற இந்த நிலைவரங்கள் என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும். நீதிக்காகவும் அரசியல் சுதந்திரம் மற்றும் சமூக பொருளாதார அதிகாரத்திற்காகவும் நடத்தப்பட வேண்டிய போராட்டத்தை இன ரீதியாகவும் புவியியல் ரீதியாகவும் பிளவுபட்டிருக்கின்ற சமுதாயத்தினால் முன்னெடுக்க முடியாதென்ற உண்மையும் புரிந்துகொள்ளப்பட வேண் டும். ■

உள்நாட்டு அரசியல்



சாந்தி சச்சிதானந்தம்

# சுற்றுலா விசாவும் அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையும்

'இங்க எங்கட ஆக்களுக்கு நல்லது செய்ய தமிழ்நாட்டில் இருந்து வந்திருக்காங்க எண்டு எங்களுக்குத் தெரியும்.. என்ன செய்யிறது..? இது நாங்க செய்ய வேண்டிய வேலையாப் போச்சு.. உங்களுக்கு விளங்கும்தானே நாங்களும் எங்கட வயிற்றுப் பிழைப்பைப் பாக்க வேணும்..' இது நெடுங்கேணியில் எங்களை விசாரணைக்கு உட்படுத்திய ஒரு தமிழ் புலனாய்வு பணியாளரின் அடிக்கடி உதிர்க்கப்பட்ட கூற்று. ஓர் தமிழ்நாட்டுப் பெண்மணியை நெடுங்கேணியில் ஏற்பாடு செய்யப்பட்ட ஓர் விதவைகள் தின நிகழ்வில் நாம் கலந்துகொள்ள அழைத்து வந்ததே எம்மீதான விசாரணையின் காரணமாகும்.

நெடுங்கேணியில் ஒரு 30 பேர் கலந்து கொண்டதொரு குட்டிக் கூட்டம் அது. இது ஒரு சின்ன சம்பவம் என்று கொழும்புத் தலைமையகம் விடத் தயாராக இருந்தாலும், வவுனியாவின் அந்த இளம் 'ஊக்கமுள்ள' புலனாய்வு அலுவலர் விடத் தயாராயில்லை. வேறென்ன? எங்கள் குழுவினர் ஓமந்தை சோதனைச் சாவடியில் 8 மணித்தியாலங்களுக்கு மேல் தடுத்து வைத்து விசாரணை செய்யப்பட்டு, அந்தப் பெண்மணியை அடுத்த நாளே நாட்டைவிட்டு வெளியேற்றும் வரை (அவர் செல்லவிருந்த பயணச்சீட்டிலேயே) இது தொடர்ந்தது. சுற்றுலா விசாவில் வந்தவர் பெண்கள் பட்டறையில் கலந்து கொண்டார் என்பதே உத்தியோகபூர்வமாக அவர் மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டாகும்.

இதற்குப் பின்னரும் பயங்கரவாத விசாரணைத் திணைக்களத்திற்கு பல தடவைகள் போய் வந்திருக்கின்றேன். எல்லாவற்றையும் ஒட்டு மொத்தமாக ஆராய்ந்தால், அடி மட்டத்தில் பணி செய்யும் தமிழ் புலனாய்வு முகவர்களினால்தான் அனேக இம்சைகள் ஏற்படுத்தப்படுகின்றன என்பது என்னுடைய முடிவாகும். இவர்கள் தமிழினத்தைச் சேர்ந்தவராக இருப்பதனால் சிங்கள அரசாங்கத்

> தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் பிரமிக்கத்தக்க வகையில் முன்னேறியிருக்கும் இக்காலகட்டத்தில் வெளிநாட்டிலிருந்து வரும் ஒருவர் இலங்கையில் மக்களைச் சந்தித்துத்தான் தகவல்களைப்பெற வேண்டும் என்ற எந்த நிர்ப்பந்தமும் கிடையாது. அவை தினம் தினம் புகைப்படங்களாக, கட்டுரைகளாக ஒளிப்பேழைகளாக உலகெங்கும் அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன

துக்கான தங்களது விசுவாசத்தை எந்தக் கணமும் நிரூபிக்க வேண்டியவர்களாக தாம் உணர்கின்றனர். அது மட்டுமல்லாது, இந்த சிங்கள நிர்வாக சங்கிலியில் பதவியுயர்வு பெற்றுக் கொள்ள வேண்டுமென்றாலும் தமது சக சிங்களப் பணியாளர்களைவிட மும்மடங்கு உழைக்க வேண்டியவா களாகவுள்ளனர். இதனால் வருகிறது தொல்லை. நெடுங்கேணியில் எங்கள் விடயத்திலும், ஒவ்வொரு தடவையும் இதில் எந்த விதமான சதித் திட்டத்திற்கும் ஒரு சாட்சியமும் இல்லை என்று அங்குள்ள சிங்கள அலுவலர் தீர்மானித்துக்கொண்டிருக் கும்போது அம்முடிவை மாற்றும் நோக்கத்துடன் வந்திறங்கி விடுவார் நம்ம ஹீரோ. கொழும்பு பயங்கர வாதப் பிரிவிலும்கூட ஒரு சிறிய கூட்டத்தில் கலந்து கொண்டதாலா இந்தப் பெண்மணியை நாட்டை விட்டு வெளியேற்றினர் என அங்கிருந்த அலுவலர்களே எம்மிடம் ஆச்சரியம் தெரிவித்தனர்.

இதே போலத்தான், நாங்கள் களத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதையும் என்ன செய்யக் கூடாதென்பதையும் இவர் போன்றவர்கள் எங்களுக்கு ஆலோசனை சொல்ல ஆயத்தமாவார்கள். எல்லாம் அவர்களின் அனுமானத்தின் பேரில்தான். மட்டக்களப்பு மாவட்டத்தில் எங்களுடன் பணி செய்பவர்களைச் சந்தித்து 'நீங்கள் விதவைகளுடன் வேலை செய்தால் அரசாங்கத்துடன் பெரும் பிரச்சினை வரும். அதனை நிறுத்த வேண்டும்' என்பார்கள். பணியாளர்களும் பயந்தடித்து எம்மிடம் வரும் போது என்ன அடிப்படையில், யார் கூறினார்கள் என்றெல்லாம் நாம் எதிர்க்கேள்வி போடும்போதுதான் நிலைமையின் கோமாளித்தனம் புரிபட ஆரம்பிக்கும்.

எங்களுக்கு இச்சம்பவம் நேர்ந்ததற்குப் பின்னர் அதுவே அரசாங்கத்துக்கு வாடிக்கையாகப் போய்விட்டது போலும். வெளிநாட்டிலிருந்து வந்து தமக்கு எதிரான வேலைகளைச் செய்பவர் என்று சந்தேகிக்கப்படுபவர்களையெல்லாம் சுற்றுலா விசாவில் வந்தவர் என்கின்ற குற்றச்சாட்டுடன் பிடித்து நாட்டைவிட்டு வெளியேற்ற ஆரம்பித்து விட்டது. சுதந்திர ஊடக அமைப்பின் கருத்தரங்கிற்கு வருகை தந்த இரு அவுஸ்திரேலியர்கள், பின்பு பொதுநலவரசு உச்சி மகாநாட்டின் முன்னராக இங்கு வருகை தந்த அவுஸ்திரேலியா, நியூசிலாந்தைச் சோந்த இரு பாராளுமன்ற உறுப்பினர்கள், கவிஞர் ஜெயபாலன், தமிழ் நாட்டைச் சேர்ந்த புகைப்படப் பிடிப்பாளர் பிரபாகரன் என்று இந்த நிரல் நீண்டது. கனடியப் பாராளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசனும் இந்த நிரலில் சேர்க்கப்படப் போய் கடைசியில் மயிரிழையில் தப்பிக் கொண்டார் என்றுதான் கூற வேண்டும்.

ராதிகா சொந்தக் காரணங்களை யொட்டி இலங்கைக்கு விஜயம் செய்தவர் எனக் கூறப்படுகின்றது. அப்படி அவர் வந்தாலும், இங்குள்ளவர்கள் அவர் யாரெனத் தெரிந்து கொண்டு அவரைச் சந்திக்கவே முற்படுவர். நான் சுற்றுலா விசாவில்தான் வந்திருக்கின்றேன் ஆகையால், யாரையும் சந்திக்க இயலாது என்று ராதிகாவால் கூற முடியுமா? அவர் சந்திப்புகளை மட்டுப்படுத்தும் நோக்கில்தான் புலனாய்வாளர்கள் நடவடிக்கை எடுக்கத் தலைப்பட்டிருக்கின்றனர். அவ்வாறாயின் சுற்றுலா விசாவில் வருபவர்கள் இனி இங்கு தனிப்பட்ட ரீதியிலேனும் ஒருவரையும் சந்திக்க முடியாதே. இது அரசாங்கத்தின் கொள்கை என்பதைவிட முன்பு கூறியதுபோல ஹீரோ கனவுகளுடன் உலாவரும் புலனாய்வு உத்தியோகத்தர்களின் கைவண்ணமாகத்தான் அனேகமாக இருக்கும். இதேபோலத்தான் மகா. பிரபாகரன் மீதும் கிளிநொச்சியில் புகைப்படங்கள் எடுத்தார் என்கின்ற குற்றச்சாட்டுதான் முன்வைக்கப்பட்டது. அவ்வாறாயின் சுற்றுலா விசாவில் வருபவர்கள் புகைப்படமும் எடுக்கக்கூடாதா! ஆங்கிலத்தில் 'From the sublime to the ridiculous' என்பார்கள். ஏதோ பெரிய துப்புத் துலக்கும் வேலை செய்யப்போய் முட்டாள்தனமான முடிவுகள் எடுப்பதே இதுவாகும். பாரிய வளங்களுடன் செயற்படும் அரச இயந்திரத்தின் பலவீனமும் இதுதான். அது, நீண்ட கால இலக்கினைப் பற்றிச் சிந்திக்க இயலாத தனது கீழ் அதிகாரிகளின் நடவடிக்கைகளிலேயே முற்று முழுதாகத் தங்க நேரிடுகின்றது.


எப்படியிருப்பினும் இது அரசாங்கத்திற்கு அவப்பெயர் கொடுக்கும் விளைவில்தான் முடியப்போகின்றது. எங்களுக்கு எதிரான கொள்கையுடையவர்களையெல்லாம் மூட்டை கட்டி அனுப்பி வைத்துவிட்டோம் என அவர்கள் மார்தட்டிக் கொள்ளலாம். ஆனால் கடைசியில் அந்தந்த நபர்களின் அரசுகளின் எதிர்ப்பைச் சம்பாதித்ததாகத்தான் இது முடியும். தொடர்பாடல் தொழில் நுட்பங்கள் இவ்வளவு முன்னேறிய இக்காலகட்டத்தில் வெளிநாட்டிலிருந்து வரும் ஒருவர் கட்டாயம் இங்கு மக்களைச் சந்தித்துத்தான் தகவல் பெற வேண்டும் என்கின்ற ஒரு நிர்ப்பந்தமும் கிடையாது. அவை தினந்தினம் புகைப்படங்களாக, கட்டுரைகளாக, ஒளிப்பேழைகளாக உலகெங்கும் அனுப்பப்படுகின்றன.

அப்படி ஒருவர் இங்கு வந்து ஒரு கூட்டத்தில் கலந்துகொண்டுதான் என்ன ஆகப் போகின்றது? ஏதோ இங்கிருப்பவர்களுடன் இணைந்து அவர்கள் புதிய புரட்சியில் ஈடுபடப் போகிறார்கள் என்கின்ற ரீதியில் அரசு அச்சப்படுவது அபத்தத்திலும் அபத்தமாகும். இவ்வகையான தனிநபர்களுடன் பிணைந்து கொண்டிருப்பதால் நேரமும் மனித மற்றும் நிதி வளங்களும் அரசுக்கு விரயமாவது தான் மிச்சம். அத்துடன், தமக்கு வெளியார் பார்க்கக்கூடாது மறைத்து வைக்கவேண் டிய ஏதோ குற்றச்செயல்கள் இருக்கின்றன என உலகுக்கு பறைசாற்றும் விடயமாகவும் இது மாறுகின்றது. இதுவே குற்ற விசாரணைகளைக் கோருவதற்கான புறச்சூழலை உருவாக்கிக் கொடுத்து விடுகின்றது. ■

பாக்கு நீரிணைக்கு குறுக்கே



# வலையில் சிக்குமா









இனப்பிரச்சினையை விட்டுவிட்டு பார்த்தால், இலங்கை-இந்தியா ஆகிய இரு அண்டை நாடுகளுக்கும் இடையேயான முக்கிய பிரச்சினையே மீனவர் பிரச்சினை தான். இன்னும் சொல்லப்போனால், அரசியல் மற்றும் நேரடி இராஜீய விடயங்களில், இனப்பிரச்சினையை விட மீனவர் பிரச்சினை முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது என்பதே உண்மை. காரணம், இனப்பிரச்சினை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை. மீனவர் பிரச்சினையோ, இரு நாட்டு அரசுகளையும், இரு நாட்டு மீனவர்கள் மற்றும் உள்நாட்டு அரசியலையும் உள்ளடக்கியது. இனப்பிரச்சினை இந்தியாவில், அதிலும் தமிழ் நாட்டில் அரசியல் பிரச்சினை ஆக்கப்பட்டுவிட்டாலும் மீனவர் பிரச்சினையின் நேரடித் தாக்கம் அதிகம் தான்.

மீனவர் பிரச்சினை, தமிழ் நாடு மற்றும் இலங்கையின் வட மாகாண மீனவர்கள் இடையிலான பிரச்சினை என்றே கருதப்படுகிறது. என்றாலும், தீர்வு என்று வந்து விட்டால், அது இரு நாட்டு அரசுகளையும், தென் இலங்கை மீனவர்களையும் உள்ளடக்கியதாகவே இருக்க முடியும். காரணம், இலங்கையில் கைது செய்யப்படும் இந்திய மீனவர்கள் அனைவருமே தமிழ் நாடு மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்தவர்கள். இந்தியாவில் கைது செய்யப்படும் இலங்கை மீனவர்கள் அனைவருமே தென் இலங்கையைச் சேர்ந்தவர்கள்.

அந்த விதத்தில், கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுதலை செய்வது என்ற விடயத்தில், தென் இலங்கை மீனவர்களை அரசியல் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை அரசு மற்றும் அமைச்சர்கள் அதிக அக்கறை காட்டுகிறார்கள். இதுவே, தமிழ் நாட்டிலும் அரசியல் பிரச்சினையாகி விடுகிறது. ஆனால், மீனவர் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு என்ற விடயத்தில் இலங்கை அரசு அதீத அக்கறை

என்.சத்தியமூர்த்தி

# மீனவர் பிரச்சினை?

கச்சதீவு இலங்கைக்குச் சொந்தம் என்று 1974ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்திய அரசு தொடர்ந்து கூறி வந்தாலும் உச்ச நீதி மன்றத்தின் எந்தவொரு தீர்ப்பிற்கும் அது கட்டுப்பட்டாக வேண்டும். கச்சதீவு குறித்த இந்திய நீதிமன்றத் தீர்ப்பு தனக்கு எதிராக வருமேயானால் அது குறித்து இரு நாட்டு ஒப்பந்தத்தைச் சுட்டிக்காட்டி இலங்கை அரசு தப்பித்துக்கொள்ளவும் மு டியாது

காட்டிவந்ததில்லை. தமிழ் நாட்டு மீனவர்களால் பாதிக்கப்படுவது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் பேசும் மீனவர்கள் என்ற எண்ணம் வேரூன்றிவிட்டதே இதற்குக் காரணம்.

இதன் பின்னால் உள்ள பிரச்சினையை ஆராய்ந்தால், இந்தியாவில் நிலவும் மத்திய-மாநில அரசுகளிடையே நிலுவையில் உள்ள அதிகாரப்பரவல் திட்டத்தை தென்இலங்கை அரசியல்வாதிகள் குறைகூறுவர். இந்தியாவில் கைது செய்யப்படும் தென் இலங்கை மீனவர்களை தமிழ் நாடு உடனடியாக விடுவிக்கும் வழக்கம் அண்மைக்காலம் வரை இருந்து வந்தது. இலங்கை அரசும் கைது செய்யப்படும் தமிழ் நாடு மீனவர்களை விடுவிப்பதில் அதிக அக்கறை காட்டி வந்துள்ளது என்பதே உண்மை.

ஆனால், இந்தியாவின் பிற மாநிலங்களில் சிறை செய்யப்பட்டுள்ள தென் இலங்கை மீனவர்களின் நிலைமை வேறுபட்டது. ஆந்திரப் பிரதேசம், ஒடிசா மற்றும் அந்தமான் தீவுகளில் சிறையில்வாடும் தென் இலங்கை மீனவர்கள் உடனடியாக விடுவிக்கப்படுவதில்லை. அந்த மாநிலங்களைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கையில் சிறைபிடிக்கப்படும் வாய்ப்பு இல்லை என்பதும் அவர்களது அக்கறையின்மைக்கு ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால், மத்திய-மாநில அதிகாரப்பரவல் முறைக்கு உட்பட்டு இந்தியாவின் மத்திய அரசு, ஆந்திர பிரதேசம் போன்ற மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தல் செய்ய முடியுமே தவிர அதிகாரம் செய்ய முடியாது.

தற்போது, இலங்கையில் தெற்கு மற்றும் மேற்கு மாகாண சபைகளுக்கு தேர்தல் நடைபெற இருப்பதும் தற்போது, மீனவர் பிரச்சினை குறித்து இலங்கை அரசு அதிக ஆர்வம் காட்டுவதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால், சாதாரண காலங்களில் கூட தமிழ் நாடு அல்லாத இந்திய மாநிலங்களில் சிறையிடப்படும் இலங்கை மீனவர்கள் அதிக நாட்கள் சிறையில் இருக்க வேண்டி வருவது, ஒரு அசாதாரண நிலைமையையும் சமன்பாட்டையும் ஏற்படுத்திவிட்டதாக ஒரு எண்ணம் உருவாகி உள்ளது.

அதேசமயம், இது போன்ற நிலைப்பாடு இல்லையென்றால் எங்கே தமிழ்நாட்டு மீனவர்களை, இலங்கை அரசு சிறையில் இருந்து விடுவிக்க அதிகமாக சிந்தித்திருக்குமோ என்றும் எண்ணத்தோன்றுகிறது. இதன் எதிர்ப்பதிப்பாகவே, இந்திய சிறையில் வாடும் தென் இலங்கை சிங்கள மீனவர்களின் விடுதலையை எதிர்பார்த்து, தமிழ் நாடு மீனவர்களை இலங்கை அரசு சிறையில் வைத்திருக்கிறது என்ற கருத்தும் நிலவுகிறது. ஆனால், இத்தகைய சிந்திப்பும் செயற்பாடும், தமிழ் நாடு அரசும் கைதுசெய்யப்பட்ட சிங்கள மீனவர்களை விடுவிக்காமல் சிறையில் தொடர்ந்து வைத்திருப்பதற்கு மட்டுமே பயன்பட்டுள்ளது எனலாம்.

### கடந்த காலமும் எதிர் காலமும்

இனப்போர் காலகட்டத்தை முன்னிறுத்தி, தமிழ் நாடு மீனவர்கள் விடுதலைப் புலிகளின் கடத்தல் செயல்களில் உதவினார்கள் என்ற எண்ணம் இன்னமும் தொடருகிறது. அத்தகைய கவலைகளில் உண்மையில்லாமல் இல்லை. ஆனால், அது ராஜீவ் காந்தி படுகொலைக்கு முன்னர். பிற்பட்ட காலகட்டங்களில், அவ்வாறு எதுவும் நடக்கவில்லை என்

பதும் உண்மை. அதேசமயம், இனப் போர் காலகட்டத்திற்குப் பின், உலகளாவிய தமிழர் கோரிக்கைகளை மனதில் வைத்து பார்க்கும் போது, கட்சிமாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு, இந்தியாவின் மத்திய அரசு அது போன்ற ஒரு சூழ்நிலையை வரவேற்காது என்பது திண்ணம்.

அதேசமயம், தற்போது சீன மீனவர்களுக்கு ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கு இலங்கை அரசு அங்கீகாரம் வழங்கியுள்ள சூழ்நிலையில், அவர்கள் எதிர்காலத்தில் இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறமாட்டார்கள் என்று இலங்கை அரசாலும் அறுதியிட்டுக் கூறமுடியாது. பத்திரிகைச் செய்திகளை வைத்துப் பார்க்கும்போது, சீன மீனவர்கள் தாங்கள் ஆழ்கடலில் பிடித்த மீன்களை இலங்கை கடற்கரையில் விற்பனைக்கு கொண்டு வரக்கூடாது என்ற ஒப்பந்தத்தை மீறுவதாக தென்இலங்கை மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இதுபோன்ற ஒரு குற்றச்சாட்டு, இந்திய அரசிடம் இருந்தும் எழாது என்று கூறிவிடமுடியாது. இந்திய-சீன உறவுகளின் தன்மையை வைத்து நோக்கும் போது, இது இலங்கை-இந்திய உறவுகளை மீண்டும் பாதிக்கும் வாய்ப்புள்ளது.

இலங்கை அரசின் மற்றொரு கவலை, எதிர்காலத்தில் இனப்பிரச்சினை மீண்டும் பூதாகரமாக உருவெடுத்தால், அதிலும் போராளிக் குழுக்கள் என்று மீண்டும் தோன்றி விட்டால், எங்கே தமிழ் நாட்டு மீனவர்கள் மீண்டும் அவர்களுக்கு உதவத் தொடங்கி விடுவார்களோ என்ற கவலை இருந்தால், அது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய விடயமும் கூட. ஆனால், அதற்கு வழிசெய்யாமல், அரசு ஏன் இனப்பிரச்சினைக்கு தமிழர்களால் ஏற்றுக்கொள்ளத்தக்க அரசியல் தீர்வை முன்வைப்பதில்லை என்ற கேள்வியும் உடனெழுகிறது. ஆனால், அது மட்டுமே மீனவர் பிரச்சினை குறித்த இலங்கை அரசின் கவலைகளுக்கு மருந்தாகிவிடும் என்று கூறிவிடமுடியாது.

இந்தப் பின்னணியில், மீனவர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டியது இரு நாட்டு அரசுகளின் கடமை. இந்தியாவைப் பொறுத்தவரை, மீனவர் பிரச்சினையின் ஒரு அலகு, 1974 மற்றும் 1976ஆம் ஆண்டுகளில் இரு நாடுகளும் செய்து கொண்ட கடல் எல்லை சார்ந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைந்தது. இதுவே 'கச்சதீவு பிரச்சினை' என்றும் அறியப்படுகிறது. கச்சதீவுப் பகுதியில் இந்திய மீனவர்கள் பிடித்துச்செல்ல அதிக அளவில் மீன் இல்லை என்றாலும், இது குறித்த பிரச்சினை தற்போது இந்திய உச்சநீதிமன்றத்தின் முன்னால் உள்ளது.

தொடர்ந்தும் இந்திய அரசு கச்சதீவு இலங்கைக்குச் சொந்தம் என்ற 1974 ஆண்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் கூறி வந்தாலும், உச்ச நீதிமன்றத்தின் எந்தவொரு தீர்ப்பிற்கும் அரசு கட்டுப்பட்டாக வேண்டும். இதுவே இந்தியாவின் கடந்தகால நெறிமுறை. கச்சதீவு குறித்த இந்திய நீதிமன்ற தீர்ப்பு தனக்கு எதிராக வருமேயானால், அது குறித்து, இரு நாட்டு ஒப்பந்தத்தைச் சுட்டிக்காட்டி, இலங்கை அரசு தப்பித்துக்கொள்ள முடியாது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இணைக்கப்பட்ட வடகிழக்கு மாகாணத்தை இலங்கை அரசு, 2006ஆம் ஆண்டு தீர்ப்பின் அடிப்படையில் பிரித்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அதே சமயம், இது குறித்து இந்தியாவில் மத்திய அரசும், தமிழ் நாடு அரசும், தமிழ் நாடு மீனவர்களும் கவலைப்பட வேண்டிய அதிமுக்கிய விடயம் உள்ளது. கடந்த 1974ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில், மீனவர் பிரச்சினை ஓங்கி நிற்கும் 'பாக்கு நீரிணை' பகுதியை இரு நாடுகளும் தத்தம் 'உள்நாட்டு நீர்ப்பகுதியாக' பிரித்துக்கொண்டது. இதற்கு தற்போது, 'ஐ.நா.வின் சர்வதேச கடல் சட்டங்கள்' குழுமத்தின் (UNCLOS) மூலம், உலக நாடுகளின் ஒப்புதலும் உள்ளது. அதேசமயம், இரு நாட்டு ஒப்பந்தம் மீண்டும் ஆராயப்படும் சூழ்நிலை உருவாகுமேயானால், அதன் மூலம் புதியதொரு தீர்வுத்திட்டமும் உருவாகுமேயானால், அதனை உலகநாடுகள் அப்படியே ஏற்றுக் கொண்டுவிடுவார்கள் என்று எதிர்பார்த்துவிட முடியாது.

இன்றும், மீனவர் பிரச்சினையின் தாக்கத்தைக் குறைக்கவும் தமிழ் நாட்டு மீனவர்களின் உயிர் மற்றும் வாழ்வாதாரங்களைக் காக்கும் விதத்திலும், மாநில அரசு ஆழ்கடல் மீன் பிடிப்பை ஊக்குவிக்கும் முயற்சியை மேற்கொண்டுள்ளது என்பதும் உண்மை. அந்த வகையில் பாக் நீரிணையை அண்டி வாழும் இந்திய மீன

> மீனவர் பிரச்சினை குறித்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இதுவரை கருத்துக் கூறாமலேயே தப்பித்து வந்துள்ளது. ஆனால் புதிய சூழ்நிலைகளும் அவற்றையொட்டி புதிய பிரச்சினைகளும் உருவாகுமேயானால் அப்போது கூட்டமைப்பு வெளிப்படையான ஒரு நிலைப்பாட்டை எடுக்க நிர்ப்பந்திக்கப்படும்

வர்கள், ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கு செல்ல வேண்டுமானால், நேரம் மற்றும் படகு ஓட்ட செலவுகளை மிச்சப்படுத்தும் விதத்தில், இந்திய அரசின் சேது சமுத்திரத் திட்டப் பகுதியில் ஒரு கடல்வழி அமைத்துக் கொடுக்க வேண்டிவரும்.

தற்போது, சேது சமுத்திரத் திட்டத்தின் எதிர்காலமும் இந்திய உச்ச நீதிமன்றத்தின் முன்னர் உள்ளது. ஆனால், அந்தத் திட்டம் செயற்படுத்த முயற்சி தொடங்கிய காலகட்டத்தில், அந்தத் திட்டம் முடிவிற்கு வந்தால், அந்த நீர்ப்பகுதி 'சர்வதேச கடல் பகுதியாக' ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும், அங்கு தனது கப்பல்கள் சென்றுவருவதற்கு உரிமை வேண்டும் என்றும் அமெரிக்க அரசு கூறியதாக பத்திரிகைச் செய்திகள் வெளியாயின. அவ்வாறெல்லாம் மீனவர் பிரச்சினை புதிய வடிவங்கள் எடுக்குமேயானால், அது இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளின் பாதுகாப்பிற்கு ஒரு சேர ஊறு விளைவிக்கும். அதே சமயம், நீரிணை பகுதியிலும் அந்நிய நாட்டு பெரும் படகுகள், குறிப்பாக தமிழ் நாடு மீனவர்களுக்குப் போட்டியாக வரும் வாய்ப்புள்ளது. அவர்களுக்கு இடையேயும் தற்போது உள்ளது போன்ற மீனவர் பிரச்சினைகள் தோன்றலாம். அப்போது, இந்திய மீனவர்கள் யாரை குறை கூறுவார்கள்? அல்லது யாரை குறை கூறி தான் என்ன இலாபம்?

இன்னும் சொல்லப்போனால், மீனவர் பிரச்சினை குறித்து இலங்கையின் வட மாகாணத்தில் தேர்தல் மூலம் ஆட்சிக்கு வந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இது வரை கருத்துக் கூறாமலே தப்பித்து வந்துள்ளது. ஆனால், புதிய சூழ்நிலைகளும், அவற்றை ஒட்டி புதிய பிரச்சினைகளும் உருவாகுமேயானால், அப்போது கூட்டமைப்பு போன்ற அரசியல் செல்வாக்குப் பெற்ற ஒரு கட்சி இலங்கை மற்றும் இந்திய அரசுகளைச் சார்ந்து நிற்குமா, அல்லது பாக் நீரிணையில் பங்கு கேட்போம் என்று கூறியுள்ள அமெரிக்கா போன்ற மேலை நாடுகளை ஆதரிக்குமா?

## பேச்சுவார்த்தைக்குப் பின்னர்

அரசியல், அரசியல்சாசனம் ஆகியவற்றிற்கு அப்பால் மீனவர் பிரச்சினை அந்தந்த மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினையும் கூட. இரு நாடுகளிலும் சரி, மண்ணை நம்பி இருப்போரை விட, கடலை நம்பி வாழ்வோரின் வாழ்வியல் முன்னேற்றங்கள், அவர்கள் உடனடியாக வேறு தொழில் நோக்கி பயணிக்க ஏதுவானதல்ல. இனப்போர் காலகட்டம் என்று மட்டுமல்ல, அதற்கு முன்னரும் கூட, இரு நாட்டு மீனவர்களும் கடல் பிராந்தியத்தில் மருவிக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதே சமயம், இனப்போர் முடிந்த பின்னர் அவர்களது பிரதிநிதிகள் கூடி, இந்தப் பிரச்சினையை தீர்க்கும் வகையில் ஒரு ஒப்பந்தமும் கையெழுத்திட்டுள்ளனர். கடந்த 2010ஆம் ஆண்டு அவர்கள் செய்த ஒப்பந்தமே, வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவல்லது. ஆனால், அதனை இரு நாட்டு அரசுகளும் ஏற்றுக்கொள்வதும், அதிலும் குறிப்பாக தமிழ் நாடு அரசு செயற்படுத்துவதிலும் மட்டுமே அதன் வெற்றி உள்ளது. அது தான் இன்றைய நிலை.இனப்போர் கால கட்டத்தில், கடந்த 2008-ஆம் ஆண்டு, இரு நாடுகளும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், இந்திய மீனவர்கள் இலங்கை கடல் பகுதியில் மீன்பிடித்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. அன்றும், 1974ஆண்டின் கடல் எல்லை குறித்த ஒப்பந்தம் நடைமுறையில் இருந்தது. பின்னர், 2010 ஆம் ஆண்டு ஏற்பட்ட மீனவர் பிரதிநிதிகளின் ஒப்பந்தமும் இதனை உறுதிசெய்தது.

ஆனால், மீனவர் ஒப்பந்தத்தின் எதிராகவும், இலங்கை அரசின் சட்டங்களுக்கு எதிராகவும், இந்திய மீனவர்கள் தடை செய்யப்பட்ட படகுகளையும் வலைகளையும் பயன்படுத்துவது தான் பிரச்சினையின் முக்கிய கரு. அது போன்றே, இந்திய மீனவர்கள், இலங்கை கடல் பகுதியின் உள்ளே சென்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் உள்ள, தமிழ் பேசும் மீனவர்களின் தொழிலுக்கு இடைஞ்சலாக தொடர்வதும் பிரச்சினையின் மற்றொரு பரிமாணம்.

ஆனால், 2008 ஆம் ஆண்டு அரசுதரப்பு ஒப்பந்தத்திற்கு எதிராக இலங்கை கடற்படையினர் இந்திய மீனவர்களைக்கைது செய்து வருவது பிரச்சினையின் மறுபக்கம். அண்மை காலங்களில் அவ்வாறு கைது செய்யப்படும் இலங்கை மீனவர்கள் முன்னெப்போதும் இல்லாத விதத்தில் இலங்கை சிறைசாலைகளில் மாதக்கணக்கில் இருக்க வேண்டியிருப்பதும், மீனவர்களோடு அவர்களது படகுகளும் விடுவிக்கப்படாமையும் குறிப்பிடத்தக்கது. இது, இந்தியாவில் கைது செய்யப்படும் தென் இலங்கை மீனவர்களுக்கும் அவர்களது படகுகளுக்கும் பொருந்தும்.

அந்த விதத்தில், 2008 மற்றும் 2010 ஒப்பந்தங்களின் சாராம்சத்தை உள்ளடக்கி முன்வைக்கப்படும் எந்த ஒரு புதிய ஒப்பந்தமும் வெற்றி பெறும் வாய்ப்புள்ளது. அதே சமயம், அத்தகைய ஒப்பந்தத்தை இரு நாடுகளிலும் உள்ள மத்திய-மாகாண அரசுகள் உறுதியாக செயற்படுத்தினால் மட்டுமே, அது வெற்றி பெற முடியும். அத்தகைய ஒப்பந்தம் வெற்றிபெற்று, பாக் நீரிணையில் அமைதி திரும்பினால் மட்டுமே, இரு நாட்டு உறவுகளும் மேம்படுவதற்கான வாய்ப்புகள் தோன்றும். ■







# மலேசியாவும் இலங்கையும்; ஒற்றுமைகளும் வியப்பளிக்கும் வேற்றுமைகளும்

மலேசியத் தீபகற்பத்தையும் இலங்கையையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது மலேசியாவில் இன, சமய உறவுகள் சுமுகமானவை. அங்கு சமூகக் குழுக்களிடையே சகிப்புத்தன்மை உள்ளது. இதனை ஒப்பீட்டு நோக்கில் தான் கூறுகிறேன். நான் அண்மையில் மலேசியா சென்றிருந்தபோது நான் சந்தித்த கவர்ச்சிமிக்க இளம் பெண் ஒருத்தி; அவளுக்கு தூரியன் பழம் என்றால் அலாதியான மோகம். அவள் என்னை இதைப்பற்றித்தான் கேட்டாள். உங்கள் நாடு ஏன் எங்களுடையதைவிட மோசமாக இருக்கிறது என்றாள். மலாக்காவின் வரலாறு ஏறக்குறைய இலங்கையைப் போன்றதுதான். ஆனால், அண்மைக்காலமாக இவ்விரு நாடுகளுக்கும் இடையே எத்தனை தூர இடைவெளி! இந்த விடயம் பற்றி நான் ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தேன். எனது கருத்துகளை இங்கே உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். அதற்கு முன் மலாக்கா பற்றிச் சில அடிப்படைத் தகவல்களைச் சுருக்கமாகச் சொல்கிறேன்.

பரமேஸ்வரா என்ற இந்து அரசன் மலாக்காவை (இன்று மலாக்கா மலேசியாவிற்குள் ஒரு மாநில அரசு) 1377 இல் நிறுவினான். பரமேஸ்வரா பலம் பொருந்திய மபாஹிட் பேரரசின் மன்னனால் சிங்கபுரவில் (சிங்கப்பூர்) துரத்தியடிக்கப்பட்டபோது அவன் மலாக்கா சுல்தான் ஆயினான். மபாஹிட் பேரரசு யாவா அரசைக் குறிப்பது. பரமேஸ்வரா பற்றி ஒரு வாய்மொழிக் கதை உள்ளது. ஒரு நாள் மன்னன் மெலக்கா நதியின் கரையோரம் ஒரு நெல்லி மரத்தின் நிழலில் சிந்தனையில் ஆழ்ந்து போய் இருந்தானாம். அவன் தனது துரதிருஷ்டம் பற்றி கவலைப்பட்டான். அப்போது அவனது இரண்டு வேட்டை நாய்கள் ஒரு மானைப் பிடித்து பதம்பார்த்துக் கொண்டிருந்தன. மன்னனுக்கு உடனே ஒரு எண்ணம் உதித்ததாம். தன் இராச்சியத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய மையம் தான் அப்போது இருக்கும் நதிக்கரையோரம் தான் என்று முடிவு செய்தானாம். இந்தச் சம்பவம் நிகழ்ந்தது கி.பி.1400. அப்போது வடக்கே கி.பி. 12 ஆம் நூற்றாண்டிலேயே இஸ்லாம் புகுந்துவிட்டது. கெடா (KEDAH) இராச்சியத்தின் இந்து அரசன் முஸ்லிமாக மாறி கெடா சுல்தான் ஆகியிருந்தான். அவனது மதமாற்றம் சுயவிருப்பின்படியானது. மலேசியாவிற்கு இஸ்லாம் வாளால் வெல்லப்பட்டுப் புகுத்தப்பட்டதல்ல. மலேசியா இஸ்லாம் ஆரம்பம் முதலாகவே நெகிழ்ச்சியுடையதாக இருந்தது. பரமேஸ்வரன் 1414ஆம் ஆண்டு இஸ்லாத்தைத் தழுவினான்.


குமார் டேவிட்

மலாக்கா மலாக்கா நீரிணைக்கு அருகே உள்ளது. நாட்டின் பெயரால் நீரிணையும் பெயர்பெற்றுள்ளது. மலாக்கா நீரிணை ஒருபக்கத்தில் இந்து சமுத்திரத்தையும் மத்திய கிழக்கையும் மறுபுறத்தில் தென்கிழக்கு ஆசியாவையும் தூரகிழக்கையும் இணைத்து நிற்கும் ஜலசந்தி. மலாக்கா நீரிணை ஒரு முக்கியமான கப்பற் போக்குவரத்துப் பாதை. ஏனென்றால் இந்து சமுத்திரத்திற்குள் வரும் கப்பல்கள் மலாக்கா நீரிணைக்கு ஊடாக போவதைத் தவிர்த்தால் ஒரு பெரும் சுற்றுச்சுற்ற வேண்டும். இந்தோனேசிய

தீவுக் கூட்டங்களை ஒரு சுற்றுச் சுற்றி ரோறஸ் நீரிணைக் (TORRES Straits) கூடாகப் போகவேண்டும். இது நியுகினியாவையும் அவுஸ்திரேலியாவையும் பிரிக்கும் நீரிணை. பயங்கரமான பாதை. இங்கிருந்து வடக்காகத் திரும்பி பிலிப்பீன்ஸ் தீவுக் கூட்டத்தைத் தாண்டிக் கப்பல்கள் பயணிக்க வேண்டும். பின்னர் தெற்கு நோக்கி வந்து தென்கிழக்கு ஆசியாவுக்கு வர வேண்டும். நேரே பயணிப்பதானால் வடக்கே சீனாவுக்கும் ஜப்பானிற்கும் போகலாம். மலாக்கா நீரிணை முக்கியமான கப்பற்பாதையாக இருப்பது இதனால் தான். இப்பகுதியின் புவியியலை நன்கு தெரிந்து வைத்திருந்த அட்மிரல் ஷெங் கீ (Zheng He) என்ற புகழ் பெற்ற கடற்படைத் தளபதி சீன நாட்டில் இருந்து ஏழு பெரும் கடற்பயணங்களை நடத்தினான். பெரும் செல்வக் குவியல்களைத் தாங்கிய அவனது கப்பல்கள் இந்து சமுத்திரத்திற்கும் ஆபிரிக்கக் கரைக்கும் அராபியாவுக்கும் மலாக்கா நீரிணை ஊடாகப் பயணித்தன. அவனது பயணம் வஸ்கொடகாமா கள்ளிக்கோட்டையை அடைவதற்கு 60 ஆண்டுகள் முன்பே நடந்தது. அதேபோல் கொலம்பஸ் சன்சல்வடோர் தீவில் (இன்றைய பஹாமஸ்) காலடி எடுத்து வைப்பதற்கு முன்பே நடந்தது. அட்மிரல் ஷெங்கி தன் பயணங்களின் போது மலாக்காவில் தரித்து நிற்பதற்குத் தவறுவதில்லை. இதனால் இற்றைக்கு 600 ஆண்டுகளுக்கு முன்பே சீனர் குடியிருப்புகள் மலாக்காவில் தோன்றிவிட்டன. ஆனால், 19ஆம் 20ஆம் நூற்றாண்டில் தான் அங்கே சீனர்கள் பெருந்தொகையில் குடியேறினர். அக்குடியேற்றம் பிரித்தானியர் ஆளுகையின் கீழ் நடந்தது. வீதியமைப்பு, ரயில்வே அமைப்பு என்ற தொழில்களுக்காகவும் ரப்பர் தோட்டங்களில் வேலை செய்வதற்காகவும் பெருந்தொகைச் சீனத் தொழிலாளர்கள் வந்து சேர்ந்தனர். அவர்களைத் தொடர்ந்து சீன வர்த்தகர்கள் வந்தார்கள். பின்னர் தொழில் முயற்சியாளர்களும் முதலீட்டாளர்களும் சீனாவில் இருந்து வந்தார்கள். இப்போது மலாக்காவிலும், மலேசியாவிலும் சீனர்கள் மிகச் செழிப்போடு வாழ்கிறார்கள்.

மலாயாவின் அடுத்த நானூறு வருட சரித்திரம் இலங்கைச் சரித்திரத்தைக் கூறுவதற்கு ஒப்பானது. 1511 ஆம் ஆண்டில் போத்துக்கீசர் மலாயாவைக் கைப்பற்றினார்கள். டச்சுக்காரர் 1641 இல் போத்துக்கீசரைத் துரத்திவிட்டு அதனைக் கைப்பற்றினார்கள். டச்சு ஆட்சி 1798 வரை நீடித்தது. பின்னர் நெப்போலிய யுத்தங்களின் குழப்பகாலத்தில் ஐரோப்பா மூழ்கியிருந்தது. 1824இல் மலாக்காவை பிரித்தானியா பொறுப்பேற்றது. பிரித் தானியர் ஆட்சி 1942 இல் மலாக்காவை ஜப்பானியர் கைப்பற்றும் வரை தொடர்ந்தது. 1945 இல் ஜப்பானியர் சரணடைந்தபோது பிரித்தானியர் ஆட்சி மீண்டும் ஆரம்பித்தது. ஆனால் சீனக் கம்யூனிஸத்தின் தோற்றப் பின்னணியில் மலேசியாவில் கம்யூனிஸ்ட் கிளர்ச்சி தோன்றியது. பிரித்தானியரை அகற்றி விட்டு ஆட்சியைப் பிடிக்க கம்யூனிஸ்ட்டுகள் தயாராயினர். மலாயர்கள் ஜப்பானியக் கொடுங்கோலர்களை ஆதரித்தனர். ஆனால், சீனர்களோ ஜப்பானியரை ஆதரிக்கவில்லை. இதனால் மலேசியாவின் கம்யூனிஸ்ட் கிளர்ச்சி சீனர் விவகாரம் என்று ஆயிற்று. கம்யூனிஸ்ட் கிளர்ச்சியை அடக்கி கம்யூனிஸ்டுகளை ஒழித்துக் கட்டுவதில் பிரித்தானியருக்கு மலாயர்கள் உதவினர். 1957 இல் மலாயாவிற்குச் சுதந்திரம் கிடைத்தது. இருந்தபோதும் அதன் வரலாற்றில் ஒரு திருப்பம் விரைவில் நிகழ்ந்தது. சிங்கப்பூரும் மலாயாவும் ஒரு ஒன்றியத்தில் (யூனியன்) இணைந்து குறுகிய காலம் (1963-1965) இயங்கின. விரைவில் சிங்கப்பூர் ஒன்றியத்தில் இருந்து விலக்கப்பட்டது. லீகுவான் யூ அப்போது தங்களை விலக்க வேண்டாம் என்று உணர்வுபூர்வமான மன்றாட்டக் கோரிக்கையை விடுத்தார். பயனில்லை. 'நவீன காலத்தில் உலகிலேயே சுதந்திரத்தை வலிந்து விருப்பத்திற்கு மாறாகத் திணிக்கப்பட்ட ஒரு தேசம் இருக்குமாயின் அது சிங்கப்பூர் மட்டுமே' என்று லீ குறிப்பிட்டார். காலம் என்பது கறங்கு போல் சுழன்று யாவரும் எதிர்பார்த்ததற்கு மாறான விளைவுகளைத் தந்திருப்பது நம்பமுடியாத அதிசயமே!

1957ஆம் ஆண்டு மலாயாவுக்கு சுதந்திரம் கிடைத்தது. அதன் வரலாற்றில் ஒரு திருப்பம் விரைவில் நிகழ்ந்தது. சிங்கப்பூரும் மலாயாவும் இணைந்து குறுகியகாலம் இயங்கின. விரைவில் ஒன்றியத்திலிருந்து சிங்கப்பூர் விலக்கப்பட்டது. லீ குவான் யூ அப்போது தங்களை விலக்க வேண்டாம் என்று உணர்வுபூர்வமாக மன்றாடினார். நவீனகாலத்தில் உலகிலேயே சுதந்திரத்தை வலிந்து விருப்பத்திற்கு மாறாக திணிக்கப்பட்ட ஒரு தேசம் இருக்குமாயின் அது சிங்கப்பூர் மட்டுமே என்று லீ குறிப்பிட்டார்

## சனத்தொகை விகிதாசாரங்கள்

மலாக்காவினதும் (மலேசியா) இலங்கையினதும் சனத்தொகை விகிதாசாரங்கள் மேல்நோக்காகப் பார்த்தால் ஒரே விதமாகவே தென்படும். ஆனால், சில நுண்மையான வேறுபாடுகள் உள்ளன. இவ்வேறுபாடு

கள் மிக முக்கியம் வாய்ந்தனவாயும் உள்ளன. மலேசியா முழுவதிலுமாக இஸ்லாமியர்கள் (பெரும்பான்மையாக மலாயர் இனத்தவர்) 65 வீதமாக உள்ளனர். சீனர்கள் (இவர்களிடையே இஸ்லாம் மதத்தவர் மிகக் குறைவு) 25 சதவீதத்தினர். இந்துக்கள் (இந்திய வம்சாவளியினர்) 6 வீதம் கிறிஸ்தவர்களும் ஏனைய சிறு குழுக்களும் 4 வீதமாக உள்ளனர். இலங்கையில் சிங்களவர் 75 வீதம், தமிழர்கள் 17 வீதம் (இலங்கைத் தமிழர்கள், இந்தியத் தமிழர்கள் என இரு பிரிவினர்) முஸ்லிம்கள் 8 வீதம் என்ற வகையில் சனத்தொகை விகிதாசாரம் உள்ளது. இரண்டு நாடுகளிலும் ஒரே மாதிரியாக விகிதாசாரங்கள் இருப்பதாகத் தெரிந்தாலும் இரு நாடுகளிலும் ஒரு இனம் மிகப்பெரியதாக உள்ளது. ஆயினும் மலேசியாவில் 25 வீதமான சீனர்கள் ஒருமித்த தன்மையுடைய பெரிய குழுவாக உள்ளனர். இவர்களை நினைத்தபடி மடக்கிவிடவோ, ஒதுக்கிவிடவோ இயலாது. மலேசியாவில் ஒரு தடவை மட்டும் (1968) இனக்கலவரம் ஏற்பட்டது. அப்போது 25 பேர் மட்டும் கொல்லப்பட்டனர். (ஆம்! இதிலிருந்து என்ன தெரிகின்றது என்பதை வாசகர்கள் ஊகித்துக் கொள்ளலாம்) துங்கு அப்துல் ரஹ்மான் ஒரு விடயத்தைத் தெளிவாக உணர்ந்தார். பன்மைத்துவம் கொண்ட மக்கள் கூட்டத்தை ஒரே நாட்டுக்குள் வைத்துக் கையாள்வதில் உள்ள சிரமங்கள் அவருக்குப் புரிந்தன. அதனால் 74 வீதம் சீனர்களைக் கொண்ட சிங்கப்பூரைக் கூட்டாட்சியில் இருந்து விலக்கினார்.

இலங்கையில் தமிழ்ச் சமூகத்தின் இருபிரிவினர்களுக்கிடையில் இருந்த பிளவுகள் தலைவர்களிடையே நிலவிய பரஸ்பர நம்பிக்கையீனத்தால் விரிவடைந்தன. விடுதலைப்புலிகள் 'தமிழ்பேசும் மக்கள் என்ற

**இலங்கையிலும் மலேசியாவிலும் ஒரே மாதிரியாக இன விகிதாசாரங்கள் இருப்பதாகத் தெரிந்தாலும் இரு நாடுகளிலும் ஒரு இனம் மிகப்பெரியதாக உள்ளது. ஆயினும் மலேசியாவில் 25 சதவீதமான சீனர்கள் ஒருமித்த தன்மையுடன் பெரிய குழுவாக உள்ளனர். இவர்களை நினைத்தப்படி மடக்கிவிடவோ ஒடுக்கிவிடவோ இயலாது**

கருத்தை முன்வைத்து முஸ்லிம்களை தம்பக்கம் உள்ளீர்த்துக் கொள்ளச் செய்த முயற்சி உபாயம் என்ற முறையில் புத்திசாலித்தனமானது. ஆனால் அதன் சர்வாதிகாரத் தன்மை எந்தப் பயனையும் தரவில்லை. தவறுகளில் முடிந்தது. ஒட்டுமொத்த சனத்தொகை விகிதங்களை ஒப்புநோக்கினால் மலேசியாவும் இலங்கையும் ஒரே மாதிரியாகவே இருக்கும். ஆனால், மலேசியாவில் சீனர்கள் ஒன்று திரண்ட சக்தியாக இருந்தனர். இன்றும் அவ்வாறே உள்ளனர். மலேய சமூகம் விட்டுக்கொடுப்பதற்கும் இணக்கப்பாட்டிற்கும் வரவேண்டியிருந்தது இதனால் தான். இந்தியாவும் சிறுபான்மையினர்களுடன் இணக்கப்பாட்டிற்கு வரவேண்டியதாயிற்று. இந்திபேசுவோர் மொத்த சனத்தொகையில் 40 வீதம் மட்டுமே உள்ளனர். வங்காளி, தெலுங்கு, தமிழ், மராத்தி, உருது ஆகிய மொழிகளைப் பேசுவோர் ஒவ்வொரு குழுவும் 50 முதல் 80 மில்லியன் மக்களைக் கொண்ட பெருங்குழுவாக உள்ளனர். முஸ்லிம்கள் இந்தியாவில் 180 மில்லியன் உள்ளனர். இதை நாம் மறந்துவிடக்கூடாது. பங்களாதேஷ், பாகிஸ்தான், ஈரான் ஆகிய முஸ்லிம் நாடுகளை விட இந்திய முஸ்லிம்கள் சனத்தொகையில் அதிகம். இந்தியாவில் சீக்கியர்களுடனோ, பழங்குடிமக்களுடனோ கூட அரசாங்கம் அலட்சியம் காட்டவோ விளையாட்டு விடவோ முடியாது. இதில் இருந்து நாம் படித்துக் கொள்ள வேண்டிய எளிமையான உண்மை இதுதான். சனத்தொகையின் அளவு, விகிதாசாரம் ஒரு முக்கியமான காரணி. கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டிய விடயம். ஆகையால் இலங்கைத் தமிழர்களின் விடிவுக்குச் சாத்தியப்பாடு ஏதேனும் உள்ளதா என்பது ஐயமே. இந்தியாவினதும் சர்வதேசத்தினதும் ஆதரவைத் தமிழர்கள் ஓரளவுக்காவது பெற்றுக்கொள்ளாத வரை அவர்களுக்கு வாய்ப்புகள் குறைவு. முஸ்லிம்களின் நிலை வித்தியாசமானது. அவர்கள் தங்கள் சனத்தொகையைப் பெருக்கிக் கொள்வதைத் தவிர வேறுவழியில்லை போல் தெரிகிறது. ஆனால், நாம் சனத்தொகைதான் தீர்மான காரணி என்றும் கூறிவிட முடியாது. அரசியல் தலைமைத்துவத்தின் இயல்பு, தகுதி என்பனவும் முக்கியமானவை. துங்கு அப்துல் ரஹ்மானும் மஹதிர் மொகமட் அவர்களும் ஏதோ ஞானிகள் என்று நான் கூறவரவில்லை. அவர்கள் மலாய் இனத்தேசிய வாதிகள். மலேயர்களின் அநீதியான சீன எதிர்ப்புக் கோரிக்கைகளுக்கு இவர்கள் இடம் கொடுத்தார்கள். (உ+ம் பூமிபுத்திர என்ற அர்த்தமற்ற சொல்லாடல்). ஆனால், அவர்கள் இருவரும் சாரம்சத்தில் இனவாதிகள் அல்லர். இலங்கையின் முன்னணி அரசியல் தலைவர்களும், இரண்டாம் அணித் தலைவர்களும் இவர்களில் இருந்து வேறான அச்சில் வார்க்கப்பட்டவர்கள். பல பெயர்களை இதற்கு உதாரணம் கூறலாம். தமிழ்த் தலைவர்கள் ஒருபோதும் அரசியல் அதிகாரத்தை ருசிபார்த்தவர்களல்ல. (ஆகையால் அவர்களின் இனவாதம் பற்றிய கணிப்பு இங்கு ஒப்பீட்டளவில் முக்கியம் பெறவில்லை) அயலில் சிங்கப்பூர் நாட்டில் லீ குவான் யூ நடந்து கொண்ட விதம் மலாயத் தலைவர்களுக்கு கடிவாளம் பூட்டிய மாதிரி அவர்களின் நடத்தையைக் கட்டுப்படுத்தியது என்பதில் ஐயமில்லை. இந்தியாவில் காந்தி-நேரு காட்டிய சகிப்புத் தன்மை,

பரந்தமனப்பான்மை என்பன இலங்கைத் தலைவர்களுக்கு முன்மாதிரியாக அமையவில்லை.

இலங்கை, பௌத்தர்கள் பெரும்பான்மையாக உள்ள நாடு. பர்மாவும் இலங்கையைப் போன்றே பௌத்த நாடு. இன்று இரு நாடுகளும் பௌத்த துறவிகளின் தீவிரவாத நடவடிக்கைகளால் உலகின் கவனத்தைப் பெற்றுவிட்டன. இந்த நிகழ்வுகளுக்கும் சமயத்திற்கும் உள்ள உறவு என்ன? இது சமயத்தோடு உள்ள ஆழமான உறவால் எழுவதா? உதாரணமாக லத்தீன் அமெரிக்காவைக் கத்தோலிக்கம் லத்தீன் அமெரிக்காவை ஸ்பானியா கைப்பற்றும் போது வகித்த பாத்திரத்தை எடுத்துக் கொள்வோம். இன்கா (INCA) பொற்சுரங்கம் பற்றிய பேராசையோடும், ஐரோப்பா எங்கும் சிபிலிஸ் நோய் பரவுவதற்குக் காரணமாக இருந்த பாலியல் வேட்டையும் ஸ்பானியர்களை ஊக்கியதாயினும் கத்தோலிக்க மத உணர்வு அங்கு முக்கியம் பெற்றது. இன்றைய பௌத்த தீவிரவாதிகள் அடிப்படையில் சாரம் இல்லாதவர்கள். ஸ்பானியாவின் மிசனறிகளின் கத்தோலிக்க இறையியல் உண்மையான தீவிர ஈடுபாட்டை வெளிப்படுத்தியது. அது போலியானது அல்ல. கத்தோலிக்கர்களால் லத்தீன் அமெரிக்கர்களை தம்மதத்திற்கு மாற்ற முடிந்தது. அத்தகையதொரு ஆன்மீகப்பலம் இன்றைய மதத் தீவிரவாதிகளுக்கு இல்லை. இலங்கையில் இவர்களால் எதைச் செய்ய முடியும்? அரசியல் குழப்பத்தைத் தூண்டிவிடவே முடியும்.

சனத்தொகைக் காரணிகள், அரசியல் தலைமைத்துவம் என்பனவற்றை விட வேறு நான்கு, ஐந்து காரணிகளும் மலேசியாவின் உறுதி நிலைக்கும், அங்கு இனத்துவ உறவுகள் மேல்நிலையில் இருப்பதற்குச் சாதகமானவையாக அமைந்துள்ளன. இருந்தாலும் அங்கும் சில எதிர்மறை அம்சங்களும் உள்ளன. (உதாரணமாக மலேசியர்கள் எமது ஆக்களைப் போன்றே சோம்பேறிகள்) மலேசியாவின் சராசரி தனிநபர் வருமானம் 10,000 டொலர்களாகும். அங்கு பொதுநிதியும் உறுதி நிலையில் உள்ளது. வரியமைப்பு பரவலாக்கப்பட்டுள்ளதோடு, நன்கு நிர்வகிக்கப்படுகிறது. வரவு-செலவுத் திட்டப்பற்றாக்குறை கடன்பளு என்பனவும் இலங்கையின் நிலையை விட நன்றாக உள்ளது. இதனால் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கூடிய விகிதாசாரத்தை சுகாதாரம், கல்வி என்ற இரண்டிலும் அந்நாடு செலவிடுகிறது. அங்கு ஊழல் இருக்கிறது. ஆனால், எனது மனப்பதிவுப்படி பர வலாக இல்லை. இலங்கையின் அளவிற்கு அளவு மீறிப்போகவும் இல்லை. பொது நிர்வாகமும் அரச சேவைகளும் மிக நன்றாகச் செயற்படுகின்றன. அருகே உள்ள சிங்கப்பூரின் சிறந்த முன்மாதிரி இதற்குத் துணையாகிறது போலும், மலேசியாவில் அரசியல் உறுதி நிலை உள்ளது. இங்கு ஜனாதிபதியை அசைக்கவே முடியாது. ஆயினும் அவர் (ஷெல்லியின் கவிதை ஒன்றில் வரும்) ஒஸ்மான்டியஸ் பேரரசன் போன்றவர். அடிப்படையான பலவீனங்கள் சில இங்கே உள்ளன. அதனால் இது நிலைக்காது. மலேசியாவில் ஜனநாயகம் ஸ்திரமாக உள்ளது. வெட்கம்கெட்ட தேர்தல் மோசடிகள்

**அயலில் சிங்கப்பூர் நாட்டில் லீ குவான் யூ நடந்துகொண்ட விதம் மலாயத் தலைவர்களுக்கு கடிவாளம் பூட்டிய மாதிரி அவர்களின் நடத்தையைக் கட்டுப்படுத்தியது என்பதில் ஐயமில்லை. இந்தியாவில் காந்தி–நேரு காட்டிய சகிப்புத்தன்மை, பரந்த மனப்பான்மை என்பன இலங்கைத் தலைவர்களுக்கு முன்மாதிரியாக அமையவில்லை**


இல்லை; இலங்கை அரசியலமைப்புக்கான 18 ஆவது திருத்தத்தைப் போன்ற வகையிலான அதிகார அபகரிப்புகள் இல்லை. அவை பற்றிய யோசனைகளும் அங்கு எழவில்லை. மக்களும் முக்கியமாக அரசாங்கமும் சட்டம், ஒழுங்கு, நீதித்துறை ஆகியவற்றை மதித்து நடக்கும் பண்பாடு உள்ளது. சுருங்கக் கூறுவதாயின் மலேசிய அரசு நோயுற்ற ஒரு நிறுவனம் அல்ல. அது ஆரோக்கியமாக உள்ளது. மக்களும் இனக்குழும மோதல்களால் தாழ்ந்து போகவில்லை.

நான் ஒரு உதாரணத்தைக் கூறி மலேசியாவின் முன்னேறிய நிலையை எடுத்துக்காட்டி இக்கட்டுரையை முடிக்கிறேன். அங்கு முச்சக்கர சைக்கிள் வண்டிகளை எங்கும் காணலாம். அவற்றின் சேவை இலங்கையைப் போல் அல்லாமல் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. ஒரு மணித்தியாலம் அதில் பயணம் செய்தால் 40 றிங்கற்ஸ் கூலிகொடுக்க வேண்டும். (ஒரு மலேசியன் றிங்கற் இலங்கையின் 40 ரூபாவிற்கு சமம்) அதன் ஓட்டுநர்கள் வாடிக்கையாளர்களையும் சுற்றுலாப் பயணிகளையும் ஏமாற்றுவதில்லை. ஒரு நாளுக்கு நான்கு மணித்தியாலம் முதுகு முறியும் வேலையாக இருந்தாலும் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்காக வருமானம் கிடைக்கிறது. (ஒருநாளுக்கு ரூபா 6560/=) உழைப்பாளி வகுப்பின் அடிமட்டத்தினரின் வருமான அளவும், அவர்களது வாழ்க்கைத் தரமும் எனது அபிப்பிராயத்தில் திருப்தியை அளிக்கின்றன. அங்கு சேவைகளும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. ■

சர்வதேச அரசியல்

# முதலாம் உலகயுத்தத்திற்குப்பிறகு கடந்துவிட்ட ஒரு நூற்றாண்டு

## 2014ஆம் ஆண்டில் 1914ஆம் ஆண்டு பற்றிய ஒரு மீள்பார்வை



யோசப் எஸ்.நை



2014ஆம் ஆண்டின் நிகழ்வுகளிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ளும் போது ஆய்வாளர்கள் வரலாற்று ஒப்பீடுகளை அவதானமாகச் செய்ய வேண்டும். போர் தவிர்க்க முடியாதது என்ற நினைப்பு உள்ளவர்கள் குறிப்பாக அவதானமாகப் பேசுதல் வேண்டும். போர் தவிர்க்க முடியாதது அல்ல. ஆனால் தவிர்க்க முடியாது என்று சிந்தித்தால் அதுவே போரைத் தவிர்க்க முடியாததாக ஆக்கி விடும்

நவீன வரலாற்றின் திருப்புமுனையாக அமைந்த முதலாம் உலகப் போர் தொடங்கி இன்று நூறாண்டுகள் கடந்துவிட்டன. முதலாம் உலக யுத்தம் 20 மில்லியன் மக்களைக் கொன்று குவித்தது. அன்றைய ஐரோப்பாவின் இளையதலைமுறையின் பெரும்பங்கினரை மண்ணில் புதைத்தது. ஆயினும் அந்த யுத்தம் ஐரோப்பாவையும், அதற்கு வெளியே உள்ள முழு உலகையும் அடியோடு மாற்றிவிட்டது.

முதலாவது உலக யுத்தம் மக்களை மட்டும் அழிக்கவில்லை. ஜேர் மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, ரஷ்யா என்ற மூன்று பேரரசுகளையும் அது அழித்தது. அத்தோடு ஐரோப்பாவின் எல்லையில் நிமிர்ந்து நின்ற ஒட்டோமன் துருக்கிப் பேரரசையும் சரித்து வீழ்த்தியது. நான்கு பேரரசு களை ஒழித்துக்கட்டிய இந்த யுத்தத்திற்கு முன்னர் உலகின் அதிகாரச் சம நிலை ஐரோப்பாவை மையம் கொண்டிருந்தது.

யுத்தத்தின் பின்னர் ஐக்கிய அமெரிக்காவும், ஜப்பானும், உலக வல்லர சுகளாக எழுச்சி பெற்றன. யுத்தத்தின் பயனாக ரஷ்யாவில் 1917ஆம் ஆண்டில் புரட்சி வெடித்தது. அது பாசிசத்தின் தோற்றத்திற்கு வித்திட் டது. 20ஆம் நூற்றாண்டின் கருத்தியல் போருக்கான அடிப்படையையும் ரஷ்யப்புரட்சி உருவாக்கியது. உலகை உலுக்கிய இக்கருத்தியல் போர் விரிவடையவும் பரவலாக்கப்படவும் ரஷ்யப் புரட்சியும் அதன் மூல கார ணியான உலக யுத்தமும் உதவின.

முதல் உலக யுத்தம் என்ற பேரழிவு ஏன் ஏற்பட்டது? யுத்தம் ஆரம்பித்ததும் ஜேர்மன் நாட்டு, அதிபராக இருந்த தியோபோல்ட் வொன் பெத்மான் ஹொல்வேக்கைப் பார்த்து ஒருவர் இக்கேள்வியைக் கேட்டார். காரணம் என்ன என்பது எனக்குத் தெரிந்தால் தானே சொல்ல முடியும்? என்றார் ஹொல்வேக். ஒரு வேளை தன் மீது பழிவிழாமல் தப்பிக்கொள்ள இப்படிச் சொன்னாரோ தெரியவில்லை. இதேபோன்றுதான் பிரித்தானியாவின் வெளிவிவகார அமைச்சர் சேர் எட்வாட் கிறேயும் வாதிட்டார்.

'அதனை (யுத்தத்தை) எந்த ஒரு தனி மனிதனாலும் நிறுத்தியிருக்கவே முடியாது. என்று தான் நம்புவதாகக் கூறிய கிறே யுத்தத்தின் தவிர்க்க முடியாமையை எடுத்துக்காட்டினார்.

நான் இப்போது எழுப்பும் வினா மீண்டும் ஒரு பேரழிவு யுத்தம் வரப்போகிறதா என்பதே. 'சமாதானத்தை ஒழித்த போர்' என்ற சுவாரஸ்யமான நூலை எழுதியிருக்கும் மார்கிரட் மக்மில்லன் 'ஒரு நூற்றாண்டுக்கு முன் அன்று ஜேர்மனியும் பிரித்தானியாவும் வரிந்து கட்டிக்கொண்டு நின்ற மாதிரி ஐக்கிய அமெரிக்க - சீன உறவுகள் இன்று இருக்கின்றன. இந்த ஒப்பீட்டை ஒரு கவலை தரும் விடயமாகச் சொல்ல வேண்டும் என்று குறிப்பிடுகிறார். '1914 ஆம் ஆண்டிற்கும் இன்றைய நிலைக்கும் ஒரு பொதுத்தன்மை இருக்கின்றதென்றால் அது ஒன்றும் நடக்காது என்ற அசட்டையீனம் தான்' என்று 'இகொனமிஸ்ட்' சஞ்சிகையும் எழுதியிருந்தது. சில அரசியல் விஞ்ஞானிகளும் இதேபோன்ற வாதத்தை முன்வைத்திருக்கிறார்கள். உதாரணமாக சிக்காக்கோ பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான 'MEARS HEIMER', 'ஒளிவு மறைவின்றி நேரடியாகச் சொல்வதானால் சீனா சமாதான வழியில் மேல் எழும்பவே முடியாது' என்று கூறியுள்ளார்.

வரலாற்று ஒப்பீடுகள் எச்சரிக்கைகள் என்ற வகையில் பயனுடையவை. ஆனால், அவை ஒரு நிகழ்வின் வரலாற்றுப் போக்கின் தவிர்க்க முடியாமையை அறிவிக்கும் போது ஆபத்தானவை ஆகிவிடுகின்றன. முதலாம் உலக யுத்தம் தவிர்க்க முடியாததாய் இருக்கவில்லை. ஜேர்மனி பலம்மிக்க நாடாக எழுச்சி பெற்றதும் அதன் அதிகாரப் பலத்தைக் கண்டு பிரித்தானியா அடைந்த பய உணர்ச்சியும் யுத்தம் ஏற்படுவதைச் சாத்தியமாக்கியது. அத்தோடு ரஷ்யாவின் அதிகாரப்பலத்தின் எழுச்சியால் ஜேர்மனி அச்சம் கொண்டதும் யுத்தத்திற்கு காரணமாயிற்று. இதனைவிட இன்னும் பலகாரணங்கள் இருந்தன. இவற்றுள் மனிதர்களின் தவறுகளும் காரணமாயிருந்தன. இன்று ஐக்கிய அமெரிக்காவின் அதிகாரப் பலத்திற்கும் சீனாவின் அதிகாரப் பலத்திற்கும் இடையிலான வேறுபாடு 1914 இல் ஜேர்மனி - பிரித்தானியா இடைவெளியை விட மிகப்பெரிது. 1914 இன் நிலையை இன்றைய நிலையுடன் ஒப்பிடும்போது முதலாம் உலக யுத்தம் பற்றிய பல பொய்ப்புனைவுகளைக் களைய வேண்டும். உதாரணமாக ஜேர்மனி ஒரு தற்காப்பு யுத்தத்தை வேண்டுமென்றே தொடக்கியதென்பதில் உண்மையில்லை. அக்காலத்தின் உயர் தலைவர்கள் கூட இதனை நம்பவில்லை. சிலர் கூறுவது போல் முதலாம் உலக யுத்தம் வெறும் விபத்து; தற்செயல் நிகழ்வு என்றும் கூற முடியாது. ஆஸ்திரியா திட்டமிட்டே யுத்தத்தில் இறங்கியது. எழுச்சி பெற்றுக் கொண்டிருந்த சிலேவிய (Slavic Nationalist) தேசிய வாதத்தில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கம் அதற்கு இருந்தது. ஆயுதக் குவிப்புப் போட்டியால் தான் யுத்தம் ஏற்பட்டது என்பதும் மேலோட்டமான ஒரு கருத்தாகும்.

இன்றைய உலகம் 1914இன் உலகத்தைவிட பல முக்கிய விடயங்களில் வேறுபட்டது. உலகத் தலைவர்களிடம் இன்று அணு ஆயுதங்கள் உள்ளன. இவை உலகில் எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று எதிர்வு கூறக்கூடிய பளிங்குக் கல் ஒன்றை இத்தலைவர்கள் கையில் வைத்துக் கொண்டிருப்பதற்கு ஒப்பானது. ஆம்! தலைவர்கள் ஒரு 'கிறிஸ்ரல் போல்' ஐ (Crystall ball) கையில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அன்று பேரரசர் கெய்சருக்கோ, ரஷ்யாவின் சார் மன்னனுக்கோ இப்படி ஒரு எதிர்வுகூறும் கல் இருந்தால் 1918 இல் அவர்களின் சிங்காசனங்கள் தூக்கி எறியப்படும், பேரரசுகள் அழியும் என்ற எதிர்வுகூறல் அவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கும். கியூபாவின் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை (CUBAN Missile CRISIS) நெருக்கடி தோன்றிய போதும் ஐக்கிய அமெரிக்காவினதும் சோவியத் யூனியனினதும் தலைவர்களிடம் பளிங்குக் கற்கள் கையில் இருந்தன. Crystall ball effect எனப்படும் இந்த விடயம் முக்கியமானது. இன்று ஐக்கிய அமெரிக்கா, சீனா என்ற இரு நாட்டுத் தலைவர்கள் மீதும் இதன் தாக்கம் உள்ளது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

1914 ஐ விட இன்று போர்க் கருத்தியல் பலமிழந்த நிலையில் உள்ளது. இது இன்னொரு வேறுபாடு. அன்று போர் தவிர்க்க முடியாதது என்ற விதிவாத நோக்கு ஆழமாக வேரோடியிருந்தது. சமூக டார்வினசத்தின் வாதத்தின்படி போர் வரவேற்கப்பட வேண்டியது. ஏனென்றால் அது கோடை மழை போன்று 'வானத்தை வெளிப்பாக்கிவிடும்' முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்று கருதப்பட்டது.

உலகம் அன்று எதிர்நோக்கிய நெருக்கடி குறித்து வின்சன்ட் சேர்ச்சில் இவ்வாறு எழுதினார். 'எங்கும் விநோதமான ஒரு உணர்வு நிலை பரவிற்று. செல்வம் கொழித்த போதும் மனத்திருப்தி இருக்கவில்லை. எல்லா நாடுகளும் சச்சரவை நோக்கி சன்னதத்துடன் நகர்ந்தன. நாட்டுக்கு வெளியேயும் உள்ளேயும் சர்ச்சைகள். சமய உணர்வு அருகிப் போய் அதனிடத்தில் தேசிய உணர்வு பொங்கிப் பெருகியது. ஒவ்வொரு நாட்டுக்குள்ளும் தேசிய உணர்வு நீறு பூத்த நெருப்பாக உள்ளே கனன்று கொண்டிருந்தது.

(53ஆம் பக்கம் பார்க்க...)

பிராந்திய அரசியல்



எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் என்னைக்காக்க இந்தியா உள்ளது என்ற நம்பிக்கையோடு ஜனவரி 12ஆம் திகதி ஷேக் ஹசீனா பதவியேற்றிருக்கிறார். எதிர்க்கட்சிகள் தேர்தல் புறக்கணிப்பிற்கு சொன்ன காரணம் ஹசீனா அரசின் கீழ் நடக்கும் தேர்தல் நியாயமாக இருக்காது என்பதுதான்

# என்ன நடக்குது வங்க தேசத்தில்?

சென்ற ஜனவரி 5 அன்று நடைபெற்ற வங்க தேச நாடாளுமன்றத்தேர்தலில் தற்போதைய ஆளும் கட்சியான ஷேக் ஹசீனா தலைமையில் உள்ள அவாமி லீக் வெற்றி பெற்றது. தேர்தல் நடப்பதற்கு முன்னதாகவே 153 அவாமி லீக் வேட்பாளர்கள் வெற்றி பெற்றுவிட்டனர். அதெப்படி? எப்படியெனில் இந்தத் தொகுதிகளில் வேறு யாருமே போட்டியிடவில்லை என்பதுதான். முக்கிய எதிர்க் கட்சியான கலீடா சியா தலைமையில் உள்ள வங்க தேசியக் கட்சியின் 18 கட்சிக் கூட்டணி தேர்தலைப் புறக்கணித்ததன் விளைவு இது. போட்டியிருந்த 147 தொகுதிகளிலும் 102 ஐக் கைப்பற்றிய அவாமி லீக், 300 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட வங்கதேச நாடாளுமன்றத்தில் (ஜாதியோ சன்ஷாட்) மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெற்றுள்ளது.

பெரும் கலவரங்கள், தீ வைப்புகள், துப்பாக்கிச் சூடுகள் மத்தியில்தான் தேர்தல் நடந்து முடிந்துள்ளது. வெறும் 22 சத வாக்குகள்தான் பதிவாயின. 41 வாக்குச் சாவடிகளில் வாக்களிக்க ஒருவர் கூட வரவில்லை. 570 வாக்குச் சாவடிகளில் தேர்தலே நடைபெறவில்லை என்பதை தேர்தல் ஆணையமே ஏற்றுக் கொண்டுள்ளது. 600 வாக்குச் சாவடிகள் தாக்கப்பட்டன. 127 சாவடிகள் எரிக்கப்பட்டன. வாக்குப் பதிவு நாளில் மட்டும் 18 பேர் கொல்லப்பட்டனர். தேர்தல் தொடர்பான கலவரங்களில் இறந்தோர் எண்ணிக்கை 21. கடந்த 2013 அக்டோபரிலிருந்து தேர்தல் நாள் வரை கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை சுமார் 180.

முக்கிய எதிர்க் கட்சியான வங்க தேசியக் கட்சியின் தலைவர் பேகம் கலீடா சியா காவலில் வைக்கப்பட்டார். இன்னொரு முக்கிய தலைவர் எர்ஷாத் மருத்துவமனையில் காவலில் வைக்கப்பட்டார். மூன்றாவது முக்கிய கட்சியான வங்கதேச ஜமாத் ஏ இஸ்லாமி ஆறு மாதங்களுக்கு முன்னரே தேர்தலில் பங்கேற்க வழி இல்லாமல் தடை செய்யப்பட்டது. அவ்வமைப்பின் தலைவர்களில் முக்கியமானவரான அப்துல் காதர் மொல்லாஹ் தேர்தலுக்குச் சில வாரங்கள் முன்னர் (டிசம்பர் 12) தூக்கிலிடப்பட்டார். மற்ற முக்கிய தலைவர்களும் தூக்கிலிடப் படவுள்ளனர்.

இந்தப் பின்னணியில்தான் பேகம் ஷேக் ஹசீனாவின் வெற்றி நடந்தேறியுள்ளது. ஏதோ எதிர்க்கட்சிகள் மட்டும் புறக்கணித்து நடந்த தேர்தல் அல்ல இது. மக்களும் இத்தேர்தலைப் புறக்கணித்துள்ளனர் என்பதுதான் மேற்கண்ட தரவுகள் சொல்லும் செய்தி. கலீடா சியா இந்த வெற்றியை ஒரு கேலிக் கூத்து என்று கூறியுள்ளார்.. அமெரிக்க அரசு இந்தத் தேர்தல் தங்களுக்கு ஏமாற்றமளிப்பதாகக் கூறி

எதிர்க்கட்சிகள் தேர்தலைப் புறக்கணிப்பது வங்கதேசத்தில் புதிதல்ல. 1996இல் ஹசீனாவின் அவாமி லீக் தேர்தலை புறக்கணித்தது. கலிதா சீயா வென்றார் எனினும் கடுமையான போராட்டங்களின் விளைவாக மறுதேர்தல் நடத்த வேண்டியதாயிற்று. அதில் ஹசீனா வென்றார். இப்போதும் அப்படி நடக்குமா?



யுள்ளது. பிரிட்டன், அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய யூனியன் முதலியன மறு தேர்தல் நடத்த வேண்டும் எனக் கோரியுள்ளன.

எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் தன்னைக் காப்பதற்கு இந்தியா உள்ளது என்கிற நம்பிக்கையோடு ஜனவரி 12ஆம் திகதி ஷேக் ஹசீனா பதவி ஏற்றுள்ளார்.

எதிர்க் கட்சிகள் தேர்தல் புறக்கணிப்பிற்குச் சொன்ன காரணம் ஹசீனா அரசின் கீழ் நடக்கும் தேர்தல் நியாயமாக இருக்காது என்பதுதான். தேர்தலின்போது முந்தைய அரசு பதவியில் இருக்கக்கூடாது; தேர்தல் நடத்துவதற்கான ஒரு இடைக்கால அரசின் கீழ்தான் (caretaker government காபந்து அரசு) தேர்தல் நடத்தப்பட வேண்டும் என 1996இல் வங்கதேச அரசியல் சட்டம் திருத்தப்பட்டது. ஆனால் ஷேக் ஹசீனா 2012இல் 15ஆவது சட்டத் திருத்தம் ஒன்றை இயற்றி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இந்தத் திருத்தத்தை இல்லாமல் செய்தார். எனினும் இதை எதிர்க் கட்சிகள் ஏற்கவில்லை. காபந்து அரசுதான் தேர்தல் நடத்த வேண்டும் என்றனர், காபந்து அரசு என்பதை ஏற்கமுடியாது, வேண்டுமானால் எதிர்க் கட்சிகளும் பங்கு பெறக்கூடிய பொது அரசு ஒன்றின் கீழ் தேர்தலை நடத்தலாம் என ஹசீனா சற்றுக் கீழே இறங்கி வந்தார். எனினும் அப்போதும் கூட ஹசீனா தலைமையிலான அரசாகத்தான் அது இருக்கும், பெரிய மாற்றங்கள் ஏதும் வந்து விடாது என எதிர்க் கட்சிகள் இதை ஏற்கவில்லை. வங்கதேச அரசியல் சட்டத்தின்படி அரசின் பதவிக் காலம் முடிந்து 90 நாட்களுக்குள் தேர்தல் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என்பதைக் காட்டி ஹசீனா ஜனவரி 5இல் தேர்தலை நடத்தினார்.

இப்படி எதிர்க்கட்சிகள் தேர்தலைப் புறக்கணிப்பது வங்க தேசத்தில் புதிதல்ல. 1996இல் ஹசீனாவின் அவாமி லீக் தேர்தலைப் புறக்கணித்தது. கலீடா சியா வென்றார் எனினும் கடுமையான போராட்டங்களின் விளைவாக மறு தேர்தல் நடத்த வேண்டியதாயிற்று. அதில் ஹசீனா வென்றார்.

இப்போதும் அப்படி நடக்குமா? பொறுத்துத்தான் பார்க்க வேண்டும். நிச்சயமாக ஹசீனாவின் இந்த வெற்றியை அடுத்த ஐந்தாண்டுகள் தம்மை ஆள்வதற்கு மக்கள் அவருக்கு அளித்த அதிகாரமாகக் (mandate) கருத இயலாது. ஷேக் ஹசீனாவை ஆதரிக்கும் டெய்லி ஸ்டார் நாளிதழே இதை ஒரு உள்ளீடற்ற வெற்றி எனவும் இதை மக்கள் அளித்த அதிகாரமாகக் கருத இயலாது எனவும் கருத்துரைத்துள்ளது.

### இந்தியத் தலையீடும் வங்க மக்களின் அதிருப்தியும்

இந்தியாவைப் பொறுத்தமட்டில் எத்தனை முறை மூக்குடைபட்டபோதும் அண்டை நாடுகளின் மூத்த அண்ணனாகத் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளும் முயற்சியை அது கைவிடுவதில்லை. மூத்த பத்திரிகையாளர் சுகாசினி ஹைதர் இப்படி மூக்குடைபட்ட மூன்று நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டியுள்ளார். 2008 நேபாளத்



அ.மார்க்ஸ்

ஒரு பக்கம் வங்கதேச பாரம்பரியத்தில் உள்ள சகிப்புத்தன்மையும் மதச்சார்பின்மையும். மறுபக்கம் வளர்ந்துவரும் இஸ்லாமிய அடிப்படைவாதம் இரண்டிற்கு இடையிலான மோதற்களமாக வங்கதேசம்

தேர்தலின்போது இந்திய அரசின் அப்போதைய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் வெளிப்படையாக நேபாள காங்கிரஸுக்கும் அதன் தலைவர் சுஷில் கொய்ராளாவுக்கும் ஆதரவு தெரிவித்தார். ஆனால் தேர்தலில் அக்கட்சி மூன்றாவதாகத்தான் வர முடிந்தது. இந்தியாவால் வெறுக்கப்பட்ட மாவோயிஸ்டுகள் அமோக வெற்றி பெற்றனர். அப்படியும் இம்முறை (2013) இந்திய அயலுறவுச் செயலாளர் சுஜாதா சிங் நேரடியாகத் தலையிட்டு, தேர்தலைச் சற்றுத் தள்ளி வைக்க வேண்டும் என்கிற மாவோயிஸ்டுகளின் கோரிக்கையை முறியடித்த கதையை நேபாளத் தேர்தல் தொடர்பான என் கட்டுரையில் விரிவாகச் சொல்லியுள்ளேன்.

2012இல் நடந்த மாலைதீவுத் தேர்தலில் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்ட முகம்மது வாகீதை அவசரமாக மன்மோகன் சிங் பாராட்டினார். பின் அது ஒரு அப்பட்டமான ஜனநாயக விரோதச் செயல் என்பது வெளிப்பட்ட பின் பதவி இறக்கப்பட்ட நஷீதை ஆதரிக்க வேண்டிய நிலை இந்தியாவுக்கு ஏற்பட்டது.

இந்த வங்கதேசத் தேர்தலின் போதும் (2014) இந்தியா ஷேக் ஹசீனாவுக்கு ஆதரவாக வெளிப்படையாகச் செயற்பட்டது. எதிர்க்கட்சிகளின் தேர்தல் புறக்கணிப்பைக் குலைக்க முயற்சித்தது. முக்கிய எதிர்க்கட்சி ஒன்றின் தலைவரான முகம்மது உசேன் எர்ஷாத்தை சுஜாதா சிங் நேரில் சந்தித்துத் தேர்தல் புறக்கணிப்பைக் கைவிடுமாறு வற்புறுத்தினார். எர்ஷாத் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் இதை வெளிப்படையாகப் போட்டுடைத்தார். ஜமாத் ஏ இஸ்லாமியுடன் கூட்டணியில் உள்ள கட்சிகள் அதிகாரத்திற்கு வந்துவிடக்கூடாது என மன்மோகன் சிங் தன்னிடம் சொன்னதாகக் கூறினார். கலீடா சியாவின் வங்கதேசியக் கட்சிதான் ஜமாத் ஏ இஸ்லாமியுடன் கூட்டணி வைத்துள்ள கட்சி என்பது குறிப்பிடத்தக்கது.

வங்கதேசத்தில் தன்னுடைய விருப்பத்திற்கு இயங்கும் ஒரு ஆட்சி அமைய வேண்டும் என இந்தியா நினைப்பதற்கு இரண்டு நோக்கங்கள் உண்டு. எந்தக் காரணம் கொண்டும் பாகிஸ்தானுடன் நல்லுறவைப் பேணும் ஆட்சி வங்க தேசத்தில் அமைந்து விடக்கூடாது என்பது ஒன்று, ஜமாத் ஏ இஸ்லாமியைப் பொறுத்தமட்டில் 1971 விடுதலைப் போரின் போதே, வங்கதேசம் பாகிஸ்தானிலிருந்து பிரியக்கூடாது என நின்ற அமைப்பு அது. பாக். இராணுவத்திற்கு ஆதரவாக இருந்தது தவிர, பெரிய அளவில் வங்க தேசப் பிரிவினையை ஆதரித்த அறிவு ஜீவிகள் முதலானோர் கொல்லப்படுவதற்கும் வங்கதேசப் பெண்கள் பாக் இராணுவத்தால் வன்புணர்ச்சி செய்யப்படுவதற்கும் காரணமாக இருந்த ஒரு அடிப்படைவாத அமைப்பு என்கிற அடிப்படையில்தான் இன்று அது தடை செய்யப்பட்டுள்ளது. பன்னாட்டுக் குற்றங்களுக்கான விசாரணை ஆயத்தின் (International Crimes Tribunal) மூலம் இன்று அதன் போர்க் குற்றங்கள் விசாரிக்கப்பட்டு அதன் தலைவர்களுக்கு ஆயுள் மற்றும் மரண தண்டனைகள் வழங்கப் படுகின்றன.

இந்தியாவின் அடுத்த கரிசனம் சீனாவுக்கு எந்த வகையிலும் இடம் கொடுத்துவிடக்கூடாது என்பது. இந்த அம்சத்தில் வங்கதேசம் குறித்த அமெரிக்காவின் அணுகல் முறையும் அப்படித்தான் உள்ளது. வங்கதேசத்தைத் தனக்கு நெருக்கமாக வைத்துக் கொள்ள இந்தியாவுக்கு எத்தனையோ வழிகள் உண்டு. இந்திய வங்க எல்லைப்பிரச்சினை, டீஸ்டா நதி நீர்ப் பிரச்சினை முதலியவற்றில் சுமுகமான தீர்வைக் காணலாம். மிக ஏழ்மையான நாடுகளில் ஒன்றான வங்க தேசத்திற்குப் பொருளாதார, வணிக மற்றும் தொழில் ரீதியான உதவிகளைச் செய்யலாம். தொடர்ந்த போராட்டங்கள், வேலை நிறுத்தங்கள் மூலமாகச் சரிந்துள்ள அதன் முக்கிய தொழில்களில் ஒன்றான ஆயத்த ஆடைத் தொழிலை மேம்படுத்த உதவலாம். அதை எல்லாம் விட்டுவிட்டு அதன் உள்நாட்டு அரசியலில் தலையிடுவது, ஏதேனும் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு ஆதரவாக நிற்பது என்பதெல்லாம் அற அடிப்படையில் தவறானது என்பது தவிர புத்திசாலித்தனமானதும் அல்ல. சற்றுமுன் குறிப்பிட்டதுபோலப் பல நேரங்களில் அது தவறாக முடிந்துவிடுகிறது. அது தன் விருப்பத்திற்குரிய கட்சியை ஆட்சியில் அமர்த்துவதில் வெற்றி பெறும்போதும் கூட அந்நாட்டு மக்களிடமிருந்து அது அந்நியப்பட்டுப் போகிறது. அண்டை நாட்டு மக்கள் மத்தியில் இப்படி ஒரு வெறுப்பிற்கு ஆளாவது நல்லதல்ல என்பதை இந்தியா உணர்வதில்லை.

டாக்கா ட்ரிப்யூனின் சமீபத்திய இதழ் ஒன்றில் முக்கிய சமூக ஊடகச் செயற்பாட்டாளரான சவ்கத் ரபி 'ஏன் இந்தியா தன் வங்கதேசக் கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும்?' என்கிற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றை சுகாசினி சுட்டிக்காட்டுகிறார். எதிர்க்கட்சித் தலைவர்களை எல்லாம் சிறையிலிட்டு இப்படி ஒரு போலித் தேர்தலுக்கு ஆதரவாக ஹசினாவை ஆதரித்து இந்தியா நிற்பதைச் சுட்டிக்காட்டும் ரபி, இந்தியா மீது வைக்கப்படும் சில குற்றச்சாட்டுகளை இப்போது பலரும் நம்பத்தொடங்கி விட்டனர் என்கிறார். வங்கதேசத் தலைவர்கள் சிலருக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை இந்தியா பார்த்துக் கொள்கிறது; வங்கதேச வீரர்களைப் போல உடையணிந்து இந்தியப் படையினர் பல இரகசிய வேலைகளைச் செய்கின்றனர்; சிறப்பு நடவடிக்கைகளுக்கான படைகளுக்குப் பயிற்சி அளித்து அனுப்புகிற வேலையை இந்தியா செய்து வருகிறது; ஹசீனாவிற்கு ஆதரவான நிலைப்பாடு எடுக்கவேண்டுமென மேற்குலக நாடுகளை இந்தியா வற்புறுத்தி வருகிறது முதலான குற்றச்சாட்டுகளைத்தான் மக்கள் நம்பத் தொடங்கி விட்டதாக ரபி எடுத்துக் காட்டுகிறார். இவை அனைத்தும் உண்மைகள்தானா என்கிற கேள்வி ஒரு பக்கம் இருந்தபோதும், இப்படி

யான ஐயங்கள் அண்டை நாட்டு மக்கள் மத்தியில் உருப்பெறுவது இந்தியாவிற்கு நல்லதல்ல.

## வங்கதேசம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள்

வங்கதேசம் இன்று எதிர்கொண்டுள்ள சிக்கல்களைப் புரிந்துகொள்ள சற்றே அதன் வரலாற்றைப் பின்னோக்கிச் சென்று பார்க்க வேண்டும்.

உலகில் அதிக அளவில் முஸ்லிம்கள் வசிக்கும் நாடுகளில் மூன்றாவதாக வருவது வங்க தேசம். அதன் 14 கோடி மக்கள் தொகையில் 85 சதம் பேர் முஸ்லிம்கள். எனினும் வங்க தேசப் பண்பாட்டில் மதச்சார்பின்மைக்கு ஒரு முக்கிய பங்குண்டு. ஒன்றாக இருந்த வங்கதேசத்தில் 18, 19ஆம் நூற்றாண்டுகளில் முகிழ்ந்த மறுமலர்ச்சிச் சிந்தனைகளை நாம் அறிவோம்.

1971இல் ஹசீனாவின் தந்தையும் வங்க பந்து என மக்களால் நேசிக்கப்பட்டவருமான முஜிபுர் ரஹ்மானின் தலைமையில் முக்தி வாகினிப் போராளிகள் பாகிஸ்தானிலிருந்து வங்கதேசத்தை விடுவித்ததில் இந்தியா மட்டுமல்லாது அன்றைய சோவியத் ரஷ்யாவுக்கும் பங்கிருந்தது. சுதந்திர வங்கத்தை முஜிபுர் ரஹ்மான் ஒரு இஸ்லாமிய அரசாகக் கட்டமைக்காமல், அதை ஒரு மதச்சார்பற்ற, சோசலிச அரசு என்கிற ரீதியில் முன்நிறுத்தினார். மதச்சார்பின்மையை அடையாளப்படுத்தியே வங்கதேச அரசியல் சட்டமும் உருவானது. அது மாத்திரமல்ல, மதவாதக் கட்சிகளையும் இயக்கங்களையும் அவர் தடை செய்தார். குறிப்பாக சுதந்திரப் போரில் பாக் இராணுவத்திற்கு ஆதரவாக இருந்து, போர்க் குற்றங்களுக்கும் ஆளாகியிருந்த அடிப்படைவாத அமைப்பான ஜமாத் ஏ இஸ்லாமியை ஒடுக்குவது அவரது நோக்கமாக இருந்தது. தென் ஆசியாவில் அரசியல் இஸ்லாம் என்கிற கருத்தாக்கத்திற்கு வழி வகுத்தவரும், ஜமாத் ஏ இஸ்லாமி இயக்கத்தைத் தோற்றுவித்தவருமான மார்க்க அறிஞர் மவுலானா மவுதூதி அவர்களின் கருத்தியல்களை உயர்த்திப் பிடிக்கும் ஒரு அமைப்பு இது. ஒழுங்கும் கட்டுப்பாடும் மிகுந்த இவ் அமைப்பு வங்கதேசத்தில் ஒரு முக்கியமான அமைப்பு. எண்ணிக்கை அளவில் இன்றும் மூன்றாவது இடத்தில் அது வைக்கப்படுகிறது.

இந்தியாவையும் சோவியத் ரஷ்யாவையும் சார்ந்திருந்தது, மதச்சார்பின்மை மற்றும் சோஷலிசம் முதலியவற்றை முன்னிறுத்தியது, ஜமாத் ஏ இஸ்லாமி அமைப்பை ஒடுக்கியது ஆகியன இரு முக்கிய விளைவுகளுக்கு இட்டுச் சென்றன. ஒன்று, செழிப்பு மிக்க முஸ்லிம் அரசுகளின் ஆதரவு பெரிய அளவு வங்க தேசத்திற்கு இல்லாமற் போனது; மற்றது, மேற்குலக முதலாளிய அரசுகள் வங்கதேசத்திற்குப் பெரிய அளவு ஆதரவு காட்டாத நிலை. இந்தப் பின்னணியில் வங்கதேசம் கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானது. இன்னொரு பக்கம் வங்க பந்துவால் கட்டுப்படுத்த இயலாத அளவிற்கு நிர்வாக ஊழல்கள்; அப்புறம் தென் ஆசியாவிற்கே உரிய சாபக்கேடான குடும்ப அரசியல், எதேச்சாதிகாரம், சலுகை அரசியல் (nepotism) எல்லாம் முஜிபுரையும் அவரது அணுகல் முறைகளையும் பலவீனப்படுத்தின.

முஜிபுர் மிகச் சிறிய காலமே (1972 - 75) பதவியில் இருந்தார். எனினும் அதற்குள்ளும் அவர் தன் பாதையில் சில அடிப்படை மாற்றங்களைச் செய்ய வேண்டியதாயிற்று. இஸ்லாமிய நாடுகளின் மகாநாடுகளில் (OIC) அவர் பங்கேற்றார் (1974). இஸ்ரேலுடனான போர்களில் தன் நாட்டு மருத்துவர்களின் சேவைக்கு அவர் இடமளித்தார் (யோம் கிப்பூர், 1973).

முஜிப் அரசு சந்தித்த பொருளாதாரச் சரிவு மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது, ஆயுதம் தாங்கிய இடதுசாரிக் குழுக்களும் கூட தலையெடுத்தன. இராணுவம் இந்தச்சூழலைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது. வங்க தேசத்தின் இந்த 41 ஆண்டு கால வரலாற்றில் சுமார் 17 ஆண்டு காலம் (1975- 90, 2006 - 08) இராணுவ ஆட்சி நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. அரசியல் சட்டத்திற்கு முரணான இவ்வாட்சிகள் (illegal regimes) மக்கள் அளித்த அதிகாரத்தின் அடிப்படையில் ஆட்சியில் அமைந்தவை அல்ல. எனவே அவை தங்களின் நியாயப்பாட்டிற்கும் மக்களின் ஆதரவைப் பெறுவதற்கும் இஸ்லாமிய ஆளுகை என்கிற கருத்தாக்கத்தை முன்னிலைப் படுத்தின. ஜெனெரல்கள் சியா உர் ரஹ்மான், முகமது உசேன் எர்ஷாத் ஆகியோரது ஆட்சியில் (1975-90) இந்நிலை



தேர்தல் தினத்தன்று பிரதமர் ஹசீனாவின் அவாமி லீக் கட்சியின் ஆதரவாளர் ஒருவரை எதிர்க்கட்சியான வங்க தேசியக்கட்சியின் ஆதரவாளர்களும் ஜமாத்-ஏ-இஸ்லாமிக் கட்சியும் சேர்ந்து தாக்குகிறார்கள்

**போலித்தேர்தலின் மூலம் கிடைத்த அதிகாரமும் எதிர்க்கட்சிகள் மீதான அடக்கு முறையும் இந்தியாவின் ஆதரவும் எத்தனை நாளைக்கு ஹசீனாவைக் காப்பாற்றப் போகின்றன. தேர்தலுக்கு பிந்திய இன்றைய அமைதி எத்தனை நாளைக்கு நீடிக்கப்போகிறது?**

அதிகபட்சமாக இருந்தது. மதச்சார்பின்மை என்பது நீக்கப்பட்டு அல்லாஹ்வின் மீதான விசுவாசம் என்பது ஆட்சியின் அடிப்படையாக அரசியல் சட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டன.

பொதுச் சொல்லாடல்களில் இஸ்லாமிய ஆளுகை என்பது முதன்மைப்படுத்தப்பட்டது. இஸ்லாமியப் பல்கலைக்கழகம், முஸ்லிம் பிள்ளைகளுக்குக் கட்டாயமான இஸ்லாமியக் கல்வி என்பதாக அரசியலும் சமூகமும் பெரிய அளவில் இஸ்லாமிய மயப்படுத்தப்பட்டது. ஏராளமான மதரஸாக்களும் மசூதிகளும் புதிதாக உருவாயின. 1984இல் ஷரியத் சட்டமும், 1987இல் இஸ்லாம் அரசு மதமாகவும் அறிவிக்கப்பட்டன.

இவை முன்னிலைப்படுத்திய இஸ்லாமிய அடையாளம் மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகளுக்கு நெருக்கமாக வங்கதேசம் வருவதற்கு உதவியாக இருந்தது. வெளிப்படையாகவும் மறை முகமாகவும் வங்கதேசத்திற்குப் பொருளாதார உதவிகளும் கிடைத்தன. முஸ்லிம் நாடுகளின் இந்த உதவிகளுக்கு ஈடாக ஜமாத் ஏ இஸ்லாமி அமைப்பின் மீதிருந்த ஒடுக்கு முறைகள் நீக்கப்பட்டன. வெளிப்படையான ஒரு அரசியல் கட்சியாக அது இயங்கக் கூடிய நிலை ஏற்பட்டது. இராணுவ ஆட்சிகள் இவ்வாறு தம்மை நியாயப்படுத்திக் கொள்வதற்கு இஸ்லாமியச் சாய்வையும், மக்களுக்கு இஸ்லாம் மீது இருக்கும் பற்றையும் வெகுவாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு வரலாற்றில் வேறு பல எடுத்துக்காட்டுகளும் உண்டு. பாகிஸ்தானில் ஜெனெரல் சியா உல் ஹக் ஆட்சியும் இவ்வாறு இஸ்லாமிய மயமாக்கலை முதன்மைப்படுத்தியது நினைவிற்குரியது.

வங்கதேசத்தின் இராணுவ ஆட்சிகள் இன்னொரு பக்கம் சோவியத் ரஷ்யாவிலிருந்து விலகி மேற்கத்திய சாய்வை எடுத்தன. பனிப்போர்க் காலத்தில் இது நிகழ்ந்தது. இதன் விளைவாக மேற்கு நாடுகளின் ஆதரவோடு அமைந்த பன்னாட்டு நிதியங்களின் தலையீடும் மேற்கத்திய மயமும் வங்கதேசத்தில் சில பொருளாதார மற்றும் பண்பாட்டு மாற்றங்களை ஏற்படுத்தின. அதே நேரத்தில் யோம் கிப்பூர் போருக்குப் (1973 அரபு - இஸ்ரேல் போர்) பின் இஸ்லாமிய நாடுகளுக்கிடையே உருவான ஒற்றுமையின் பலன்களும் அதன் விளைவுகளும் அவற்றுக்கே உரித்தான வகையில் வங்கதேசத்தில் பிரதிபலித்தன. மேலை நாடுகளின் ஆஃப்கான் - ஈராக் படை எடுப்புகளுக்கு எதிராக அமைந்த தீவிரவாத எதிர்ப்பு இயக்கங்களில் வங்க தேசத்தவர்கள் பங்குபெறும் நிலையும் ஏற்பட்டது. ஷரியத் ஆட்சியை வலியுறுத்தி நூறுக்கும் மேற்பட்ட இஸ்லாமிய அமைப்புகள் உருவாயின, மேலை நாடுகளுக்கு எதிராக வெளிப்படையாக ஜிகாத்தை அறிவித்த ஹுஜி பி (HuJI B) இயக்கம், ஜமாதுல் முஜாஹிதீன் பங்களாதேஷ், ஹிஸ்புல் தாஹ்ரீர் பங்களாதேஷ் (HTB) முதலான தீவிரவாத இயக்கங்களும் தலை எடுத்தன. வங்கதேச வரலாற்றில் கடந்த இருபதாண்டுகள் இப்படித்தான் அமைந்தன.

ரஹ்மான் மற்றும் எர்ஷாத்தின் இராணுவ ஆட்சிகளின் மோசமான விளைவாக இஸ்லாமிய அடிப்படைவாத வளர்ச்சி அமைந்தது என்றாலும், வங்க விடுதலையின் தந்தை என்ற பதாகையைச் சுமந்திருந்த முஜிபின் ஒரு வகையான எதேச்சாதிகார அரசியலுக்கு மாறாக ஒரு பல கட்சி அரசியல் உருவாவதற்கும் அவை காரணமாக அமைந்தன.

எனினும் இந்தப் பல கட்சி ஆட்சி என்பது ஹசீனா, கலிடா என்கிற இரண்டு பேகங்களுக்கு இடையிலான அடிப்படை அரசியல் நாகரீகமற்ற பகை அரசியலாகவே (zero sum game) அமைந்தது. முஜிபுரின் வாரிசான ஹசீனா தனது அவாமி லீக் கட்சி மட்டுமே வங்க விடுதலையின் பாரம்பரியத்திற்குரியதாக முன்நிறுத்திக் கொண்டார். பெரும் மக்கள் ஆதரவுடன் 2008இல் ஆட்சியைக் கைப்பற்றிய அவர் அரசியல் சட்டத்தை மீண்டும் மதச்சார்பற்றது எனத் திருத்தினார். இராணுவ ஆட்சியில் புகுத்தப்பட்ட அல்லாஹ்வின் மீது முழுமையான விசுவாசமும் நம்பிக்கையும் என்கிற சொற்களை அரசியல் சட்டத்திலிருந்து நீக்கினார். அரசு மதமாக இஸ்லாம் இருக்கும் என்பதை மட்டும் தக்க வைத்துக்கொண்டார். மதச்சார்பற்ற கல்வி, பெண்களுக்குச் சம உரிமை முதலான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். தேசத் துரோகக் குற்றம் சாட்டி ஹிஸ்புல் தாஹ்ரீர் அமைப்பைத் தடை செய்தார். விடுதலைப் போரின் போதான போர்க் குற்றங்களை விசாரிக்க பன்னாட்டுக் குற்றங்களை விசாரிப்பதற்கான விசாரணை ஆணையம் (ITC) ஒன்றையும் அமைத்தார். இவை அனைத்தும் இஸ்லாமியவாத அரசியலுக்கு எதிரான ஒரு போராக அவற்றால் எதிர்கொள்ளப்பட்டன.

ஜமாத் ஏ இஸ்லாமியுடன் கூட்டணி அமைத்துச் செயற்பட்டுக் கொண்டிருந்த கலிடா சியாவுக்கும் இது ஒரு அரசியல் நெருக்கடியாக அமைந்தது. இந்தியாவைப் பொறுத்த மட்டில் பாகிஸ்தானுடன் நெருக்கம் பாராட்டும் ஜமாத் ஏ இஸ்லாமியுடன்




வாக்குச்சாவடி ஒன்றுக்கு தீ வைத்த ஆர்ப்பாட்டக்காரர்களில் ஒருவரை மடக்கிப்பிடித்த பொலிஸார் கொடூரமாக தாக்குகிறார்கள்

கூட்டணி அமைத்த வகையில் கலிடா வேண்டாதவராகவும் ஜமாத் ஏ இஸ்லாமியின் ஜென்மப் பகையான ஹசீனா வேண்டியவராகவும் ஆயினர்.

## ஷபாகா மற்றும் ஹெஃபாஜட் இயக்கங்கள்

இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகள் ஹசீனாவின் இம்முயற்சியைப் பல்வேறு மட்டங்களில் எதிர்கொண்டன.. ஜனவரி 2010இல் உருவாக்கப்பட்ட ஹெஃபாஜட் இயக்கம் ஹசீனாவின் சீர்திருத்தங்களைக் கடுமையாக எதிர்த்தது. அல்லாஹ்வின் மீதான முழுமையான விசுவாசம் முதலான அரசியல் சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட வாசகங்கள் மீண்டும் இணைக்கப்பட வேண்டும் எனவும், கல்வியில் மதநீக்கம், பெண்கள் வெளியே சென்று வேலை செய்யும் உரிமை முதலியவற்றை எதிர்த்தும் கோரிக்கைகளை வைத்து அவர்கள் போராட்டங்களை எடுத்தனர். ஜமாத் ஏ இஸ்லாமி இதற்குப் பின்புலமாக இருந்தது. 13 அம்சக் கோரிக்கைப் பட்டியல் ஒன்றை வைத்து அவர்கள் நடத்திய போராட்டம் ஒன்றில் (மே- 5, 2013) விளைந்த கலவரத்தில் ஐவர் கொல்லப்பட்டனர். ஏப்ரல் 2013இல் தம் கோரிக்கைகளை வலியுறுத்தி நீண்ட பயணம் ஒன்றையும் அவர்கள் மேற்கொண்டனர்.

இந்த நேரத்தில் வங்கதேசத்தில் உள்ள சிறுபான்மை மதத்தவரும் ஆங்காங்கு தாக்கப்பட்டனர்.2013 பெப்ரவரி 28 அன்று ஜமாதே இஸ்லாமி அமைப்புத் தலைவர் டெல்வார் ஹொசேன் சயிதிக்கு மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது. அதே நாளில் இந்துச் சிறுபான்மையர் தாக்கப்பட்டனர். கோவில்களும் விக்கிரகங்களும் உடைக்கப்பட்டன. அடுத்த 70 நாட்களில் 130 சம்பவங்கள் இப்படி நடைபெற்றன. அதே ஆண்டு செப்டெம்பர், அக்டோபர் மாதங்களில் பௌத்த சமூகத்தவரும் இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகினர். அகமதியா பிரிவினரும் தாக்கப்பட்ட செய்திகள் உள்ளன.

இதற்கிடையில் பெப்ரவரி 5, 2013 அன்று போர்க் குற்றங்களை விசாரித்த பன்னாட்டுக் குற்றவிசாரணை ஆயம் ஜமாத் ஏ இஸ்லாமி தலைவர்களில் ஒருவரான அப்துல் காதர் மொல்லாஹ்விற்கு ஆயுள் தண்டனை அளித்துத் தீர்ப்பளித்தது. டாக்காவிற்கு அருகில் உள்ள ஷபாகாவிலும் பிற முக்கிய நகரங்களிலும் ஏராளமாகத் திரண்ட மக்கள் போர்க் குற்றவாளிகளுக்கு வெறும் ஆயுள் தண்டனை போதாதெனவும் மொல்லாஹ்விற்கு மரண தண்டனை வழங்க வேண்டுமெனவும் கோரிக்கை வைத்துப் போராட்டத்தைத் தொடங்கினர். ஷபாகா இயக்கம் என அழைக்கப்பட்ட இந்த இயக்கத்திற்குப் பெரிய அளவில் சமூக ஊடகங்களிலும் ஆதரவு பெருகியது. ஹெஃபாஜெட் இயக்கம் தனது 13 அம்சக் கோரிக்கைகளில் ஒன்றாக ஷபாகா இயக்கத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் வைத்து அதுவும் களத்தில் இறங்கியது. ஷபாகா இயக்கத்தைச் சேர்ந்த அஹமத் ரஜீப் ஹைதர்என்கிற சமூக ஊடகப் போராளி கொடூரமான முறையில் கொல்லவும் பட்டார். ஷபாகா இயக்கப் போராட்டம் ஏப்ரல் மாதம் வரை தொடர்ந்தது.

அரேபிய வசந்தத்தால் உத்வேகம் பெற்றிருந்த ஷபாகா இயக்கத்திற்கு ஆதரவாகப் பல்லாயிரக் கணக்கானோர் நாடெங்கும் திரள்வதைக் கண்ட ஹசீனா எதிர் வர இருந்த தேர்தலில் இதைத் தன் ஆதரவுத் தொகுதியாக மாற்றிக்கொள்ள முனைந்தார். மொல்லாஹ்வின் தீர்ப்பிற்கு எதிராக மேல் முறையீடு செய்து அவரது ஆயுள் தண்டனையை மரண தண்டனையாக மாற்றினார். விசாரணை முறை நடுநிலையாக இல்லாததைச் சுட்டிக்காட்டி பன்னாட்டளவிலான மனித உரிமை அமைப்புகளும், பிற நாடுகளும் மரண தண்டனையை நிறைவேற்ற வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டதைப் புறக்கணித்து அவசரமாகத் தேர்தலுக்கு முன்னதாக டிசம்பர் 12 அன்று அவரைத் தூக்கிலிடவும் செய்தார்.

கலிடா சியாவின் வங்கதேசியக் கட்சியைப் பொறுத்தமட்டில் தொடக்கத்தில் அது தன் கூட்டணிக் கட்சியான ஜமாத் ஏ இஸ்லாமியை ஆதரித்த போதும், ஷபாகா இயக்கத்திற்குப் பெருகிய ஆதரவைப் பார்த்த பின்பு தன் நிலையை மாற்றிக்கொண்டது. ஷபாகாவை ஆதரிக்கவும் செய்தது.

இடையில் நடந்த நிகழ்வொன்றும் வங்கதேசத்தின் இன்றைய நிலையைப்புரிந்து கொள்ள உதவும். சென்ற ஜனவரி 19, 2012 அன்று


வங்கதேச இராணுவம் தலைநகர் டாக்காவில் பத்திரிகையாளர் சந்திப் பொன்றை நடத்தியது. ஷேக் ஹசீனா வின் மதச்சார்பற்ற அரசைக் கவிழ்க் கும் நோக்கில் இராணுவத்தில் நிகழ இருந்த ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி ஒன்று முறியடிக்கப்பட்டதாக அதில் அறிவிக்கப்பட்டது. தடை செய்யப் பட்ட ஹிஸ்புல் தாஹ்ரீர் அமைப்பு தேர்ந்தெடுக்கப்பட்ட இராணுவ அதி காரிகள் சிலருக்கு ஒரு துண்டறிக் கையை அனுப்பி உள்ளதாகச் சொல் லப்பட்டது. அதில், ஓ! இராணுவ அதிகாரிகளே, உங்கள் சகோதரர்க ளைக் கொல்கிற ஹசீனாவை வெளி யேற்றி, இந்தியாவுக்கும் அமெரிக்கா விற்கும் உங்களையும் உம்மாவையும் (முஸ்லிம் சமுதாயத்தையும்) அடி மையாக்கும் முயற்சியிலிருந்து விடு வித்துக் கொள்வதற்கான கிலா ஃபத்தை நிறுவுங்கள் என்கிற தலைப் பில் அவர்களை ஆட்சிக் கவிழ்ப்பிற் குத் தூண்டியதாகச் சொல்லப்பட்டது.

ஒரு பக்கம் வங்கதேசப் பாரம்பரி யத்தில் உள்ள சகிப்புத் தன்மையும் மதச்சார்பின்மையும், இன்னொரு பக் கம் வளர்ந்து வரும் இஸ்லாமிய அடிப்படைவாதம் இரண்டிற்கும் இடையிலான மோதற் களமாக இன் றைய வங்கதேசம் உள்ளதைத்தான் இவை காட்டுகின்றன. பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நாடுக ளில் ஒன்றான வங்கதேசத்தின் நிலை யில் இந்த 40 ஆண்டுகளில் பெரிய முன்னேற்றம் இல்லை. வங்கதேச மும் இந்தியாவைப்போல ஒவ் வொரு தொகுதியிலும் அதிக வாக்கு களைப் பெற்றவர்கள் வென்றதாகக் கருதப்படும் (First Past The Post) தேர்தல் முறையைத்தான் பின்பற்றுகி றது. சென்ற 2008 தேர்தலில் கலிடா வின் வங்கதேசியக் கட்சி 33 சத வாக் குகளைப் பெற்றிருந்த போதும் 300 உறுப்பினர்கள் உள்ள நாடாளுமன் றத்தில் வெறும் 30 இடங்களை மட் டுமே வெல்ல முடிந்தது. இந்நிலை யில் அக்கட்சி அரசுக்கு எதிரான தன் போராட்டங்களை நாடாளுமன்றத் தைக்காட்டிலும் வெளியிலேயே நடத்த வேண்டியுள்ளது. நாடெங் கிலும் நாள்தோறும் போராட்டங்கள், சாலை மறியல்கள், தொழில் நிறுவ னங்கள் மற்றும் அலுவலகங்கள் மூடப்படுதல் என்பதாகவே வங்கதே சத்தின் கடந்த ஆண்டுகளின் வரலாறு அமைந்துள்ளது.

ஐ.நா. அவையின் மனித வளர்ச்சிக் குறி எண் அடிப்படையில் மொத்த முள்ள 187 நாடுகளில் 146ஆவது இடத்தில் உள்ளது வங்க தேசம். 80 சத மக்களின் தினசரி வருமானம் 2 டொலருக்கும் குறைவு. ஹசீனா, கலிடா இருவரது ஆட்சிகளும் பெரிய அளவில் ஊழல் மிக்கவையா கவே அமைந்து வந்துள்ளன. அரசி யல் மயப்படுத்தப்பட்ட அதிகார வர்க்கம், லஞ்சம், பழி வாங்கும் அர சியல், கடும் பொருளாதார நெருக் கடி. வங்கதேச விடுதலைப் போராட்ட வரலாற்றை அறியாத 15க்கும் 24 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களின் வீதம் மொத்த மக் கள் தொகையில் 40 சதமாக இருப் பது ஆகியன ஒரு மாற்று அரசியலை நோக்கி மக்களைச் சாய வைக்கின் றன. இந்த இடத்தை இஸ்லாமிய அடிப்படைவாத அரசியல் நிரப்புகி றது.

நடந்து முடிந்த தேர்தல் வெறும் கேலிக் கூத்தாக அமைந்ததன் பின் னணி இதுதான். இந்தப் போலித் தேர் தலின் மூலம் கிடைத்த அதிகாரமும், எதிர்க்கட்சிகள் மீதான அடக்குமுறை யும், இந்தியாவின் ஆதரவும் எத் தனை நாளைக்கு ஹசீனாவைக் காப் பாற்றப் போகின்றன? தேர்தலுக்குப் பிந்திய இன்றைய அமைதி இன்னும் எத்தனை நாளைக்கு நீடிக்கப்போகி றது?

இன்றைய நிலையில் இந்தக் கேள்விகளுக்கு விடை சொல்வது அத்தனை எளிதல்ல. ■



சர்வதேச அரசியல்

# தென்சூடான் நெருக்கடிக்கு அடிப்படைக் காரணம்

## இன முரண்பாடா அல்லது எண்ணெய் வர்த்தக ஆதாயமா?



காலித் முஸ்தபா மெடானி

மேற்குலக நாடுகள் அவற்றின் செல்வாக்கைப் பயன் படுத்தினால் தென்சூடான் வன்செயல்களை முடிவுக்குக் கொண்டுவர முடியும். சண்டையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஆளும் கட்சியின் பிரிவுகளுக்கு இடையேயான பேச்சுகள் பெரிதாக ஒன்றையும் சாதிக்கப் போவதில்லை.

தென்சூடான் நெருக்கடி பற்றி ஊடகங்களில் வெளியாகியிருக்கக் கூடிய செய்திகளில் பெரும்பாலானவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது அந்த நாட்டில் தொடருகின்ற வன்முறைகளின் பின்னணியில் ஆளும் சூடான் மக்கள் விடுதலை இயக்கத்திற்குள் இருக்கும் அரசியல் எதிராளிகளுக்கு இடையிலான அதிகாரச் சண்டையும் மிகப் பெரிய இனக்குழுமங்களான டின் காவுக்கும் நுயெருக்கும் இடையேயான பகைமையின் விளைவான முரண் நிலையுமே இருப்பதாகத் தோன்றும். ஆனால், உண்மையில் நெருக்கடியின் வேர்கள் மிகவும் சிக்கலானவை.

தென்சூடானின் பெரும்பான்மையான மக்களுக்கு இருக்கின்ற அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான மனக்குறைகள், அரசாங்கத்தின் பிடிவாதமான ஜனநாயக விரோதத் தன்மை, நாட்டின் வளங்கள் குறிப்பாக, எண்ணெய் மீதான அதிகரித்த போட்டாபோட்டி ஆகியவற்றின் விளைவாகவே வன்முறைகள் மூண்டிருக்கின்றன. ஒரு மாதத்துக்கும் அதிகமான காலமாக தொடருகின்ற இனமோதல்களுக்கு அடிப்படையாக இவ்விரு காரணிகளுமே இருக்கின்றன. நூற்றுக்கணக்கான குடி மக்கள் கொல்லப்பட்டு விட்டார்கள். சண்டைகளில் இருந்து தப்பியோடிய மக்கள் ஆற்றைக்கடந்து சென்றபோது படகு கவிழ்ந்து ஜனவரி 12 ஆம் திகதி சுமார் 200 பேர் பலியானார்கள். இலட்சக் கணக்கானவர்கள் வீடு வாசல்களை இழந்து இடம்பெயர்ந்திருக்கிறார்கள். பிராந்தியம் முழுவதுமே நிலை குலைவுக்குள்ளாகும் ஆபத்து தோன்றியிருக்கிறது.

உலகில் எண்ணெய் ஏற்றுமதி செய்

யும் வேறு எந்தவொரு நாட்டையும் விட எண்ணெயில் கூடுதலான அளவுக்கு சூடான் தங்கியிருக்கிறது. 2005-2011 கால கட்டத்தில் 950 கோடி டொலர்கள் பெறுமதியான எண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இது தென்சூடான் அரசின் மொத்த வருவாயில் 98 சதவீதமாகும். ஆனால், இந்த வருவாயை மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்காக உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுச்சேவைகளில் முதலீடு செய்வதை விடுத்து அரசாங்கம், இராணுவம் மற்றும் பாதுகாப்பு இயந்திரத்துக்கே நிதியுதவியைச் செய்தது. இதே இராணுவமும் பாதுகாப்பு இயந்திரம் இனரீதியாக பிளவுற்றிருக்கின்றன. உதாரணத்துக்கு கூறுவதென்றால், 2011இல் சுதந்திரமடைந்ததற்குப்பிறகு தென்சூடான் எண்ணெய் வருவாயில் 38 சதவீதத்தை இராணுவத்துக்கும் பாதுகாப்பு சேவைகளுக்கும் ஒதுக்கீடு செய்திருக்கிறது. உட்கட்டமைப்புகளுக்கு 10 சதவீதமும் கல்விக்கு 7 சதவீதமும் மாத்திரமே ஒதுக்கப்பட்டிருந்தது. 2003இல் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த பிறகு நாட்டின் விவசாய உற்பத்தி வீழ்ச்சி கண்டது மாத்திரமல்ல, இப்போது தேவையான உணவில் பெரும்பகுதி இறக்குமதி செய்யப்படுகிறது.

எண்ணெய் வருவாயை நம்பிவாழுகின்ற தென்சூடானின் போக்கும் அதன் அரசாங்கத்தின் கோணலான முன்னுரிமைகளும் சேர்ந்து ஆளும் உயர் குழாத்தின் மத்தியில் அரசியல் பிளவுகளைத் தீவிரப்படுத்தியிருக்கிறது. முரண்படுகிற இனக் குழுக்களுக்கிடையிலான பிளவை இல்லாமற் செய்யக்கூடிய ஆற்றல் கொண்ட ஜனநாயக நிறுவனங்களைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளுக்கு இதனால் தடங்கல் ஏற்பட்டது. முழு எண்ணெய் வருவாயும் அரசாங்கத்துக்கே நேரடியாகப் போகிறது. இந்த வருவாய் காரணமாக கால்நடை அபிவிருத்தி மற்றும் விவசாயத்துறையில் முதலீடு செய்வதில் சூடான் மக்கள் விடுதலை இயக்க தலைமைத்துவம் அக்கறைகாட்டாமல் தவிர்த்திருக்கிறது. ஆனால் தென்சூடானின் சனத்தொகையில் 80 சதவீதத்தினர் அடிப்படைத் தேவைகளுக்காக கால்நடை அபிவிருத்தியிலும் விவசாயத் துறையிலுமே தங்கியிருக்கிறார்கள். அதிகாரத் தரகர்களும் சூடான் மக்கள் விடுதலை இயக்கத்தின் இராணுவத் தலைவர்களும் மிகவும் குறிப்பாக, ஜனாதிபதி சல்வா கிர்ரும் உப ஜனாதிபதியும் கிளர்ச்சித் தலைவருமான றீய்க் மஷாரும் ஜுபாவில் உள்ள அரசாங்கத்துக்கான தங்களது விசுவாசத்தை தேசிய எண்ணெய் வருவாயில் தங்களுக்கு நேரடியாகக் கிடைக்கின்ற பங்குடனேயே பிணைத்துக் கொள்கிறார்கள்.

அதேவேளை, எண்ணெய் ஏற்றுமதி மூலம் பெருக்கிக்கொள்ளப்படுகின்ற வளங்களை ஜுபாவில் உள்ள அரசியல்வாதிகள் இன அடிப்படையில் கிராமியத்தலைவர்களுடன் கூட்டணிகளை ஏற்படுத்திக்கொள்வதற்குப் பயன்படுத்தியிருக்கிறார்கள். உதாரணத்துக்கு, டிசம்பர் 15 தலைநகர் ஜுபாவில் டின்கா இனக்குழுவினருக்கும் நுயெர் இனக்குழுவினருக்கும் இடையே மோதல்கள் மூண்டதைத் தொடர்ந்து நுயெர் இனத்தலைவரான மஷாரை ஆதரிக்கும் கிளர்ச்சியாளர்கள் உடனடியாகவே அணிவகுத்துச் சென்று எண்ணெய் வளமிக்க புளூநைல் மற்றும் யூனிட்டி மாநிலங்களின் பெரும்பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தார்கள். அரசியல் பதவிகளை அடைந்து அதன் மூலமாக எண்ணெய் மூலமான பொருளாதார ஆதாயத்தைப் பெற்றுக்கொள்ளுமுகமாக ஜனாதிபதி கிர் மீதும் ஜுபாவில் உள்ள டின்கா இனத்தவரின் ஆதிக்கத்திலான தலைமைத்துவம் மீதும் நெருக்குதலைப் பிரயோகிப்பதே கிளர்ச்சித் தலைவர்களின் உண்மையான தந்திரோபாயமாகும்.

இன்று வன்முறையை முடிவுக்குக் கொண்டுவருவது மாத்திரமல்ல, நாட்டில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதை நோக்கிப் பாடுபட வேண்டியதும் மேற்குலக நாடுகளின் ஒரு பொறுப்பாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இந்த நெருக்கடியை கார்ட்டூமுக்கும் ஜுபாவுக்கும் இடையேயான 2005 சமாதான உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுடன் தொடர்புடையதாக பின்னோக்கிப் பார்க்கமுடியும். ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, நோர்வே ஆகியவற்றின் மத்தியஸ்தத்துடன் செய்துகொள்ளப்பட்ட இவ்வுடன்படிக்கை 2011இல் சூடானின் பிரிவினைக்கு வழிவகுத்தது. தென்சூடானின் சர்வஜன வாக்கெடுப்பையும் சுதந்திரத்தையும் மேற்பார்வை செய்யும் அவசரத்தில் ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் நோர்வேயும் ஆட்சிமுறை மற்றும் உள்ளூர் திரட்டல் படைகளைக் கலைத்து ஆயுதங்களைக் களைதல் தொடர்பிலான முக்கிய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு அவற்றின் செல்வாக்கைப் பயன்படுத்தத் தவறிவிட்டன. வளங்களை கூடுதலான அளவுக்கு ஒப்புரவான முறையில் பகிர்ந்தளிப்பதற்கான ஒரு விதிமுறையை வகுப்பதற்கு உதவவும் இந்த நாடுகள் தவறிவிட்டன.

அண்மைக்கால சரித்திரத்தை அடிப்படையாகக்கொண்டு நோக்கும் போது, கிர்ருக்கும் மஷாருக்கும் இடையே தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பேச்சுவார்த்தைகள் நெருக்கடிக்கு அடிப்படைக் காரணிகளாக இருக்கும் ஆழமாக வேர்விட்ட அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளைக் கையாளுவதில் குறிவைக்கும் சாத்தியமில்லை என்றே தோன்றுகிறது. ஆளும் சூடான் மக்கள் விடுதலை இயக்கம் சகல விமர்சனங்களையும் நசுக்கிவிட்டது. அவசரமாகத் தேவைப்பட்ட அரசியல் யாப்பு மற்றும் பாதுகாப்பு சீர்திருத்தங்களைத் தாமதப்படுத்திவிட்டது. அரசாங்க சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் சட்டங்களை நிறைவேற்றுவதிலேயே அவசரம் காட்டியது.

இதற்கு மேலதிகமாக, நாட்டின் சொந்த பாதுகாப்புப் படைகள்

சூடான் மக்கள் விடுதலை இயக்க அரசியல்வாதிகளினதும் ஜூபாவில் உள்ள மேல்நிலை அதிகாரிகளினதும் ஊழல்களை அம்பலப்படுத்துவதில் அக்கறை காட்டிய பெரும் எண்ணிக்கையான அரசியல் எதிராளிகளையும் ஊடகவியலாளர்களையும் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களையும் அடாத்தாக கைதுசெய்து சிறையிலடைத்தது மாத்திரமல்ல கொலையும் செய்தன. தனிப்பட்டன இலாபத்துக்காக இன அடிப்படையில் அணிகளைத் திரட்டும் ஒரு வரலாற்றைக் கொண்ட இரு தலைவர்களுக்கும் இடையே எளிதில் முறிவடையக்கூடிய நொய்தான ஒரு சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு மத்தியஸ்த உதவியைச் செய்வதிலும் பார்க்க, சர்வதேச சமூகம் முற்றுகைக்குள்ளாகியிருக்கும் தென்சூடானின் சிவில் சமூகத்துக்கும் எதிரணி அரசியல் கட்சிகளுக்கும் ஆதரவளிக்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, 2005 சமாதான உடன்படிக்கையின் முக்கியமான ஏற்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்துவதற்கு மேற்கு நாடுகள் அவற்றுக்கு ஜூபா மீது இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும். ஆட்சிமுறை, அரசியலமைப்பு சீர்திருத்தம், திரட்டல் படைகளிடமிருந்து ஆயுதக்களைவு, நாட்டுப் பிரஜைகளின் அபிலாசைகளுக்கும் அடிப்படைத் தேவைகளுக்கும் பதில் சொல்லும் பொறுப்புடைய ஒரு தேசிய எண்ணெய்க் கொள்கை ஆகியவை இந்த முக்கிய ஏற்பாடுகளில் அடங்குகின்றன. ■

***(காலித் முஸ்தபா மெடானி கனடாவின் மொன்றீயல் நகரில் உள்ள மக்கில் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானம் மற்றும் இஸ்லாமிய ஆய்வுகள் உதவிப் பேராசிரியராவார்.)***












ஜெயமோகன்

# புகைத்திரை ஓவியம்

சிலவருடங்களுக்கு முன்பு தஞ்சையில் காவேரிக்கரையோரமாக பத்துநாட்கள் பயணம் செய்தேன். ஒரேமூச்சாக வேறுவேலைகளும் கவனங்களும் இல்லாமல் செய்யப்படும் இத்தகைய பயணங்கள் ஒரு நிலப்பகுதியைப்பற்றிய முழுமையான சித்திரத்தை அளிக்கவல்லவை என்பது என் அனுபவம். நம்முடைய அனுபவ, அறிவு இயல்பான நுண்ணுணர்வும் கவனமும் ஒருங்கிணைந்தாலே போதுமானது. உண்மையில் அப்பகுதியைப்பற்றி எழுதப்பட்ட பலநூறு ஆய்வுக்கட்டுரைகளை, தரவுத் தொகுப்புகளை அமர்ந்து வாசித்து பகுப்பாய்வுசெய்து பொதுமுடிவுகளுக்கு வருவதை விட இது உதவிக்கரமானது. ஏனென்றால், தரவுகளும் தரப்புகளும் பெரும்பாலும் பிறருடைய பார்வையால் கட்டமைக்கப்பட்டவை. நாம் பார்க்கும் ஒருகாட்சி நம்மால் மட்டுமே அர்த்தப்படுத்தப்படுகிறது.

அத்துடன் இன்னொன்றும் உண்டு. நாம் நேரடியாக ஈடுபடாத, நமக்குப்பங்களிப்பே இல்லாத ஓர் இடத்தை நாம் பார்க்கையில் அங்குள்ள காட்சிகளில் முக்கியமானவை- முக்கியமற்றவை, வேண்டியவை - வேண்டாதவை என்னும் பாகுபாடுகள் இல்லாமலாகின்றன. அனைத்தும் நம்மளவில் சமமானவை. அனைத்தும் நம்மில் அர்த்தப் பதிவுகளை உருவாக்குகின்றன. அந்நிலையில் சின்னஞ்சிறு விடயங்கள் கூட குறியீடுகளாக ஆகி பெரிய வரலாறுகளை, சமூக மனநிலைகளைச் சுட்டுவனவாக ஆகிவிடுகின்றன. உதாரணமாக தஞ்சையின் சிறிய கிராமங்களில்கூட இருக்கும் தந்தைபெரியார் படிப்பகங்கள். அவை பெரும்பாலும் அறுபதுகளில் கட்டப்பட்ட சிறிய கட்டிடங்கள், ஒன்றிரண்டு பெஞ்சுகள், ஒரு டெஸ்க், அதில் நாலைந்து செய்தித்தாள்கள். சுவர்களில் பழைய பெரியார், அண்ணா படங்கள், அபூர்வமாக நெடுஞ்செழியன், மதியழகன் படங்கள். அவை தஞ்சையில் ஓர் அலையென எழுந்து இன்று அடங்கி மறைந்த திராவிட இயக்கத்தின் எழுச்சியின் தடயங்கள்.

அத்தகைய ஒரு வாசிப்புசாலையில் ஒரு படம் சட்டமிடப்பட்டு மாட்டப்பட்டிருந்தது. வி.என். ஜானகியும் விஜயகுமாரியும் நீண்ட கைகள் கொண்ட ஜாக்கெட் அணிந்து, கோணவ்கிடு எடுத்து சீவி மலர் சூடிய கூந்தலுடன், கைகளில் கறுப்பு - சிவப்புக் கொடிகளை ஏந்தியிருந்தனர். ஜானகியின் கொடியில் எம்.ஜி.ஆர் சுட்டுவிரலை தூக்கிக் காட்டினார். விஜயகுமாரியின் கொடியில் எஸ்.எஸ்.ராஜேந்திரன். நெடுநேரம் அந்தப்படத்தைப் பார்த்து அப்படியே நின்றுவிட்டேன். ஒரு காலப்பயணம் போல. நான் வாழாத ஒருகாலகட்டத்தில் என்னை வாழச்செய்தது அந்தப் படம். அத்தனை அறிதல்களையும் ஒரே கணத்தில் நிகழ்த்தும் கணத்தை அந்தப்படம் உருவாக்கியது. உண்மையில் அது ஒரு பரவசநிலை. புகைப்படங்கள் ஓவியங்களை விட வல்லமை கொள்ளும் தருணம் அது.

ஐம்பதாண்டுகளுக்கு முந்தைய சாமானியனின் அரசியலையும் கனவையும் அந்தப்படம் காட்டுவது

போலத்தோன்றியது. அந்த ஒருபடத்தில் இருந்து என்னென்ன அரசியல், சமூகவியல், வரலாற்று ஊகங்களுக்குச் செல்லமுடியும் என எண்ணி வியந்துகொண்டேன். அந்தப்படத்தை உருவாக்கியவனின் மனநிலை என்ன? அதை விலைகொடுத்து வாங்கி சட்டமிட்டு மாட்டியவர்கள் எவ்வகை இளைஞர்கள்? அவர்கள் கனவுகண்ட சமூகம் என்ன? அவர்கள் அடைந்த எழுச்சிகள், சஞ்சலங்கள், ஏமாற்றங்கள் என்னென்ன? 1962 இல் பிறந்த நான் அந்தக்காலகட்டம் முற்றிலும் வடிய ஆரம்பித்த பின்புதான் நாளிதழ்களையே வாசிக்க ஆரம்பித்திருப்பேன். ஆயினும் அதை தகவல்களைக்கொண்டு வகுத்துக்கொண்டேன்.

இந்திய சுதந்திரப் போராட்டம் தான் இந்தியா வெங்கிலும் அரசியல் நடவடிக்கையை ஆரம்பித்துவைத்தது. அதற்குச் சில ஆண்டுகள் முன்னரே சென்னையிலும் மும்பையிலும் தலித் உரிமைகளுக்கான அரசியல் ஆரம்பித்திருந்தது. ஆனால், இந்திய சுதந்திரப் போராட்டம் நாடுதழுவிய அலை. அது ஆரம்பித்தது 1918இல் காந்தி இந்தியாவுக்கு வந்து காங்கிரஸை மெல்ல கைப்பற்றிய பின்னர்தான். அன்றுவரை காங்கிரஸின் உறுப்பினர் உரிமை நிபந்தனைக்குட்பட்டதாக இருந்தது. காந்தி அதை அனைவருக்கும் உரியதாக ஆக்கினார். அச்செயல் காங்கிரஸை சட்டென்று பெரும் மக்கள் இயக்கமாக ஆக்கியது. காங்கிரஸ் இந்தியாவின் அனைத்து மூலைகளுக்கும் அரசியலைக் கொண்டுசென்று சேர்த்தது. அங்குள்ளவர்களை இந்தியா என்ற பெரும் நிலப்பரப்பின் குடிமக்களாக உணரச்செய்தது. மொத்த இந்தியர்களின் நலன்களைப்பற்றிக் கவலைப்படச்செய்தது. அது ஓர் இலட்சியவாத அரசியல் அலை எனலாம்.

1935இல் காங்கிரஸ் பிரிட்டிஷாரிடமிருந்து மாகாணசபைகளில் ஆட்சியமைப்பதற்கான உரிமையை வென்றெடுத்து தேர்தல் அரசியலில் நுழைந்ததும் அதிகார அரசியல் இந்தியாவில் ஆரம்பித்தது. ஆரம்பித்த கணமே அது காங்கிரஸை உடைத்தது. தேர்தலில் போட்டியிடும் பொருட்டு காங்கிரஸில் இருந்து வெளியேறிய சுயராஜ்யக் கட்சியின் பிளவின் பின்னடைவை காங்கிரஸ் தாண்டிவர காந்தியின் ஆறுவருடகால கடும் உழைப்பு தேவையாகியது. மனம்சோர்ந்த அவர் கிட்டத்தட்ட அரசியலைவிட்டே விலகி கிராம சேவைப்பணிகளில் ஈடுபடத் தொடங்கினார். தன்னைச் சூழ்ந்திருந்த அனைவரும் அதிகார அரசியலின் வேட்பாளர்கள் என உணர்ந்த காந்தி அதற்கு முற்றிலும் அப்பாற்பட்டவர்களான ஒரு தொண்டர்படையை அமைத்தார். அந்தத் தொண்டர்களுடன் அவர் மீண்டும் அரசியலுக்கு வந்தார். அவருடைய இலட்சியவாத அரசியலின் வீரர்களாக அவர்களே கடைசிவரை திகழ்ந்தனர்.

முதற்கட்ட இலட்சியவாத அரசியல் அல்ல, தேர்தல்களின் விளைவாக உருவான அடுத்தகட்ட அதிகார அரசியல்தான் இந்தியாவை அரசியல் மயமாக்கியது என்பதுதான் உண்மை. இந்தியாவில் தேசிய அளவில் தேர்தல்கள் ஆரம்பித்த 1935 இலேயே அவை அனைத்துச் சமூகக்



குழுக்களும், சாதிகளும் தங்கள் அதிகாரத்துக்காக முட்டிமோதிச் சண்டையிடும் களமாக ஆகிவிட்டன. அதிலிருந்து எவரும் விலகிநிற்கமுடியாதென்ற நிலை உருவாகியது. அன்றைய இலக்கியப்படைப்புகள் அன்று மாகாணசபைகளுக்கும் நகரசபைகளுக்கும் நிகழ்ந்த தேர்தல்களில் பணபலமும் சாதியப்பின்னணியும் எப்படி முதன்மைப்பங்காற்றின என்பதைக் காட்டுகின்றன. பிரிட்டிஷ் யானை உண்ட கவளத்தில் சில பருக்கைகள் சிந்தின. அவற்றை உண்ண எறும்புகள் ஒன்றையொன்று முட்டிமோதி முன்சென்றன.

இந்திய அரசியலின் மூன்றாவது கட்டம் என்பது 1952இன் சுதந்திர இந்தியாவின் முதல்பொதுத்தேர்தலில் ஆரம்பிக்கிறது. அதுவரைக்கும் வரிகட்டுபவர்களுக்கு மட்டுமே இருந்த வாக்குரிமை வயதுவந்த அனைவருக்கும் அளிக்கப்பட்டது. விளைவாக இந்தியாவின் அத்தனை குடிமக்களும் அரசியலில் ஈடுபட்டேயாகவேண்டும் என்ற நிலைவந்தது. கும்பிட்ட கைகளுடன் அரசியல்வாதிகள் அடித்தள மக்களைத் தேடிவந்தனர். அடித்தள மக்கள் அந்த அரசியல்வாதிகளை தங்களுக்குப் பயன்படுத்துவது எப்படி என சிந்திக்கத்தொடங்கினர். சாதிகளாக, மதங்களாக, வட்டாரங்களாகத் திரள்வது வாக்கு அரசியலில் வலிமையை அளிக்கும் என மக்கள் கண்டுகொண்டனர். அவர்களை அப்படித் திரட்டுவது அரசியல் ரீதியாக பலன் தருவது என அரசியல்வாதிகளும் கண்டடைந்தனர். இலட்சியவாத அரசியல் முழுமையாகவே மறைந்தது. அதிகார அரசியலில் தங்கள் பங்கைப்பெறுவதற்கு ஒன்று திரள்வதே வழி என்று ஒவ்வொரு சமூகக்குழுவும் எண்ண ஆரம்பித்தபோது இன்றைய பங்கீட்டு அரசியல் ஆரம்பித்தது.

இந்தியா முழுக்க பங்கீட்டு அரசியல் பல வடிவங்களில் பல பாவனைகளில் முன்வைக்கப்பட்டிருக்கிறது. அன்று அரசியல் என்பது இலட்சியவாதம் சார்ந்ததாகவே இருந்தாகவேண்டும் என்ற பொதுவான நம்பிக்கை இருந்தது. அத்துடன் அரசியல் சட்டமும் பிரிவினை நோக்குள்ள அரசியலை எதிர்த்தது. ஆகவே, சாதிசார்ந்த, மதம்சார்ந்த அரசியல் மேல்பூச்சுக்கு ஒருவகை இலட்சியவாதத்தை உருவாக்கிக் கொண்டது. பஞ்சாபிசுபா போன்ற சில இயக்கங்கள் தெளிவான பிரிவினை அரசியல்முகத்தைக் கொண்டிருந்தாலும் பிறபகுதிகளில் உள்ள அரசியலியக்கங்கள் ஒருவகை இலட்சியவாதத்தை மேல்தளத்தில் முன்வைத்தன. இலட்சியவாதம். அந்த இலட்சியவாத முகம் இளைஞர்களை உள்ளே இழுத்து தொண்டர்களை உருவாக்கியது. நடைமுறைத்தன்மை கொண்ட பங்கீட்டு அரசியல், சமூக அதிகார விசைகளை ஒருங்கிணைத்தது.

தமிழகத்தின் பிற்படுத்தப்பட்ட சாதிகளின் அரசியல் ஆசைகள் 1925 முதலே வலுவாகத் தொடங்கிவிட்டாலும் தேர்தல், அரசியல் வலுப்பெறும்தோறும் வளர்ந்தது. காங்கிரஸுக்குள் அது ஒரு அதிகாரத் தரப்பாக வலுவடைந்தது. ஜஸ்டிஸ் கட்சியில் மேலும் வல்லமைகொண்ட அந்தத் தரப்பு படிப்படியாக திராவிட இயக்கத்தை உருவாக்கிக் கொண்டது. இட ஒதுக்கீட்டு அரசியல் வழியாக அது வலுவடைந்து மெல்ல ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியது. இந்தப் பங்கீட்டு அரசியல் எழுச்சியின் புறவயமான இலட்சியவாத முகம் என்பது மொழிப்பற்றாகவும் இனப்பற்றாகவும் இருந்தது.

இலட்சியவாதம் வழியாக அடையப்போகும் ஒரு பொன்னுலகை மக்கள் முன் காட்டியாகவேண்டிய அவசியம் இருந்தது. காங்கிரஸும் கம்யூனிஸ்ட் கட்சியும் அந்த பொன்னுலகை எதிர்காலத்தில் சுட்டிக்காட்டின. திராவிட இயக்கம் அதை இறந்தகாலத்தில் சுட்டிக்காட்டியது. இழந்துவிட்ட ஒரு மகத்தான காலகட்டத்தை அலங்காரமும் உணர்ச்சிகரமும் கொண்ட சொற்கள் வழியாக அது மக்கள் மனதில் நிறுவியது. ஏற்கனவே தமிழகத்தில் வலுவாக நிகழ்ந்திருந்த தமிழியக்கத்தில் இருந்து அந்தக் கனவை அது கடன்வாங்கியது. சங்ககாலம் என்ற பொற்காலகட்டம். காதல்,மானம்,வீரம் என்னும் விழுமியங்கள். சிலம்பு, குறள் போன்ற நூல்கள். கரிகாலன், செங்குட்டுவன், இளஞ்செழியன் போன்ற மாமன்னர்கள், குதிரைகள், உடைவாள்கள், வேல்கள், வேங்கைகள், அடலேறுகள், கடல்கடந்துசெல்லும் நாவாய்கள்... அவற்றை எதிர்கொண்டவர்கள் பெரும்பாலும் அன்று அடிப்படைக் கல்விகற்ற முதல்தலைமுறையினரான பிற்படுத்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த இளைஞர்கள். அவர்களின் சாதியமரபும் குடும்பமும் அவர்களுக்கு

## திராவிட அரசியலின் உள்ளடக்கம்

திராவிட இயக்கத்தின் வரலாற்றை கூர்ந்து பார்ப்பவர்கள் அது சினிமாவைக் கைப்பற்றிய பின்னரே மக்கள் இயக்கமானது என்பதைக் காணலாம். அதன் அரசியல் உள்ளடக்கம் என்பது பிற்படுத்தப்பட்டோரின் அரசியல் அதிகார விளைவு. ஆனால் அதை முன்னெடுத்துச் சென்றது சினிமா வழியாக அது முன்வைத்த பொற்காலக்கனவு. அன்றைய இளைஞர்களை அதை நோக்கி இழுத்தது அக்கனவுதான். அக்கனவை சினிமாவில் சொன்ன நடிகர்கள் மிக விரைவிலேயே தலைவர்களை விட செல்வாக்குப் பெற்றார்கள்

இறந்தகால மேன்மை என எதையும் அளிக்கவில்லை. எந்தக் கனவையும் அவர்கள் அடைந்திருக்கவில்லை. திராவிட இயக்கம் அதை அளித்தது.

எதிர்காலம் பற்றிய கனவை உருவாக்க மாபெரும் தத்துவஞானிகளாலேயே முடியும், மார்க்ஸ் அல்லது காந்தி போல. இறந்தகாலம் பற்றிய கனவை அதைவிட எளிதில் உருவாக்கிவிடலாம். ஏனென்றால் அது ஏற்கனவே முளைக்காதவிதை வடிவில் மக்களிடம் இருந்துகொண்டிருக்கிறது. மூதாதைவழிபாடாக அது மாற்றப்பட்டிருக்கும். எந்தப்பழங்குடிச்சமூகமும் மாபெரும் இறந்தகாலப் பொன்னுலகம் ஒன்றைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கும். அது அவர்களின் சமகாலத்தின்மேல் இறந்த காலத்தின் அதிகாரத்தை நீட்டிக்க உதவும். சமகாலத்தில் சென்றகாலத்தின் விழுமியங்களை ஏற்றிவைக்க உதவும். நிகழ்காலத்தை சென்றகாலத்தின் மரபில் இணைக்க உதவும். ஆகவே சென்றகாலத்தைய சிறப்பைச் சொன்னால் எந்த ஒரு சமூகமும் அதை மறுக்கத்துணியாது. அந்தச் சிறப்பு முற்றிலும் கற்பனை என அது அறிந்திருந்தாலும் அதை ஏற்கும் மனநிலையிலேயே இருந்துகொண்டிருக்கும். அதை ஒருபோதும் தர்க்கபூர்வமாக அணுகாது. ஆகவேதான் ஃபாசிசத்தின் கருவியாக, அடிப்படைவாதத்தின் ஆயுதமாக என்றுமிருப்பது சென்றகாலம் பற்றிய கனவு. இனம், மொழி, மதம், வட்டாரம் சார்ந்து சமைக்கப்பட்ட ஒரு இறந்தகாலப் பொன்னொளி.

## சென்ற காலம் பற்றிய கனவு

எதிர்காலம் பற்றிய கனவை உருவாக்க மாபெரும் தத்துவஞானிகளினாலேயே முடியும் மார்க்ஸ் அல்லது காந்தி போல. இறந்த காலம் பற்றிய கனவை அதைவிட எளிதில் உருவாக்கி விடலாம். ஏனென்றால் அது ஏற்கனவே முளைக்காத விதை வடிவில் மக்களிடம் இருந்து கொண்டிருக்கிறது. மூதாதை வழிபாடாக அது மாற்றப்பட்டிருக்கும். சென்ற காலத்தைய சிறப்பைச்சொன்னால் எந்தவொரு சமூகமும் அதை மறுக்கத் துணியாது. ஆகவே தான் பாசிசத்தின் கருவியாக, அடிப்படைவாதத்தின் ஆயுதமாக என்றும் இருப்பது சென்ற காலம் பற்றிய கனவு

காங்கிரஸும் கம்யூனிஸ்டுகளும் பொன்னுலகத்தை மக்களின் அறிவை நோக்கி முன்வைத்தனர். திராவிட இயக்கம் அதை மக்களின் உணர்ச்சியையும் கனவையும் நோக்கி முன்வைத்தது. ஆகவேதான் பிற இரு சாராரை விடவும் அவர்கள் அதிகமாக கலையைப் பயன்படுத்தினார்கள். அவர்களின் மேடைப்பேச்சு கருத்துப்பகிர்வே அல்ல, அது ஒரு நிகழ்த்துகலை. சி.என்.அண்ணாத்துரையின் பல உரைகளை நான் ஒலிப்பதிவில் கேட்டிருக்கிறேன். அவற்றில் அவர் சொல்லும் கருத்து என்பது ஒற்றை வரியில் முடிந்துவிடக்கூடியது. ஆனால் சுழலும் சொற்கள், ஓசையொழுங்குடன் துள்ளும் சொற்றொடர் அமைப்புகள், பாமரருக்கான நகைச்சுவை என அது ஒரு கலை நிகழ்ச்சி போலிருக்கும். தமிழகத்தில் அன்று புகழ்பெற்றிருந்த புராணக்கதை கூறலுக்கும், தெருக்கூத்துக்கும் திராவிட இயக்கத்தின் மேடையுரைகளுடன் இருந்த ஒற்றுமையை ஆச்சரியத்துடன் கவனிக்கலாம். மேடையில் கிட்டத்தட்ட நடனமிடுவார்கள். குரல் வித்தை காட்டுவார்கள். நகைச்சுவைத் துணுக்குகளை நுடிப்பார்கள். மனப்பாடப் பகுதிகளை சரசரவென ஒப்பித்து கைதட்டல் வாங்குவார்கள்.

திராவிட இயக்கம் நாடகத்துக்கும் பின்னர் சினிமாவுக்கும் வந்த பாதை இது. அவர்களின் நாடகமும் சினிமாவும்கூட மேடைப்பேச்சுதான். மிகச்சிறந்த உதாரணம் பராசக்தி. அதில் சிவாஜிகணேசன் நீதிமன்றத்தில் பேசும் காட்சி நேரடியாகவே ஒரு திராவிட இயக்க மேடைப்பேச்சு. அதில் பிச்சைக்காரர் நலவாழ்வு பற்றி எஸ்.எஸ்.ராஜேந்திரன் பேசுவது போல சிறிய மேடைப்பேச்சுகள் பத்துக்கும் மேல் உள்ளன. மெல்ல சினிமா திராவிட இயக்கத்தின் அதிகாரபூர்வ கலையாக ஆகியது. தமிழகத்தின் பிரபலமான கலைகளான தெருக்கூத்து, நாடகம், பாவைக்கூத்து, கதாகாலட்சேபம், மரபிசை, நாட்டாரிசை ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்துக்கொண்ட சினிமா தமிழர்களின் நிரந்தரப் போதையாக மாறியது. அதில் ஏறி திராவிட இயக்கம் தமிழகத்தின் மக்கள் இயக்கமாக ஆகியது. ஆட்சியைக் கைப்பற்றியது. அங்கு தொடங்கிய பங்கீட்டு அரசியல் இன்று நேரடியான சாதிய அரசியலாக மாறி முழுமைகொண்டிருக்கிறது. இலட்சியவாத அரசியல் என்பது பழங்கதையாக மாறிவிட்டிருக்கிறது.

திராவிட இயக்கத்தின் வரலாற்றைக் கூர்ந்து பார்ப்பவர்கள் அது சினிமாவைக் கைப்பற்றியபின்னரே மக்கள் இயக்கமானதென்பதைக் காணலாம். அதன் அரசியல் உள்ளடக்கம் என்பது பிற்படுத்தப்பட்டோரின் அரசியல் அதிகார விளைவு. ஆனால், அதை முன்னெடுத்துச் சென்றது சினிமா வழியாக அது முன்வைத்த பொற்காலக்கனவு. அன்றைய இளைஞர்களை அதைநோக்கி இழுத்தது அக்கனவுதான். அக்கனவை சினிமாவில் சொன்ன நடிகர்கள் மிக விரைவிலேயே தலைவர்களைவிட செல்வாக்குப் பெற்றார்கள். சி.என்.அண்ணாத்துரை பேசும் அரங்கில் எம்.ஜி.ஆர் பேசிமுடித்ததும் முக்கால்வாசி பார்வையாளர்களும் கிளம்பிச்செல்வது பலமுறை நிகழ்ந்திருக்கிறது. எம்.ஜி.ஆர் தன் முக்கியத்துவத்தைக் காட்ட அதை திட்ட

மிட்டு நிகழ்த்தியிருக்கிறார். திராவிட இயக்கம் அடைந்த அனைத்து அரசியல்வெற்றிகளும் எம்.ஜி.ஆர், எஸ்.எஸ்.ஆர் போன்ற நடிகர்களின் பங்களிப்பால் விளைந்தவையே. தம்பி உன் முகத்தை மட்டும் கொடு, வெற்றிபெறுவேன் என அண்ணாத் துரை எம்.ஜி.ஆரிடம் கோரியது வரலாறு.

எஸ்.எஸ்.ராஜேந்திரன் மிகக்குறுகிய கால அளவில் தி.மு.க.வின் இரு நடிகமுகங்களில் ஒன்றாக இருந்தி ருக்கிறார். சரளமான வசன உச்சரிப்பும், திராவிட இயக்கத்தினர் பெரிதும் விரும்பிய செந்நிறத்தோலும் கொண்டவர் அவர். ஆனால், அவர் மிக விரைவிலேயே வீழ்ச்சியடைந்தார். அவரது வீழ்ச்சி எம்.ஜி.ஆர், மு.கருணாநிதி இருவரும் இணைந்து நிகழ்த்தியது என்று கேட்டிருக்கிறேன். அதைவிட அர சியலில் நீடிப்பதற்கான திறமைகள் அவருக்கில்லை என்பதே காரணம் என நான் ஊகிக்கிறேன். எம்.ஜி.ஆரிடம் வெற்றியைநோக்கிக் கொண்டுசென்ற மூன்று அம்சங்கள் இருந்தன. திரையிலும் வெளியி லும் ஒரு தெளிவான நாயக பிம்பத்தை கட்டமைத்த கவனம், தனக்கென ஓர் ரசிகர் அமைப்பை உருவாக் கிக்கொள்ளும் அமைப்புத்திறன், வலுவான தொடர்பு களை பேணும் நிதானம். மூன்றுமே எஸ்.எஸ்.ராஜேந் திரனிடம் இருக்கவில்லை.

அவர்கள் இருவரும் தி.மு.க.வின் முகங்களாக அறி யப்பட்ட அந்தக் குறுகிய காலகட்டத்தில் உருவாக்கப் பட்ட படம் அது. அதில் அன்றைய எளிய தி.மு.க. தொண்டனின் கனவு இருந்தது. அழகிய நாயகன், அரும்புமீசை, செந்நிறம் படத்தில் கிட்டத்தட்ட ரத்தச் சிவப்பு சுருள்முடி, உயர்தர ஆடைகள், கொள்கைப் பற்று அல்லது இலட்சியவாதம் கொண்டவன். அத்து டன் அழகிய பெண்கள் அவர்களை நெஞ்சில் ஏற்றியிருக்கிறார்கள்! அவர்கள் அவன் கொள்கை களை ஏற்றுக்கொண்டு அவனுக்குத் தோள் கொடுக்கிறார்கள். அனைத்தும் அந்தப்படத்தில் இருந் தது. சங்ககாலம் போலவே தி.மு.க. அன்று உரு வாக்கிய ஒரு சமகாலக் கனவு. அந்தப்படத்தில் இருந்த பகற்கனவு தமிழகத்தின் தலைவிதியைத் தீர் மானித்த விசை என்றால் ஆச்சரியமில்லை.

விஜயகுமாரியை மிகவிரைவிலேயே எஸ்.எஸ். ராஜேந்திரன் விவாகரத்துச் செய்தார். அதற்கு முன் திருமணமான நாளில் இருந்தே அவர்களின் உறவு மிக வன்முறை மிக்கதாக, துன்பம் நிறைந்ததாக இருந் தது. எம்.ஜி.ஆர். இன்னொருவரின் மனைவியாக இருந்த வி.என்.ஜானகியை மணந்தாலும் அவர் பல கதாநாயகிகளுடன் உறவுள்ளவராக இருந்தார் என் பது தமிழகம் அறிந்தது. அந்தப்படத்தை அமைத்தவர் கண்ட கனவுக்கும் அவர்களின் உண்மைவாழ்க் கைக்கும் தொடர்பே இல்லை. ஆனால் என்றாவது யதார்த்தம் கனவுகளை உருவாக்குவதற்குத் தடை யாக இருந்ததுண்டா என்ன? ■





எப்போதும் வன்முறைத்தீர்வுகளையே நாடிய

# ஏரியல் ஷரோன்

(1928 - 2014)



அவி ஷலைம்

எட்டு வருடங்கள் 'கோமா' உறக்க நிலையில் இருந்த ஏரியல் ஷரோன் ஜனவரி 11 ஆம் திகதி காலமானார். இஸ்ரேல் நாட்டின் 'புனிதர்களுள்' மிக முக்கியமான ஷரோன் சர்ச்சைக்குரிய மனிதராகவும் விளங்கினார். ஒரு படை வீரனாகவும் பின்னர் அரசியல்வாதியாகவும் விளங்கிய அவரது நீண்ட வாழ்க்கை ஏற்றமும் இறக்கமும் நிறைந்தது. அவரது அரசியல் வாழ்க்கை முழுமையும் ஒரேயொரு பிரச்சினையைச் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது. இஸ்ரேலுக்கும் அதன் அயலில் உள்ள அரபு நாடுகளுக்கும் இடையிலான உறவு என்ற விடயமே அது. படை வீரர் என்ற முறையில் ஷரோன் அப்பிரச்சினையில் ஊறித்திழைத்தவர். தான் நினை த்ததைச் செய்து முடித்தலும், தன் விமர்சகர்களைத் துச்சமாக மதிக்கும்

அவரது குணமும், சிறிதும் இரக்கம் காட்டாத நடைமுறைகளும் அவருக்கு 'புல்டோசர்' என்ற பட்டப் பெயரைத் தேடிக்கொடுத்தது. ஷரோனிடம் மிக மோசமான ஆளுமைக் குறைபாடு இருந்தது. படுபாதகச் செயல்கள், ஊழல் என்பனவற்றிற்குப் பெயர்போனவர் ஷரோன். இந்தக் குறைகள் இருந்த போதும் இஸ்ரேலின் வரலாற்றில் ஷரோனுக்குத் தனியிடம் உள்ளது.

ஷரோன் ஒரு தீவிரவலதுசாரி யூத தேசியவாதி, ஓர் பயங்கரப் பேர்வழி. எப்போதும் இராஜதந்திரத்திற்குப் பதில் பலாத்காரத்தை உபயோகிப்பதில் தொடர்ச்சியாக நாட்டம் கொண்டிருந்த ஒருவர். அராபிய நாடுகளுடனான அவரது உறவு இவ்வாறாகத் தான் இருந்தது. கிளாஸ் விற்ஸ் (Clausewitz) என்பவர் 'யுத்தம் என்பது அரசியலினை வேறு வழிகளில் தொடர்வது தான்' என்று கூறினார். இந்தப் புகழ் பெற்றகூற்றை மாற்றி இராஜதந்திரம் என்றால் யுத்தத்தை வேறுவழிகளில் தொடர்வதுதான் என்று கூறினால் ஏரியல் ஷரோன் விடயத்தில் பொருந்தும்.

தன்னுடைய வாழ்க்கை சரித்திரத்திற்கு ஷரோன் தெரிந்தெடுத்த தலைப்பு 'போர் வீரன்' என்பதாகும். அவர் சேக்ஸ்பியரின் கொரியோலானஸ் என்ற பாத்திரத்தை ஒத்தவர். அவரது விமர்சகர்கள் அவரை துப்பாக்கிச் சியோனிசம் (Gun zionism) என்ற தத்துவத்தின் சூத்திரதாரி என்று கண்டித்தனர். சியோனிசம் உண்மையில் பலம்மிக்கவன், நீதியான நெஞ்சம் கொண்டவன், அஞ்சாத போராளி என்பவனே ஒரு யூதன் என்ற படிமத்தை முன்வைத்தது. துப்பாக்கிச் சியோனிஸ்ட் இப்படிமத்தின் எதிர் மறைச்சித்திரிப்பு. சியோனிஸ்ட் ஆக்கிரமிப்பின் பயங்கரமான கொடிய இராணுவ முகத்தை ஏரியல் ஷரோனில் பலஸ்தீனியர்கள் கண்டார்கள்.

1953இல் மேஜர் பதவியில் இருந்த ஷரோன் முதலாவது போர்க்குற்றத்தைப் புரிந்தார். குப்பியா (QIBIYA) என்ற யோர்தானியக் கிராமத்தில் 69 சிவிலியன்களைப் படுகொலை செய்தார். 1982 இல் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஷரோன் இஸ்ரேலின் லெபனான் மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் தொடக்கினார். அவர் அப்போது பெரியதொரு புவியரசியல் (Geopolitical) திட்டம் ஒன்றோடு தான் இந்த யுத்தத்தைத் தொடர்ந்தார். ஆனால், அவரது திட்டம் எந்தவொரு இலக்கையும் அடைய உதவவில்லை. பெய்ரூட்டில் சப்ரா, சட்டிலா அகதி முகாம்களில் தங்கியிருந்த பலஸ்தீனியர்களை கிறிஸ்தவர்கள் (Phalangists) படுகொலை செய்தனர். அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை; அதற்கான பொறுப்பு ஏரியல் ஷரோன் உடையது என விசாரணை ஆணைக்குழுவொன்று தீர்ப்பு வழங்கியது. இத்தீர்ப்பு ஏரியல் ஷரோனின் நெற்றியில் ஒரு கறை போன்று ஒட்டிக்கொண்டது. ஆனால், பாதுகாப்பு அமைச்சராக இருப்பதற்குத் தகுதியில்லாதவர் என்று அறிவிக்கப்பட்ட ஏரியல் ஷரோன் இஸ்ரேலின் பிரதமரானார். இதனை யார்தான் எதிர்வு கூறியிருக்க முடியும்.

2001 தேர்தல் பிரசாரத்தின் போது ஏரியல் ஷரோன் தான் சமாதானத்தின் மறு அவதாரம் என்ற தோற்றத்தை தருவதற்கு முயன்றார். ஊடகங்கள் அவரைப் பற்றிய பொய்ப்புனைவை உருவாக்கின. இரத்த வெறி கொண்ட போர்வீரன் ஒருவர் முதுமைக் காலத்தில் 'சமாதானத்தின் காவலன்' ஆக மறு அவதாரம் செய்திருப்பதாக அவை புனைந்துரைத்தன. ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அவரை 'சமாதான புருஷர்' (Man Of Peace) என்று புகழ்ந்துரைத்தார். கடந்த 40 வருட காலமாக நான் அராபிய-இஸ்ரேல் மோதல் நிலை பற்றிய ஆய்வாளனாக இருந்து வருகிறேன். ஷரோனைச் 'சமாதான புருஷர்' என்று கூறுவதற்கு இம்மியளவு சான்றைக்கூட நான் காணவில்லை. ஷரோன் ஒரு போர் வெறியர். உச்சி முதல் உள்ளங்கால்வரை அவரிடம் போர் வெறி வெளிப்பட்டது. அராபிய வெறுப்பும், நிரந்தரமாகவே அப்பிராந்தியத்தைப் மோதல் நிலையில் வைத்திருப்பதும் அவரின் கொள்கை. அதிகாரம் அவர் கையில் கிடைத்ததும் ஷரோன் எப்பொழுதுமே வன்முறைத் தீர்வுகளிலேயே அக்கறை யோடு செயற்பட்டார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்பது ஷரோனின் பிரதமர் பதவிக்காலத்தில் பிரதான கவனம் பெற்ற விடயம். பலஸ்தீன தீவிரவாதக் குழுக்களிற்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளையும் தாக்குதல்களையும் அவர் முடுக்கிவிட்டார்.

2001இற்கும் 2006இற்கும் இடைப்பட்ட காலத்தில் பாலஸ்தீனிய அதிகார சபையுடன் எந்தவிதமான பேச்சுவார்த்தைகளும் இடம் பெறவில்லை. இதனை ஷரோன் பெருமைப்படவேண்டிய விடயம் என்றே கருதினார். அவருடைய சிந்தனைப்படி பேச்சுவார்த்தையென்றால் அது விட்டுக்கொடுப்பு என்று பொருள்படும். ஆகவே, அவர் பேச்சுவார்த்தையை வெறுத்தார்; அதனைத் தவிர்த்துக் கொண்டார்.

பேச்சுவார்த்தையை தவிர்த்துக் கொண்டதோடு இஸ்ரேல், பலஸ்தீனம் என்ற இரு அரசுகள் என்ற தீர்வை நோக்கிய சர்வதேசத் திட்டங்கள் யாவற்றையும் நிராகரித்தார். 2002 ஆம் ஆண்டில் அராபிய நாடுகளின் சமாதான முன்முனைவு பிரேரிக்கப்பட்டது. மேற்குக் கரையையும் காசாவையும் உள்ளிட்ட பிரதேசத்தில் கிழக்கு ஜெருசலேத்தை தலைநகராகக் கொண்டு ஒரு சுதந்திர பாலஸ்தீனத்தை அமைக்க சம்மதித்தால் தாம் சமாதானத்தையும் இயல்பு வாழ்க்கையையும் கொண்டு வர உதவுவோம் என்று அராபிய ஒன்றியத்தின் 22 நாடுகள் கூட்டாக வேண்டுகோள் விடுத்தன. அடுத்து 2003 ஆம் ஆண்டில் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா மற்றும் ஐக்கிய நாடுகள் என்ற நான்கு தரப்பினரால் ஒரு முன்னோக்குத் திட்டம் (Road Map) பிரேரிக்கப்பட்டது. இதன்படி 2005 ஆம் ஆண்டின் முடிவில் இருவருடங்களுக்குள் இஸ்ரேலுக்குச் சமதையாக பாலஸ்தீன அரசு ஒன்று உதயமாகும் என்று கூறப்பட்



இராணுவ நடவடிக்கையொன்றின் போது மோஷே தயானுடன் ஏரியல் ஷரோன் (1956 செப்.11)



எகிப்துடனான 1956 போரின் போது சினாய் பாலைவனத்தில் சக படைவீரர்களுடன் ஷரோன்



எகிப்துடனான 1956 போரின் போது சினாய் குடாவை இஸ்ரேலிய படைகள் கடந்து செல்லும் போது ஷரோன் அவதானிக்கிறார்



மேஜர் ஜெனரல் ஏரியல் ஷரோன் முன்னாள் இஸ்ரேலிய பிரதமருடனும் முன்னாள் இராணுவ தளபதி ஹைய்ம் பார் லெவ்வுடனும் இஸ்ரேல்- எகிப்து எல்லையோரம் செல்லும் காட்சி (1971 ஜனவரி 27)

டது. ஷரோன் இவையாவற்றையும் புறந்தள்ளிவிட்டு ஒருதலைப்பட்ச மான முடிவுகளை எடுத்தார். இஸ்ரேலின் எல்லைகளை ஒரு தலைப்பட்சமாக தானே வரைந்து கொள்வதுதான் ஷரோனின் இலக்கு. ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளின் பெரும்பங்கை இஸ்ரேலுடன் சேர்த்துக்கொள்வதே அவரின் திட்டம். இந்த இலக்கை அடைவதற்காக முதற்கட்டமாக அவர் மேற்குக் கரையில் பாதுகாப்புத் தடை வேலியை (Security Barrier) எழுப்பினார். பாலஸ்தீனியர்கள் இதனை இன ஒதுக்கல் சுவர் (APARTHEID WALL) என்று குறிப்பிட்டனர். சர்வதேச நீதிமன்றம் இதனைச் சட்ட விரோதமானது எனக் கண்டனம் செய்தது. இந்தத் தடைச்சுவர் 1967 யுத்தத்திற்கு முந்திய எல்லையைவிட மூன்று மடங்கு நீளமானது. அதன் பிரதான நோக்கம் பாதுகாப்பு அன்று; நிலப்பறிப்புத்தான் அத்தடைச்சுவரின் நோக்கம். நல்ல முறையில் வேலிகளை அமைத்துக்கொள்வதால் அயலுறவை வளர்க்கலாம் என்பது உண்மையே. அதற்காக அயலவரின் காணிக்குள் வேலியை அமைக்கக்கூடாது. 2003 ஆம் ஆண்டின் முன்னோக்குத் திட்டத்தின் இரண்டாவது கட்டம் ஆகஸ்ட் 2005ஆம் ஆண்டில் காசா பகுதியில் இருந்து 8000 யூதர்களை வெளியேற்றுவதும் அவர்களது குடியிருப்புகளை அகற்றுவதுமாக இருந்தது. யூதக்குடியேறிகளின் தந்தை எனப்போற்றப்பட்ட ஷரோனுக்கு இது பேரதிர்ச்சி தரும் விடயம். அவர் காசாவில் இருந்து விலகிக் கொள்ளத் தயாராக இருக்கவில்லை. முன்னோக்குத் திட்டம் பேச்சுவார்த்தைகள் இடையிடையே நடத்தப்பட வேண்டும் என்று கூறியது. ஷரோன் பேச்சுவார்த்தையை நிராகரித்தார். தனது ஒருதலைப்பட்ச நடவடிக்கை மூலம் அரசியல் செயல்முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். பாலஸ்தீன அரசு உருவாவதைத் தடைப்படுத்தி மேற்குக்கரைப் பகுதியில் புவியரசியல் நிலையில் எந்தவித மாற்றத்திற்கும் இடமில்லாமல் செய்தார்.

ஒழுக்கக்கேடான அக்கறை

யின்மை (Depraved indifference) என்றொரு சட்டக் கலைச்சொல் உள்ளது. வேண்டுமென்றே செய்தல், இரக்கமற்ற உதாசீனம், திறமையின் மையான கவனமின்மை ஆகியவற் றைக் குறிக்கும் இந்தச் சொற்தொடர் பிறரின் வாழ்க்கை பற்றிய அக்கறை எதுவுமற்ற இந்தவகை நடத்தையை ஒரு குற்றமாக, ஒரு குற்றப்பொறுப் புச் சுமத்தப்படக்கூடிய ஒன்றாகக் கொள்ளப்படுகிறது. பாலஸ்தீனியர் தொடர்பாக ஷரோன் ஒழுக்கக்கே டான அக்கறையின்மையை வெளிப் படுத்தினார்.

தனது வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் 'லிக்குட்' கட்சியில் இருந்து விலகி மத்திய பாதைக் கட்சியான கடிமா (KADIMA) கட்சியை உரு வாக்கினார். ஆனால், கடிமா ஷரோன் இறப்புக்கு முன்னரே மங்கிப் போய் விட்டது. நெஸட் என்ற இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் 120 ஆசனங்க ளில் இரண்டு ஆசனங்கள் மட்டுமே கடிமாவிற்கு உண்டு. ஷரோன் இஸ் ரேலிய அரசியலில் ஒரு மறு சீர் ஒழுங்கைக் கொண்டுவரலாம் என்று இறுதி நேரத்தில் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்தது.

இஸ்ரேலின் அரசியலில் ஷரோன் விட்டுச் சென்றுள்ள பாரம்பரியம் ஒன்று நீடித்து நிற்கிறது. உலகிலேயே மிக மோசமான இனவாதம், பிறமக் கள் மீதான வெறுப்புணர்வு, ஆக்கி ரமிப்பு, விஸ்தரிப்பு வாதம், விட்டுக் கொடுக்காத பிடிவாதம் ஆகியன வற்றை பற்றிப் பிடித்துக்கொண் டுள்ள பிரிவினர் ஷரோனின் வாரிசு களாக இஸ்ரேலின் செயல்முடக்கம் பெற்ற அரசியல் முறைமைக்குள் நிலைத்து நிற்கின்றார்கள். ■

*(ஈராக்கில் பிறந்த பிரிட்டிஷ்-இஸ்ரேலிய சரித்திரவியலாளரான அவி ஷலைம் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் முன்னாள் சர்வதேச உறவுகள் பேராசிரியர்)*

---

*(13ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

இதனால் மூன்று தலைமுறை இளைஞர்கள் பலியிடப் பட்டுள்ளனர். இதே தவறுகளை நாம் மீண்டும் இழைக்க முடியாது. அது வரலாற்றுக்கு எதிரான மாபெரும் குற்ற மாகும்.

மேற்குறிப்பிட்ட போராட்டங்களின் போது இரத்தம் சிந் திக் கொடுக்கப்பட்ட விலை பற்றிய மதிப்பீடு செய்யப்பட வேண்டும். இலங்கையின் வடக்கு, தெற்கு, கிழக்கு, மலை நாடு என எல்லாப் பகுதியினரும் ஒன்று சேர்ந்து இந்த மதிப்பீட்டை நிகழ்த்த வேண்டும். ஒரு உயர்மட்ட உணர்வு நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும். அவ்வாறான உயர் மட்ட உணர்வு நிலையின் பெறுபேறாக பாட்டாளிவர்க்கப் புரட்சியின் மேல் உயர் மட்ட அரசான மக்கள் ஜனநாயக அரசை நிறுவுதல் சாத்தியமாகும். இலங்கையின் எல்லா ஒடுக்கப்பட்ட மக்களையும், இனங்களையும் தேசிய இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாய் இந்த மக் கள் ஜனநாயக அரசு விளங்கும். அவ்வரசு சோஷலிசத் தையும், இறுதி இலக்கான கம்யூனிசத்தையும் நோக்கிப் பயணிப்பதாய் அமையும்.

தமிழ்த்தேசியத்தின் எதிர்காலம் இலங்கையின் முழு மக் களினதும் எதிர்காலத்துடன் பின்னிப் பிணைந்துள்ளதுத மிழ்த்தேசிய இனத்தின் விடுதலை முழு இலங்கை மக்களி னதும் விடுதலையில், இருந்து பிரிக்க முடியாதது. நாம் எல்லோரும் சுதந்திரம் பெற்றவர்கள் ஆவோம். அல்லது யாவரும் ஒன்றாக அடிமைத்தனத்தில் வீழ்வோம் ஒன்றாக எழுவோம் அல்லது ஒன்றாகவே வீழ்ந்து அழுந்துவோம். ஒற்றுமையால் எமக்கு கிடைப்பது வெற்றியும், சுதந் திரமும், ஆதலால் நாம் ஒன்றுபட வேண்டிய தருணம் இது. ■

*அஜித் சுரேந்திர ரூபசிங்க இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்)யின் பொதுச்செயலாளர்*

---

*(09ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

'எமக்குத் தேவையில்லாத விடயங் கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத் துவதற்கு ஜனாதிபதி இப்போது முயற்சிக்கிறார். நாட்டின் சட்டங் களை அலட்சியம் செய்துகூட சில குறிப்பிட்ட விடயங்களில் பேச்சு வார்த்தை நடத்த அவர் முயற்சிக்கி றார். இதன் விளைவுகளுக்கு அவர் முகங்கொடுக்க வேண்டிவரும். பிர தம செயலாளர் நியமனம் தொடர் பில் நாம் நீதிமன்றத்துக்குச் சென்றால் கூட, அதற்கு ஜனாதிபதி கவலைப்ப டமாட்டார். தமிழர்கள் மீதான தாக்கு தல்களுக்கு அரசாங்கமே பொறுப்பு என்று முழு உலகமுமே கூறுகிறது.

'மாகாண சபைகளுக்கு அதிகாரங் களை ஜனாதிபதி பரவலாக்காமல் இருப்பதற்கு காரணங்கள் இருக்கின் றன. வடக்கில் உள்ள மக்களின் கோரிக்கைகளுக்கு தான் அடிபணிய வில்லை என்று அடுத்த தேர்தல்களில் தென்னிலங்கை மக்களுக்கு அவர் கூறுவார். தெற்கில் வாக்கு வங்கி யைத்தக்க வைப்பதற்கு இதுவே வழி. அரசாங்கம் தவறான பாதை யைத் தெரிவு செய்திருக்கிறது. அர சாங்கத்தின் இத்தகைய நடவடிக்கை களினால் நாடு பெரும் அனர்த்தத்தை எதிர்நோக்கப்போகிறது. தனது அதி காரங்களைக் காப்பாற்றிக் கொண்டு ஒரு சர்வாதிகாரியாவதற்கு ஜனாதி பதி முயற்சிக்கிறார். இன்றைய சூழ்நி லையில் பல நாடுகள் அதிகாரங்க ளைப் பரவலாக்க வேண்டுமென்றே கூறுகின்றன. அண்மைக்காலங்களில் சர்வாதிகாரிகளாகச் செயற்பட்ட பலர் தங்கள் நடவடிக்கைகளின் விளைவு களை அனுபவித்திருக்கிறார்கள். எகிப்து, ஈரான், பாகிஸ்தான் போன்ற நாடுகளின் தலைவர்கள் கடந்த காலத் தில் தாங்கள் செய்த காரியங்களுக் காக வருந்தவேண்டியேற்பட்டது. எனவே இலங்கையின் தற்போதைய ஆட்சியாளர்களும் யதார்த்த நிலையை உணர்ந்துகொண்டு செயற் படவேண்டும்.' இவ்வாறு முதலமைச் சர் தமதுரையில் குறிப்பிட்டார். ■

*(33ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

துன்பத்தை உலகம் வருந்தி அழைத்தது போல் இருந்தது. மனிதர் எங்கு பார்த்தாலும் துணிச்சலோடு சவாலுக்குக் காத்திருந்தார்கள்.

இன்று சீனாவில் தேசியவாதம் வளர்ந்து செல்கிறது என்பதில் ஐயமில்லை. ஐக்கிய அமெரிக்கா செப்டெம்பர் 11, 2001 இன் பின்னர் இரு யுத்தங்களை நடத்தியது. அமெரிக்கா, சீனா என்ற இரு நாடுகளும் பரஸ்பரம் போர் உணர்வை வெளிப்படுத்தவில்லை. அதேபோல் அவை மட்டுப்படுத்தப்பட்ட யுத்த ஆபத்தைப் பற்றி அலட்சியமாக இருப்பதாகவும் தெரியவில்லை. சீனா கிழக்காசியப் பிராந்தியத்தில் முன்னரை விட முக்கிய வகிபாகத்தைப் பெற விரும்புகிறது. ஐக்கிய அமெரிக்காவிற்கும் அப்பிராந்தியத்தில் நட்பு நாடுகள் உள்ளன. அவற்றைப் பாதுகாக்கும் கடப்பாட்டை அது கொண்டுள்ளது. தவறான கணிப்பீடுகள் என்ற ஆபத்து எப்போதும் இருந்து கொண்டேயிருக்கும். சரியான கொள்கைத்தெரிவுகளைச் செய்வதன் மூலம் இந்த ஆபத்தைக் குறைத்துக் கொள்ளலாம். பல பொதுப்பிரச்சினைகள் உள்ளன. எரிபொருள், சக்தி, காலநிலை மாற்றம், நிதிநிலை உறுதிப்பாடு என்பன உதாரணங்கள். அமெரிக்காவும் சீனாவும் கூட்டுறவால் பெறக்கூடிய நன்மைகள் பல.

ஜேர்மனி 1914 இல் பிரித்தானியாவுடனான ஓட்டப் பந்தயத்தில் அதனை முந்திக்கொண்டு ஒரு கைத்தொழில் வல்லரசாக மாறியது. ஆனால், ஐக்கிய அமெரிக்காவைச் சீனா முந்துவதாயின் இன்னும் பல பத்தாண்டுகள் வேண்டும். இராணுவம், பொருளாதாரம், விஞ்ஞான தொழில்நுட்ப அறிவு (Soft power) என்ற எல்லா விடயங்களிலும் அமெரிக்கா தொலைதூரத்தில் முன்னே போய்க் கொண்டிருக்கிறது. சீனா அசகாயசூரத்தனத்தில் இறங்கினால் உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் பல இழப்புகளைச் சந்திக்க வேண்டி ஏற்படும்.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால் அன்று பிரித்தானியாவிற்கு எழுச்சி பெறும் ஒரு வல்லரசுடனான உறவுகளைச் சமாளிப்பதற்குப் போதிய கால அவகாசம் இருக்கவில்லை. இன்று அமெரிக்கா அவசரப்படாமல் முடிவுகளைச் செய்யக் கூடிய கால அவகாசம் உள்ளது. ஆனாலும் அமெரிக்காவும் சீனாவும் தமக்கிடையேயான உறவுகளை நன்முறையில் வைத்துக்கொள்ளுமா என்பது வேறொரு தனியான விடயம். ஆனால், இந்நாடுகள் தம் முடிவுகளை எவ்வாறு செய்து கொள்ளும் என்பது மனிதர்கள் செய்ய வேண்டிய தெரிவு ஆகும். வரலாற்றின் இரும்பு விதியொன்று இதனைத் தீர்மானிக்கப் போவதில்லை.

1914ஆம் ஆண்டின் நிகழ்வுகளில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ளும் போது ஆய்வாளர்கள் வரலாற்று ஒப்பீடுகளை அவதானத்தோடு செய்ய வேண்டும். போர் தவிர்க்க முடியாதது என்ற நினைப்பு உள்ளவர்கள் குறிப்பாக அவதானமாகப் பேசுதல் வேண்டும். போர் தவிர்க்க முடியாதது அல்ல. ஆனால், அதனைத் தவிர்க்க முடியாது என்று சிந்தித்தால் அதுவே போரைத் தவிர்க்க முடியாததாக ஆக்கிவிடும். ■

*(யோசப் எஸ்.நை, ஹார்வாட் பல்கலைக்கழக பேராசிரியர்)*

---

*(10ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

புதிய அரசியலமைப்பின் கீழ் இஸ்லாம் தொடர்ந்தும் அரச மதமாக இருக்கும். ஆனால், சிறுபான்மையினருக்கு சில வகையான பாதுகாப்பு ஏற்பாடுகள் உண்டு. ஜனாதிபதிஇரு நான்கு வருட பதவிக்காலங்களுக்கு அதிகாரத்தில் இருக்கலாம். அவருக்கு எதிராக பாராளுமன்றத்தில் குற்றப்பிரேரணை கொண்டுவந்து நிறைவேற்றி அவரைப் பதவி நீக்க முடியும். அடுத்த எட்டுவருடங்களுக்கு பாதுகாப்பு அமைச்சரை நியமிப்பதற்கு இராணுவத்துக்கு அரசியலமைப்பு அதிகாரமளிக்கிறது. இன, மத, புவியியல் அடிப்படையில் கட்சிகளை அமைப்பதற்கு தடைவிதிக்கப்படுகிறது.

புதிய அரசியலமைப்பு மீதான ஆம் அல்லது இல்லை என்ற வாக்காக சர்வஜன வாக்கெடுப்பு அமைந்திருந்தாலும், அது கடந்த வருடம் ஜுன் மாதத்தில் இடம்பெற்ற இராணுவச் சதிப்புரட்சியை சட்டபூர்வமான தாக்கும் தன்மையுடையதாக அமைந்துவிட்டது.

முர்சியிடமிருந்து அதிகாரம் பறிக்கப்பட்ட பிறகு எகிப்தில் நடைபெற்றிருக்கக் கூடிய முதல் வாக்கெடுப்பு இதுவாகும். இந்த வாக்கெடுப்பில் கிடைக்கப்பெற்ற 'ஆம்' வாக்குகளை முர்சியை பதவி கவிழ்த்த தங்கள் செயலுக்கான மக்களின் அங்கீகார முத்திரையாக இராணுவம் பயன்படுத்தப் போகிறது. அத்துடன், இவ்வருட பிற்பகுதியில் நடத்தப்படுமென்று எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஜெனரல் அப்தெல் பதாஹ் அல்-சிசி தீட்டியிருக்கும் திட்டத்திற்கான ஒரு முன்னோடி நடவடிக்கையாக இந்த சர்வஜன வாக்கெடுப்பு நோக்கப்படுகிறது. தனது தலைமைத்துவம் மீதான நம்பிக்கையை மக்கள் வெளிக்காட்டியிருக்கிறார்கள் என்று சர்வஜனவாக்கெடுப்பை ஜெனரல் சிசி அர்த்தப்படுத்தக்கூடும்.


ஒவ்வொருநாளும் செல்லச்செல்ல, ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கின் கொடுங்கோன்மை ஆட்சி நிலவிய நாட்களில் இருந்த நிலைவரத்துக்கு எகிப்து விரைந்து கொண்டிருக்கிறது. ஜெனரல் சிசி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவாரேயானால், அது முபாரக் யுகத்துக்கு எகிப்து திரும்பிச் செல்வதாகவே அமையும்.


ஜனநாயகத்தைத் தோற்றுவிப்பதற்காக துப்பாக்கிக் குண்டுகளுக்கும் பயப்படாமல் மாதக்கணக்காக கெய்ரோவின் தஹ்ரிர் சதுக்கத்தில் அணி திரண்ட எகிப்தியர்களுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சப் போகிறதா? ■

# போட்டி ஆரம்பமாவதற்கு முன்னரே தோல்வியை ஒப்புக்கொண்ட மாதிரி...

பிரதமர் வேட்பாளரை முன்னிலைப்படுத்தும் பாரம்பரியம் காங்கிரஸில் இல்லை என்பது சோனியா காந்தியின் வாதம். ஆனால் இந்த வாதத்தை பலர் ஏற்றுக்கொள்வதாக இல்லை. எந்த தாயார் தனது மகனை தியாகம் செய்வார் என்று ஏளனம் செய்கிறார் மோடி





எம்.பி.வித்தியாதரன்

பதினாறாவது லோக் சபாவைத்தெரிவு செய்வதற்கான பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு இன்னமும் மூன்று மாதங்களுக்கும் குறைவான காலகட்டமே இருக்கும் நிலையில், இந்திய 'அரசியல் வெப்பநிலை' அதிகரிக்கத் தொடங்கியிருக்கிறது. குஜராத் மாநில முதலமைச்சர் நரேந்திர மோடியை பிரதமர் வேட்பாளராக முன்னிலைப்படுத்தியதன் மூலமாக தற்போதைய பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக்கட்சி அதன் நிகழ்ச்சி நிரலை முன்கூட்டியே வகுத்துவிட்டது. முதலமைச்சராக வந்த ஆரம்ப கட்டத்தில் 2002ஆம் ஆண்டு குஜராத்தில் மூண்ட இனக்கலவரத்தின் பின்னணியில் நின்று செயற்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்ற போதிலும் மோடி தொடர்ச்சியாக நடைபெற்ற தேர்தல்களில் பெருவெற்றிபெற்று மாநிலத்தில் ஆட்சியதிகாரத்தில் இருந்து வருகிறார். அபிவிருத்தியில் கவனத்தைச் செலுத்துகின்ற ஊழலற்ற நிருவாகமொன்றை வழிநடத்தி வருவதே மோடியின் மிகப்பெரிய சொத்தாகும். இதை அவரது அரசியல் எதிராளிகளான காங்கிரஸ்காரர்களும் கம்யூனிஸ்டுகளும் தேசிய காங்கிரஸ் தலைவரான பாரூக் அப்துல்லா போன்ற தலைவர்களும் பாராட்டியிருக்கிறார்கள்.

மாநிலத்தில் ஊழலற்ற ஆட்சிமுறையும் அவரது அபிவிருத்திப் பணிகளும் குறிப்பாக கைத்தொழில் மயமாக்கல் மற்றும் மின்சார, நீர்விநியோக முகாமைத்துவமும் மோடிக்கு பெரும்புகழைக் கொண்டு வந்திருக்கின்றன. மோடி அதிகாரத்துக்கு வந்தபோது நீர்ப்பற்றாக்குறை நிலவிய மாநிலமாக இருந்த போதிலும் குஜராத் இப்போது அதிகரித்த விவசாய உற்பத்தியைப் பேணக்கூடியதாக இருப்பதைக் காணமுடிகிறது. முன்னர் குஜராத்தில் நீண்டநேர மின்வெட்டு அன்றாட நிகழ்வாக இருந்தது. இப்போது 24 மணி நேரமும் மின்விநியோகம் இடம்பெறுகிறது. தொழிலதிபர் ரடன் டாட்டா தனது 'நனோ' சிறிய கார் உற்பத்தியைத் தொடங்குவதில் பெருவாரியான பிரச்சினைகளை எதிர்நோக்கிய போது அவர் குஜராத் மாநிலத்தையே தெரிவுசெய்தார். ஒரு சில நாட்களிலேயே டாட்டாவுக்கு சகலவிதமான லைசென்ஸ்களும் வசதிகளும் வழங்கப்பட்டன.

இந்தச் சாதனைகள் சகலவற்றுக்கும் மத்தியிலும், மோடியும் அவரது கட்சியும் 2002 கலவரம் பற்றிய பிரதிமையால் கவலை கொண்டுள்ளார்கள். இராமபிரான் பிறந்த பூமியான அயோத்தியில் இருந்து இந்து ஆர்வலர்கள் திரும்பிக்கொண்டிருந்த ரயிலின் பெட்டிகள் தீக்கிரையாக்கப்பட்டதைத் தொடர்ந்தே அக்கலவரம் மூண்டது. எவ்வாறெனினும், கலவரத்தில் மோடிக்கு எந்தவித சம்பந்தமும் இல்லை போன்று நீதித்துறையும் தீர்ப்பை வழங்கிவிட்டதால் அவர் நிம்மதியடைந்தவராக இருக்கிறார்.

மோடி இப்போது மிகவும் உற்சாகமடைந்த ஒரு மனிதராகக் காணப்படுகிறார். ஜம்மு-காஷ்மீரில் இருந்து தமிழ்நாடுவரை அவர் கலந்துகொள்கின்ற கூட்டங்களுக்கு இலட்சக்கணக்கில் மக்கள் திரளுகிறார்கள். வடமாநிலங்களைப்பற்றிக் கூறத் தேவையில்லை. செயல்வீரர் என்று பெயரெடுத்த ஒரு விவேகமான அரசியல்வாதியான மோடி தனது அரசியல் எதிரிகளைக் கடுமையாகச் சாடுகிறார்.

> காங்கிரஸ் கட்சியை மீண்டும் அதிகாரத்திற்கு கொண்டு வருவதற்கு ராகுல் காந்தி தவறுவாரேயானால் அது மோடியிடம் கண்ட தோல்வியாகவே நோக்கப்படும். அதன் விளைவாக ராகுல் போன்ற இளம் தலைவரின் அரசியல் வாழ்க்கை பெரும் சேதத்திற்கு உள்ளாகக்கூடும்

இத்தகையதொரு பின்புலத்திலேயே, காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவரான ராகுல் காந்தியை, மோடியை எதிர்த்துப் போட்டியிட களமிறக்க முடியுமா என்று காங்கிரஸ்காரர்களை நோக்கி பாரதீய ஜனதாக் கட்சியினர் சவால் விடுத்து வருகிறார்கள். பாரதீய ஜனதாக் கட்சியின் இதுவரையான பிரசாரங்கள் காங்கிரஸை வலையில் சிக்க வைத்திருக்கின்றன. காங்கிரஸ் இந்தப் பொறியில் விழுந்துவிடுமென்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

ஆனால், இந்த விவகாரம் தொடர்பில் தீர்மானமொன்றை எடுப்பதற்காக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் நடைபெறவிருந்த தினத்துக்கு முதல் நாள் சோனியாகாந்தி தனது கட்சியின் தலைவர்களிடம் 'மூன்றாவது பதவிக் காலத்துக்கு பிரதமராக இருக்கப் போவதில்லை என்பதை மன்மோகன் சிங் திட்டவட்டமாகக் கூறிவிட்டபோதிலும் கூட, ராகுல் காந்தியைப் பிரதமர் வேட்பாளராக முன்னிலைப்படுத்துவது என்ற கேள்விக்கு இடமேயில்லை' என்று கூறிவிட்டார். சோனியா காந்தியின் இத்தீர்மானம் டில்லி தல்கரோரா ஸ்ரேடியத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தை அர்த்தமற்றதாக்கிவிட்டது.

பிரதமர் வேட்பாளர் ஒருவரை முன்னிலைப்படுத்தும்

**ஆம் ஆத்மிகட்சிக்கு மற்றைய அரசியல் கட்சிகள் அஞ்சுகின்றன என்றும் மக்கள் தொடர்பான மனப்போக்கையும் தந்திரோபாயங்களையும் மாற்றிக்கொள்வதற்கு அக்கட்சிகள் ஆரம்பித்திருக்கின்றன என்றும் பரவலாக மக்கள் உணரத் தொடங்கியிருக்கிறார்கள்**

பாரம்பரியம் காங்கிரஸில் இல்லை என்பதும் தேர்தலுக்குப் பிறகு மக்களினால் தெரிவு செய்யப்பட்ட எம்.பி.க்கள் ஒரு தலைவரைத் தெரிவு செய்வார்கள் என்பதுமே சோனியா காந்தியின் வாதமாகும். ஆனால், இந்தத் தர்க்கத்தை பலர் ஏற்றுக்கொள்வதாக இல்லை. ஏனென்றால், ஒவ்வொரு தேர்தலிலும் ஆட்சியதிகாரத்துக்கு கட்சி தெரிவு செய்யப்பட்டபோது யார் பிரதமராக வருவார் என்பதை மக்கள் தெரிந்தே வைத்திருந்தார்கள்.

முன்னர் ஜவஹர்லால் நேரு பிரதமராக வருவார் என்று மக்களுக்குத் தெரிந்திருந்தது. பிறகு கட்சி தேர்தலில் வெற்றிபெற்ற போதெல்லாம் பிரதமர் பதவிக்கு உரிமை கோருபவராக இந்திராகாந்தி விளங்கினார். அவருக்குப்பிறகு ராஜீவ்காந்தி தலைவராக முன்னிலைப்படுத்தப்பட்டார். சோனியா காந்தி கூட பிரதமர் பதவிக்கு உரிமை கோர முயற்சித்தார். ஆனால், சரத் பவார், பி.ஏ.சங்மா போன்ற தனது கட்சியின் சில தலைவர்களிடமிருந்தும் நேச அணிக் கட்சிகளின் தலைவர்களிடமிருந்தும் கிளம்பிய எதிர்ப்புக் காரணமாக அவர் பின்வாங்க வேண்டியேற்பட்டது. அதையடுத்தே அவர் மன்மோகன் சிங்கைப் பிரதமராக்கினார்.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான அணுசக்தி உடன்படிக்கை காரணமாக இடதுசாரிக் கட்சிகள் ஆதரவை விலக்கிக்கொண்ட பிறகு ஐக்கிய முற்போக்குக்கூட்டணி தேர்தலைச் சந்தித்தபோது, அக்கூட்டணி மீண்டும் அதிகாரத்துக்கு வந்தால் மன்மோகன் சிங்கே பிரதமராக வருவார் என்பது தெளிவாகத் தெரிந்தது. இரண்டாவது தடவையாக அவர் பிரதமராக வந்தார். இப்போது, மூன்றாவது தடவையாக பொறுப்பை ஏற்பதற்கு விரும்பவில்லை என்று மன்மோகன்சிங் திட்டவட்டமாக அறிவித்துவிட்ட நிலையில், காங்கிரஸ் மீண்டும் அதிகாரத்துக்கு வந்தால் பிரதமராக யார் வருவார் என்று மக்கள் கேட்கிறார்கள் என்பது வெளிப்படையானது. பிரதமர் வேட்பாளராக ராகுல் காந்தியை முன்னிலைப்படுத்துவதற்கு காங்கிரஸ் தயங்குகின்ற போதிலும், ராகுல் காந்தியே பிரதமராகப் போகின்றார் என்பது அனேகமாக நிச்சயமான ஒன்று. காரணம் மிகவும் தெளிவானது. வரவிருக்கும் தேர்தலில் காங்கிரஸ் கட்சியை அதிகாரத்துக்குக் கொண்டுவருவதற்கு ராகுல் காந்தி தவறுவாரேயானால், அது மோடியிடம் கண்ட ஒரு தோல்வியாகவே நோக்கப்படும். அதனால் ராகுல் போன்ற இளம் தலைவர் ஒருவரின் அரசியல் வாழ்க்கை சேதத்துக்குள்ளாக்கக்கூடும். அதனால், காங்கிரஸின் நோக்கில் இருந்து பார்க்கும் போது ராகுல் காந்தியைப் பிரதமர் வேட்பாளராக முன்னிலைப்படுத்தாதிருப்பதற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கும் தீர்மானம் விவேகமானது என்றே கூறவேண்டும். ஏனென்றால், காங்கிரஸ் கட்சியினால் பாரதீய ஜனதாவையும் ஏனைய எதிரணிக் கட்சிகளையும் தோற்கடிக்க முடியுமாக இருந்தால், காங்கிரஸின் கேள்விக்கிடமின்றிய தலைவராக ராகுலே விளங்குவார் என்பதிற் சந்தேகமில்லை.

எவ்வாறெனினும், காங்கிரஸ் எடுத்திருக்கும் தீர்மானம் போட்டிக்கு முன்னதாகவே தோல்வியை ஒப்புக் கொண்டதைப் போன்றதாகும்.

திரைக்குப் பின்னால் இருந்து செயற்படுவதற்கு காங்கிரஸ் இப்போது தயாராகிக் கொண்டிருக்கிறது போலத் தோன்றுகிறது. தேர்தலுக்குப் பிறகு அனேகமாக ஒன்றில் எதிர்க்கட்சியாக இருக்க வேண்டிவரும் அல்லது பாரதீய ஜனதா அதிகாரத்துக்கு வருவதைத் தடுக்க வேண்டுமென்றால் வேறு ஏதாவது ஒரு அணியை ஆதரிக்க வேண்டிவரும் என்று காங்கிரஸ் நம்புகிறது. பாரதீய ஜனதாவின் தேசிய நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் உரையாற்றிய போது நரேந்திரமோடி சோனியா காந்தியை ஏளனம் செய்தார். எந்தத் தாய் தனது மகனைத் தியாகம் செய்வார் என்று அவர் கேட்டார். பாரதீய ஜனதாவுடனான அரசியல் போருக்குத் தலைமை தாங்க ராகுல் காந்தியினால் இயலாமற்போகும் என்பதை சோனியா அறிவார் என்பதே மோடியின் ஏளனத்தின் அர்த்தம்.

ஆனால், மத்தியில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான மோடியின் பாதை இரண்டே வயதுடைய ஆம் ஆத்மி கட்சியினால் நெருக்கடிகள் மிகுந்ததாக ஆக்கப்பட்டுள்ளது. குஜராத்தில் உள்ள சகல லோக்சபா ஆசனங்களிலும் நாடுபூராகவும் 300க்கும் அதிகமான ஆசனங்களிலும் போட்டியிடப்போவதாக ஆம் ஆத்மி கட்சி ஏற்கனவே, தெளிவுபடுத்திவிட்டது. ராகுல்காந்தி, நிதின் கட்காரி (ஊழல் குற்றச்சாட்டுகளையடுத்து பதவி விலகிய முன்னாள் பாரதீய ஜனதா தலைவர்) மற்றும் முக்கிய தலைவர்களை எதிர்த்துப் போட்டியிடப் போவதாகவும் அக்கட்சி அறிவித்திருக்கிறது. முன்னாள் டில்லி முதலமைச்சர் ஷீலா தீக்ஷித்துக்கு மக்கள் மத்தியில் நல்ல செல்வாக்கு இருந்த போதிலும் கூட, அவரை ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் 25 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார் என்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். பேராசிரியராகவும் கவிஞராகவும் இருந்து அரசியல்

வாதியாக மாறிய ஆம் ஆத்மியின் குமார் பிஸ்வாஸ் ராகுல் காந்தியின் தொகுதியான அமேதியில் ஏற்கனவே தனது பிரசாரத்தைத் தொடங்கிவிட்டார்.

நாடுபூராகவும் மக்களின் கவனத்தை ஆம் ஆத்மி ஈர்த்திருக்கிறது என்பதை ஜனவரி 20 இல் வெளியிடப்பட்ட கருத்துக் கணிப்பு முடிவு ஒன்றின் மூலம் தெளிவாகத் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. நாடுதழுவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட இக் கருத்துக் கணிப்பில் 18 சதவீதமான வாக்காளர்கள் ஆம் ஆத்மி கட்சி வேட்பாளர்களை நிறுத்தினால் அவர்களை ஆதரிக்கப் போவதாகக் கூறியிருக்கிறார்கள். தற்போதைய தருணத்தில் இது ஒரு மிகைப்படுத்தப்பட்ட கணிப்பாக இருக்கக்கூடும். என்றாலும், 10 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளை ஆம் ஆத்மி கைப்பற்றக் கூடிய சாத்தியத்தை நிராகரிக்க முடி யாது. மோடிக்கு ஆதரவான நகர்ப்புற இளைஞர், யுவதிகளின் வாக்குகளை ஆம் ஆத்மி கட்சி அரித்தெடுக்கப் போகிறது என்பதால் புதிய நிலைவரம் மோடிக்கும் பாரதீய ஜனதாவுக்கும் ஒரு சிக்கலைத் தோற்றுவிக்கும். அதனால், 545 எம்.பி.க்களைக் கொண்ட லோக்சபாவில் பாரதீய ஜனதாவுக்கு 200க்கும் குறைவான ஆசனங்களே கிடைக்கக்கூடிய நிலைமை தோன்றலாம். புதிய லோக் சபாவில் பெரியதொரு பாத்திரத்தை ஆம் ஆத்மி வகிக்காமல் போகக்கூடும். ஆனால், விவேகமான முறையில் பாரதீய ஜனதா நிலைவரத்தைக் கையாளாவிட்டால், மோடிக்கான வாய்ப்புகளை ஆம் ஆத்மி பாழாக்க முடியும் என்பது நிச்சயம். மேற்குறிப்பிட்ட கருத்துக் கணிப்பின் பிரகாரம் பாரதீய ஜனதா 187 -195 க்கும் இடைப்பட்ட ஆசனங்களைக் கைப்பற்றும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. கடந்த லோக்சபா தேர்தலில் அக்கட்சிக்கு 112 ஆசனங்களே கிடைத்தன. மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரஸுக்கு 204 ஆசனங்கள் கிடைத்தன. காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக்கூட்டணி க்கு 134-142க்கும் இடைப்பட்ட ஆசனங்கள் மாத்தி ரமே கிடைக்கக் கூடிய வாய்ப்புகள் இருக்கிறது.

ஆம் ஆத்மியினால் ஏற்படுத்தப்பட்டிருக்கக்கூடிய தாக்கத்தை அனேகமாக சகல கட்சிகளிலும் தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கிறது. ஆம் ஆத்மி கட்சிக்காரர்களைப் போன்று பாரதீய ஜனதாத் தொண்டர்களும் சகல நிகழ்வுகளிலும் குல்லா தொப்பி அணியத் தொடங்கியிருக்கிறார்கள். அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் கூட்டம் நடைபெற்ற தினத்துக்கு மறுநாள் டில்லி ராம்லீலா மைதானத்தில் இடம்பெற்ற பாரதீய ஜனதாவின் தேசிய நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கூட குல்லா அணிந்திருந்தனர். கிராம மட்டத்தில், மாவட்ட மட்டத்தில், மாநில மட்டத்தில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டே காங்கிரஸின் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்று ராகுல் காந்தி அறிவித்திருக்கிறார். முன்னரெல்லாம் காங்கிரஸ் மேலிடமே கட்சியின் வேட்பாளர்கள் யார் யார் என்பதைத் தீர்மானித்து வந்தது. கட்சியில் 'பொது மகனுக்கும்' தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கொடுக்கப்படுமென்றும் ராகுல் காந்தி பேசியிருக்கிறார்.



அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையிலான டில்லி அரசாங்கம் மின் கட்டணங்களில் குறைப்புச் செய்ததைத் தொடர்ந்து மகாராஷ்டிரா மாநில அரசாங்கமும் காங்கிரஸ் தலைவர்களிடமிருந்து வந்த கோரிக்கைகளையடுத்து மின் கட்டணங்களை 20 சதவீதத்தினால் குறைத்திருக்கிறது. அதே வேளை, இராஜஸ்தான் மாநிலத்திலும் மத்தியப் பிரதேச மாநிலத்திலும் பாரதீய ஜனதாவின் புதிய அரசாங்கங்கள் பொதுமக்களின் தேவைகளில் கூடுதல் அக்கறைகாட்ட ஆரம்பித்திருக்கின்றன. தேர்தல்களுக்குப் பிறகு சாதாரண மக்களை மறந்துவிடுவதை வழக்கமாகக் கொண்ட அரசியற் கட்சிகள் ஆம் ஆத்மியின் வருகையையடுத்து போக்கை மாற்றத் தொடங்கிவிட்டன.

எனவே, ஆம் ஆத்மி கட்சிக்கு மற்றைய அரசியல் கட்சிகள் அஞ்சுகின்றன என்றும் மக்கள் தொடர்பான மனப்போக்கையும் தந்திரோபாயங்களையும் மாற்றிக்கொள்ள ஆரம்பித்திருக்கின்றன என்றும் மக்கள் உணரத் தொடங்கியிருக்கிறார்கள். ■

# காத்திருந்து காத்திருந்து காலங்கள் போனதடி

'காத்திருந்து காத்திருந்து காலங்கள் போனதடி' என்ற விஜயகாந்த் நடித்த 'வைதேகி காத்திருந்தாள்' படத்தில் ஒரு பாடல் வரும். அந்த சினிமாப்பாடல் வரிகளுக்கு ஏற்றாற் போல் அவரது கட்சியின் முடிவிற்காக தமிழகத்தில் அனைத்துக் கட்சிகளும் இப்போது காத்திருக்கின்றன. பாராளுமன்றத் தேர்தல் கூட்டணி தொடர்பான அணி இன்னும் தீர்க்கமாக அமையாமல் இருப்பதற்கு விஜயகாந்தின் திணறல் ஒரு அடிப்படைக் காரணமாக மேலோங்கி நிற்கிறது. அவரை முதலில் தமிழருவி மணியன் சந்தித்தார். பிறகு பா.ஜ.க. மாநிலத் தலைவர்களான பொன்.ராதாகிருஷ்ணன், இல.கணேசன் உள்ளிட்டோர் சந்தித்தார்கள். 'வந்தால் மகிழ்ச்சி' என்று கலைஞர் கருணாநிதி 'வரவேற்பு பா' பாடினார். தி.மு.க. சார்பில் பேராயர் எஸ்.றா. சற்குணம் பார்த்தார். விடுதலைச் சிறுத்தைகளின் தலைவர் திருமாவளவன் சந்தித்து 'வாரீர் நீவிர்' என்று அழைத்தார். ஆனாலும் கிணற்றில் போட்ட கல் போல் இருக்கும் விஜயகாந்த் திடீரென்று மலேசியா புறப்பட்டுச் சென்று விட்டார். அங்கும் 'விடாது கறுப்பு' என்பது போல் விஜயகாந்தை விரட்டினார்கள். மனித நேய மக்கள் கட்சியின் சார்பில் அதன் தலைவர் தமீம் அன்சாரி சந்தித்து, 'நீங்கள் தி.மு.க. கூட்டணிக்கு வர வேண்டும். மதவெறி பா.ஜ.க.வை தமிழகத்தில் காலூன்ற விட்டு விடாதீர்கள்' என்று கோரிக்கை விடுத்தார்.



விஜயகாந்தை பொறுத்த மட்டில் பாராளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வை வீழ்த்துவதே இலட்சியம் என்று பேசி வருகிறார். அந்த இலட்சியத்தை அடைவதற்கு தி.மு.க. கூட்டணிதான் அவருக்கு சாதகமாக அமையும் என்பது தே.மு.தி.க. முன்னணிப் பிரமுகர்களின் எண்ணம்

இத்தனைக்கும் 'வாய்ப்பூட்டு' சட்டம் போட்டது போல் அமைதி காக்கும் விஜயகாந்த், அனைத்துத் தரப்பையுமே குழப்பிக் கொண்டிருக்கிறார். 'யாருடன் கூட்டணி' என்பதை விட 'யாருடன் வேண்டுமென்றாலும் கூட்டணி வைப்பேன்' என்று பிரகடனம் செய்வது போல் அறிக்கைகள், பேட்டிகள் கொடுத்து வருகிறார். அயல்நாட்டு மண்ணில் இருந்து பெப்ரவரி 2ஆம் திகதி அவர் நடத்தப்போகும் மாநாட்டிற்கு தன் தொண்டர்களை அழைத்து கடிதம் எழுதினார். அதில், 'ஊழலில் திளைத்தவர்கள் நாடாளும் கனவுடன் தமிழகத்தில் பவனி வருகிறார்கள். அவர்களை வீழ்த்துவோம்' என்றார். 'நன்றி மறந்தவர்களை தோற்கடிப்போம்' என்றும் கூறினார். பெப்ரவரி மகாநாட்டிற்கு 'ஊழல் எதிர்ப்பு மகாநாடு' என்று பெயர் வைத்தார். இந்த மூன்று விடயங்களையும் வைத்துப் பார்த்தால், அவர் அ.தி.மு.க.வுடன் அணி அமைக்கமாட்டார். காங்கிரஸுடனும் இல்லை. தி.மு.க.வுடனும் இல்லை என்று தோன்றும். ஆனால் அதே அறிக்கையில், 'ஊழலற்ற இந்தியாவை உருவாக்கப் பாடுபடுவோம்' என்றும் கூறியிருக்கிறார். இதன்படி பார்த்தால், 'பா.ஜ.க.வுடன் கூட்டணி வைப்பார்' என்று






முத்தையா காசிநாதன்

நினைக்கத் தோன்றும். அதையும் மறுக்கும் விதத்தில், 'ஒரு இனம், ஒரே மதம்' என்ற இந்தியாவை உருவாக்குவோம் என்கிறார். இதில் பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்ற அர்த்தம் பொதிந்து கிடக்கிறது.

சரி, இந்தக்கட்சிகளுடன் இல்லை என்றால் 'ஊழல் எதிர்ப்பு மகாநாடு' நடத்துவதால், இவர் டில்லியில் ஆட்சியைப் பிடித்த அரவிந்த் கெஜ்ரிவாலின் கட்சியான ஆம் ஆத்மியுடன் கூட்டணி வைக்கப்போகிறாரா என்ற கேள்வி எழுகிறது. அதற்கும் தெளிவான பதில் கொடுக்காமல், 'ஆண்ட கட்சிக்கும், ஆளும் கட்சிக்கும் மாற்றுச் சக்தி என்பதை நிரூபித்தவர்கள் நாம்' என்று கூறியிருக்கிறார். இது வேறு கூட்டணி வைக்க விரும்புகிறார் என்றும் அதற்கு உரிய எண்ணிக்கையில் தொகுதிகளைக் கொடுத்தால் விஜயகாந்த் தி.மு.க.வுடன் கூட கூட்டணி வைப்பார் என்பதையும் சுட்டிக்காட்டுகிறது. ஏனென்றால் ஊழல் என்று கூறிவிட்டு அவர் காங்கிரஸ் ஊழலைச் சுட்டிக்காட்டவில்லை. மாறாக அ.தி.மு.க. அரசில் ஊழல்கள் என்று சுட்டிக்காட்டுகிறார். இந்த அறிவிப்புத்தான் அதிக எண்ணிக்கையிலான தொகுதிகள் கிடைத்தால், தி.மு.க.வுடன் கூட்டணி வைக்கத்தயார் என்ற மனப்பான்மையை எடுத்துக்காட்டுகிறது.

**ராஜசபைக்கான ஒரு ஆசனத்தை மார்க்ஸிஸ்ட் கட்சிக்கு கொடுத்துவிட்டதால் 'பிரதமர் வேட்பாளர் அம்மா' என்று கடந்த மூன்று வருடங்களாக செய்து வந்த பிரசாரத்தை பாராளுமன்றத் தேர்தலில் தொடர முடிவு செய்து விட்டது அ.தி.மு.க. என்றே தோன்றுகிறது**

விஜயகாந்தைப் பொறுத்தமட்டில் இந்தப் பாராளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வை வீழ்த்துவதே இலட்சியம் என்று பேசி வருகிறார். அதற்கும், வாக்குச் சாவடிகளில் அ.தி.மு.க. வினரை சமாளிக்கவும் தி.மு.க. கூட்டணிதான் அவருக்குச் சாத்தியமாக அமையும் என்பது விஜயகாந்த் கட்சியின் முன்னணிப் பிரமுகர்களின் எண்ணமாக இருக்கிறது. ஏன் அவர் தனது மைத்துனர் சுதிஷ் தலைமையில் அமைத்த கூட்டணிப் பேச்சுவார்த்தைக்குழுவில் உள்ள பெரும்பான்மை உறுப்பினர்கள் தி.மு.க. வுடன்தான் கூட்டணி வைக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார்கள். பாராளுமன்றத் தேர்தலில் தொகுதிகள் அதிகம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில்தான் விஜயகாந்த் நடக்கவிருக்கும் ராஜ்யசபைத்தேர்தல் பற்றி அதிக அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை என்ற கருத்தும் அவரது கட்சி வட்டாரத்தில் நடமாடியது.


மலேசியாவில் இருந்து திரும்பியவுடன் சென்னையிலிருந்து 180 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள உளுந்தூர் பேட்டையில் நடைபெறும் தே.மு.தி.க. மாநில மகாநாட்டில் கலந்து கொள்கிறார். அதற்கு முன்பு 'பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட விரும்புவோர்' விருப்பு மனுத் தாக்கல் செய்யலாம் என்று தே.மு.தி.க. வினருக்கு கட்டளை பிறப்பித்துள்ளார் 'கேப்டன்'. 2011 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பும் இதே மாதிரி சேலத்தில் மாநாடு கூட்டினார் விஜயகாந்த். அந்த மாநாட்டில் 'யாருடன் கூட்டணி போக வேண்டும். மக்களே நீங்கள் சொல்லுங்கள்' என்று கேள்வியைக்கேட்டு, பெரும்பாலானோர் அ.தி.மு.க. கூட்டணி என்று குரல் கொடுத்தனர். உடனே கூட்டணியை அறிவிக்கவில்லை. 'நான் உரிய நேரத்தில் முடிவு எடுப்பேன். கவலைப்படாதீர்கள்' என்று சொல்லிவிட்டு மாநாட்டு மேடையை விட்டுப் புறப்பட்டுச் சென்றார். அதே மாதிரித்தான் இப்போதும் உளுந்தூர்பேட்டையில் செய்யப் போகிறார் என்ற பேச்சு நிலவுகிறது. பெப்ரவரி 2ஆம் திகதி மகாநாடு நடத்துவார். கேள்வி கேட்பார். 'பிறகு முடிவு எடுத்து அறிவிக்கிறேன்' என்று கூறிவிட்டுப் போய் விடுவார் என்றே எதிர்பார்க்கிறார்கள். அதற்கு முக்கிய காரணம் 'தொகுதிப் பேரம்'. தனக்கு ஏற்ற பேரம் முடியாமல் யாருடன் கூட்டணி என்பதை அறிவிப்பதில் அவசரப்படமாட்டார் என்றே அவருக்கு நெருக்கமானவர்கள் கூறுகிறார்கள்.



## 'ராஜ்ய சபை' நாடகமும், அரசியல் கட்சிகளும்

'ராஜ்ய சபை' திருவிழா மீண்டும் தமிழகத்தில் அரங்கேறுகிறது. பெப்ரவரி 7ஆம் திகதி தமிழக ராஜ்யசபைத் தேர்தல். இந்தியாவின் மேலவையான ராஜ்ய சபைக்கு ஆறு எம்.பிக்கள் தமிழகத்திலிருந்து தேர்வு செய்யப்படுகிறார்கள். இதில் அ.தி.மு.க. கூட்டணி ஐந்து எம்.பிக்களை ஜெயிக்க வைக்க முடியும். ஏனென்றால், அக்கட்சியின் பாத்திரத்தில் 178 எம்.எல்.ஏ.க்கள் இருக்கிறார்கள். இரு கம்யூனிஸ்ட் கட்சிகள், அகில இந்திய பார்வர்டு பிளாக்,

தே.மு.தி.க.விலிருந்து வந்த அதிருப்தி எம்.எல்.ஏ.க்கள், புதிய தமிழகம் கட்சியிலிருந்து வந்த ஒரு அதிருப்தி எம்.எல்.ஏ. அனைவரையும் சேர்த்துத்தான் இந்தக் கணக்கு. ஒரு எம்.பி. வெற்றி பெற 34 எம்.எல்.ஏ.க்கள் தேவை என்ற வகையில் அ.தி.மு.க. கூட்டணிக்கு ஐந்து எம்.பி.க்கள் கிடைக்கும் யோக ஜாதகம் இருக்கிறது. அதன்படி அ.தி.மு.க. நான்கு வேட்பாளர்களை அறிவித்துள்ளது. முதலில் இந்த நான்கு பேருமே திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் இருந்து தேர்வு செய்யப்பட்டவர்களாக இருந்தார்கள். கூடங்குளம் பிரச்சினையால் அரசுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தியைப் போக்க எடுத்த முயற்சி போல் தெரிந்தது. சசிகலா புஷ்பம், விஜிலா சத்யானந்த், முத்துக்கருப்பன், சின்னத்துரை ஆகியோரே அந்த நால்வரும். ஆனால் இரு தினங்கள் கழித்து தூத்துக்குடியைச் சேர்ந்தவரான சின்னத்துரையை கட்சியிலிருந்து நீக்கிவிட்டு கோயம்புத்தூரைச் சேர்ந்தவரான மேட்டுப்பாளையம் முன்னாள் எம்.எல்.ஏ. ஏ.கே. செல்வராஜை ஜெயலலிதா வேட்பாளராக நியமித்திருக்கிறார். சின்னத்துரை மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை இதற்கு காரணம் என்று கூறப்படுகிறது.



ஜி.ராமகிருஷ்ணன்

இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால், மார்க்ஸிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் உள்ளிட்ட மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி குழு ஒன்று ஜனவரி 21ஆம் திகதி கொடநாட்டில் தங்கியிருந்த முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்து தங்கள் கட்சிக்கு ஒரு ராஜ்ய சபை எம்.பி. பதவி தரும்படி கோரிக்கை வைத்தார்கள். 'அது பற்றி பரிசீலித்து உங்களுக்கு தகவல் சொல்கிறேன்' என்று முதல்வர் ஜெயலலிதா கூறியதாக சி.பி.எம். ராமகிருஷ்ணன் பத்திரிகை நிருபர்களிடம் பேட்டி கொடுத்தார். சென்ற ராஜ்ய சபைத் தேர்தலின் போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை அலைக்கழித்தது போல் இல்லாமல், இந்த முறை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கோரிக்கையை உடனடியாக ஏற்று அவர்களின் வேட்பாளரை ஆதரித்துள்ளது அ.தி.மு.க. தலைமை. ஐந்தாவது சீட்டிற்கு போட்டியிடும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் வெற்றி பெறுவார் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

கடந்த ராஜ்யசபைத் தேர்தலின் போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை அலைக்கழித்தது போன்று இல்லாமல் இத்தடவை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கோரிக்கையை உடனடியாகவே ஏற்று அவர்களின் வேட்பாளரை ஆதரித்திருக்கிறார் ஜெயலலிதா

தே.மு.தி.க.வும் - தி.மு.க.வும் பாராளுமன்றத் தேர்தல் கூட்டணி அமைத்தால், அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைக்கலாம் என்ற ஹேஸ்யங்கள் நகர்வலம் வந்தன. அப்படி கூட்டணி வைத்தால் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஜெயலலிதா ராஜ்ய சபை பதவி கொடுக்கமாட்டார் என்றெல்லாம் பேச்சு எழுந்தது. ஆனால் இப்போது ராஜ்யசபை சீட்டைக்கொடுத்துவிட்டதால், 'பிரதமர் வேட்பாளர் அம்மா' என்று கடந்த மூன்று வருடங்களாக செய்த பிரசாரத்தை பாராளுமன்றத் தேர்தலில் தொடர முடிவு செய்து விட்டது அ.தி.மு.க. என்றே தோன்றுகிறது. அது மட்டுமன்றி, கம்யூனிஸ்டுகளின் நட்பு பாராளுமன்றத் தேர்தலில் பயன்படுவதை விட அதன் பிறகு ஆட்சி அமைக்கும் போது மிகவும் தேவைப்படும் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா நினைக்கிறார் என்றே தெரிகிறது.

இந்நிலையில் தி.மு.க. தனது வேட்பாளராக திருச்சி சிவாவை அறிவி த்துவிட்டது. அவரும் 21ஆம் திகதி தனது வேட்புமனுவை ஸ்டாலின் சகிதமாகச் சென்று தாக்கல் செய்து விட்டார். அவரது வேட்புமனுவை புதிய தமிழகம் கட்சி டாக்டர் கிருஷ்ணசாமியும், மனித நேய மக்கள் கட்சித் தலைவர் ஜவஹிருல்லாவும் ஆதரித்து விட்டார்கள். இந்தக் கூட்டணி சார்பில் திருச்சி சிவாவிற்கு 26 எம்.எல். ஏ.க்களின் ஆதரவு இருக்கிறது. விஜயகாந்த் ஒரு வேளை ராஜ்ய சபைத்தேர்தலில் போட்டியிட்டால் கூட அவரிடம் 21 எம்.எல்.ஏ.க்கள் தான் இருக்கிறார்கள். கடைசி வேகன்சிக்கு போட்டியிடும் வேட்பாளர்களில் யார் அதிக எம்.எல்.ஏ.க்க ளின் ஆதரவைப் பெறுகிறார்களோ (கோட்டா வாக்கான 34 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு இருக்க வேண்டும் என்று அவசியமல்ல) அவர் தேர்வு செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுவார் என்று ராஜ்ய சபைத் தேர்தல் விதி



திருச்சி சிவா


கள் கூறுகின்றன. ஆகவே 26 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு பெற்ற திருச்சி சிவா வெற்றி பெறும் வாய்ப்பு வந்துவிடும்.

விஜயகாந்த் ஒரு வேளை காங்கிரஸின் ஆதரவை, கேட்டுப் பெற்றால் அவருக்கும் 26 வாக்குகள் (காங்கிரஸின் 5 வாக்குகளையும் சேர்த்து) கிடைக்கக்கூடும். இரு கட்சிகளும் தலா 26 வாக்குகள் என்றால் குலுக்கல் மூலம் தேர்வு செய்யப்பட வேண்டும் என்று தேர்தல் விதி கூறுகிறது. அது போன்ற வேளையில் கூட எக் கூட்டணியிலும் சேராமல் இருக்கின்ற பாட்டாளி மக்கள் கட்சியின் மூன்று எம்.எல்.ஏ.க்கள் ஏதாவது ஒரு வேட்பாளரை ஆதரித்தால் அவர் வெற்றி பெறக்கூடும். இப்போதைக்கு விஜயகாந்த் வேட்பாளரை நிறுத்தினால் அவரை ஆதரிக்கும் மனநிலையில் பா.ம.க. இல்லை. விஜயகாந்த் இருக்கும் கூட்டணிக்கே வரமாட்டேன் என்று டாக்டர் ராமதாஸ் சபதம் மேற்கொண்டிருக்கின்ற நிலையில், இது போன்ற ஆதரவை அளிக்க மாட்டார். ஆகவே எப்படிப் பார்த்தாலும் ஆறாவது எம்.பி.க்கான தேர்தல் தி.மு.க.விற்கு ஆதரவாகவும், திருச்சி சிவா வெற்றி பெறவுமே வழிவிடும் என்பதே தற்போதைய நிலைவரம். பாராளுமன்றத் தேர்தல் கூட்டணிக்கு வடிவம் கொடுக்க இந்த ராஜ்ய சபைத் தேர்தல் உதவுமா என்பது விஜயகாந்த் வேட்பாளரை நிறுத்துவதில்தான் இருக்கிறது. அப்படியொரு கட்டம் வந்து 'தே.மு.தி.க. சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டால், அதை பரிசீலிப்போம்' என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி அறிவித்துள்ளார். ஆனால் ராஜ்ய சபைத் தேர்தல் சுமுகமாக முடிந்து விடும். அதற்கும் லோக்சபா தேர்தலுக்கும் பெரிய தொடர்பு இல்லாமலே போய் விடும் சாத்தியக்கூறுகள் நிரம்ப இருக்கின்றன. அ.தி.மு.க. சார்பில் நால்வர், தி.மு.க. சார்பில் ஒருவர், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒருவர் என்று ஆறு பேர் பெப்ரவரி 7ஆம் திகதி தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு இந்திய ராஜ்யசபைக்குச் செல்வார்கள்!

> திருச்சி மகாநாட்டை திருப்புமுனை மகாநாடு என்று தி.மு.க.வினர் முழங்குகின்றனர். இந்த மகாநாட்டிற்குப்பிறகு பாராளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வின் கூட்டணி எது என்பது வெளிச்சத்திற்கு வந்து விடும்

## 'யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே'!

'யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்பது போல் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில மகாநாடு திருச்சியில் இம்மாதம் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் நடைபெறுகிறது. இதை 'தேர்தல் மாநாடு' என்றே சொல்ல வேண்டும். 'குடும்பம் குடும்பமாகப் புறப்படு' என்று இதோடு நான்கிற்கும் மேற்பட்ட உடன்பிறப்புக் கடிதங்களை எழுதிவிட்டார் தி.மு.க. தலைவர் கருணாநிதி. 'அவர் வருவார்' என்று காத்திருக்கும் தி.மு.க. தலைவர்கள், தங்கள் கூட்டணிக்கட்சிகளையும் ஒருங்கிணைக்க கூட்டப்பட்ட மகாநாடுதான் இது. அந்த மகாநாட்டிற்கு விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் திருமாவளவன், மனித நேய மக்கள் கட்சியின் தலைவர் ஜவஹிருல்லா, புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநிலத் தலைவர் காதர்மொகைதீன் ஆகியோர் எல்லாம் அழைக்கப்பட்டுள்ளார்கள். விஜயகாந்த் வந்தால் அவரும் கூட்டணி மேடையில் ஏறுவார். ஆனால், அதற்குள் அவருடனான பேச்சுவார்த்தை முடிவுக்கு வருமா என்பது தெரியவில்லை. ஏனென்றால் 'யாருடன் கூட்டணி' என்பதில் உலக மகா குழப்பத்தை ஏற்படுத்தி வருகிறார் விஜயகாந்த்.



இந்த மகாநாட்டிற்கு முன்பே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி சார்பில் குலாம் நபி ஆசாத் வந்து கலைஞர் கருணாநிதியைச் சந்தித்தார். 'நான் எப்போது சென்னை வந்தாலும் அவரைச் சந்திப்பேன். இது மரியாதை நிமித்தமான சந்திப்பு' என்றார். பிறகு கலைஞர் கருணாநிதியும், 'அவர் கூட்டணி பற்றிப் பேசவும் இல்லை. நான் அதற்குப் பதில் சொல்லவும் இல்லை'என்று சொன்னார். ஆனால் முன்பு கனிமொழிக்கு ஆதரவு கொடுத்த காங்கிரஸ் தங்களிடம் ஒரு ராஜ்யசபை சீட்டைக் கேட்டு விடக்கூடாது என்பதற்காகவே தி.மு.க. முந்திக் கொண்டு ராஜ்ய சபைத் தேர்தல் வேட்பாளராக திருச்சி சிவாவை அறிவித்தது என்பதும் இன்னொரு பக்கம் பேசப்படுகிறது. இதற்கிடையில் 'கருணாநிதி- குலாம்' சந்திப்பு மீண்டும் 'காங்கிரஸ்- தி.மு.க. கூட்டணி' என்ற பேச்சைத்தட்டி எழுப்பியது. சிலர் 'தி.மு.க., தே.மு.தி.க., காங்கிரஸ் கூட்ட


ணி' என்றும் கூட விடயத்தை ஆங்காங்கே விதை போல் தூவினார்கள். ஆனால் 'காங்கிரஸு டன் கூட்டணி இல்லை என்பது தி.மு.க.வின் பொதுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவு. இனி மேல் அது பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றால் நான் பொதுக்குழுவைத்தான் மீண்டும் கூட்டிக் கேட்க வேண்டும்' என்று குலாம் நபி ஆசாத்திடம் கருணாநிதி கைவிரித்து விட்டார் என்பதே தி.மு.க. வட்டாரத்தில் நிலவும் ரகசியப் பேச்சு. சில தி.மு.க.வினரோ, 'விஜ யகாந்தை வழிக்குக் கொண்டு வரவே குலாம் நபி ஆசாத்தை கலைஞர் சந்தித்தார். ராஜ்ய சபை வேட்பாளராக திருச்சி சிவாவை முன்கூட்டியே அறிவித்தார்' என்றும் சொல்லுகிறார்கள். எது எப்படியோ காங்கிரஸுடன் கூட் டணி வைப்பதற்கு தி.மு.க.வில் மட்டுமல்ல, தமிழக வாக்காளர்கள் மத்தியிலும் 'எதிர்ப்புணர்வே' இருக்கிறது. 'எங்கள் கையில்தான் 2-ஜி அலைக்கற்றை விவகாரம் இருக்கிறது. எங்களுடன் கூட்டணி வைக்காமல் எங்கே போய் விடுவார் கருணாநிதி' என்று இன்னமும் கேள்வி எழுப்பும் காங்கிரஸ் நிர்வாகிகளும் இருக்கவே செய்கிறார் கள்!

> சென்னை மெரினாவில் பெப்ரவரி 8ஆம் திகதி மோடி பேசும் கூட் டத்தில் தானும் கலந்து கொள்வதாக வைகோ அறிவித்திருக்கிறார். அந்த மேடைக்கு வரப்போகிற மற்றவர்களில் ராமதாஸா, விஜயகாந்தா என்பது பா.ஜ.க.விற்குப் புரியாமல் இருக்கிறது

இது போன்ற சூழ்நிலையில், இருக்கின்ற கூட்டணிக் கட்சிகளுடன் ஒரு 'பிரமாண்டமான காட்சி'க்கு ஏற்பாடு செய்கிறது தி.மு.க. அது தான் பெப்ரவரியில் நடக்கப் போகும் திருச்சி மாநாடு. அதை 'திருப்பு முனை மாநாடு' என்று தி.மு.க.வினர் முழங்குகிறார்கள். மகாநாட்டுப் பணிகளில் திருச்சி மாவட்டச் செயலாளரும், முன் னாள் அமைச்சருமான கே.என்.நேரு பம்பரமாக ஈடுபட்டு வருகி றார். இன்னும் சொல்லப் போனால் சற்று வித்தியாசமாக மோட்டார் சைக்கிளில் சென்று மகா நாட்டுப் பணிகளை கவனிக்கிறார். மேடையில் பேசப்போகும் ஸ்டார் பேச்சாளர்களில் நடிகை குஷ்புவும் அடக்கம் என்பது ஹைலைட். 'கலர்புல்' தேர்தல் மாநில மகாநாட்டை நோக்கி தி.மு.க. வேகமாக நடைபோடுகிறது. அந்த மாநாட்டிற்குப்பிறகு பாராளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வின் கூட்டணி எது? எந்தத் திசையில் அக்கட்சி பயணிக்கிறது என்பதெல்லாம் வெளிச்சத்திற்கு வந்துவிடும்.


## ஒரே மேடையில் மோடி, வைகோ

'பண்டாரம், பரதேசிகள்' என்று ஒரு காலத்தில் தமிழகத்தில் விமர்சிக்கப்பட்ட பா.ஜ.க.விற்கு இப்போது ஏகப்பட்ட டிமாண்ட். தி.மு.க.வும் சரி, அ.தி.மு.க.வும் சரி 'நரேந்திரமோடிக்கு' உள்ள இமேஜைப் பயன்படுத்திக் கொள்ள ஆர்வமாக இருக்கின்றன. 2-ஜி அலைக்கற்றை ஊழல் புகாரில் சிக்கிய தி.மு.க.வுடன் கூட்டணி வைத்தால் வட மாநிலங்களில் தங்களுக்கு பிரச்சினை ஏற்பட்டு விடுமோ என்று பா.ஜ.க. மேலிடம் தயங்குகிறது. 'பிரதமர் வேட்பாளர்' பந்தயத்தில் முதல்வர் ஜெயலலிதாவும் இருப்பதால், இரு பிரதமர் வேட் பாளர்கள் ஒரே கூட்டணியில் இருப்பது எப்படி என்று ஜோசியம் பார்த்துக் கொண்டு அ.தி.மு.க.வுடன் கூட்டணி போகமுடியாமல் தவிக்கிறது பா.ஜ.க. இந்நிலையில் பிரச்சினையில்லாத கூட்டணி ஒன்றை உருவாக்கவே பா.ஜ.க., தே.மு.தி.க, ம.தி.மு.க., பா.ம.க. என்ற நான்கு கட்சிகளுக்கு வலை விரித்தார் தமிழருவி மணியன். பிறகு பா.ஜ.க. தலைவர்களே அதற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். ஆனால் தே.மு.தி.க. தெளிவாகவில்லை. 'விஜயகாந்த் பா.ஜ.க. கூட்டணிக்கு வருகிறாரா' என்பது தெரியாமல் பாட் டாளி மக்கள் கட்சியின் தலைவர் ராமதாஸ் சம்மதம் கொடுக்கத் தயாராக இல்லை. பா.ஜ.க.வுடன் கூட்டணியாக இருப்பதற்கு வைகோ மட்டுமே மனப்பூர்வமாக சம்மதம் தெரிவித்துள்ளார்.



இதனிடையே திட்டமிட்டபடி பெப்ரவரி 8ஆம் திகதி நரேந்திரமோடி சென்னை வருகிறார். சென்னை மெரினாவில் அவர் பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அன்றைய தினம் நான் அக்கூட்டத்தில் கலந்து கொள்கிறேன் என்று ஏற்கனவே வைகோ தன் மாவட்டச் செயலாளர் கள் கூட்டத்திலேயே அறிவித்து விட்டார். ஆனால் மாநாட்டு மேடைக்கு வரப்போகிற மற்ற வர்களில் ராமதாஸா, விஜயகாந்தா என்பது பா.ஜ.க.விற்கு புரியாமல் நிற்கிறது. மோடியின் பெப்ரவரி சென்னை மாநாடு பா.ஜ.க.விற்கு பிரசாரப் பலத்தைக் கொடுக்கும். ஆனால் இந்த

இமேஜைப் பயன்படுத்தி ஜெயிக்கும் அளவிற்கு அந்தக் கூட்டணிக் கட்சிகளிடம் வாக்கு வங்கி இல்லை என்பது மட்டுமே குறை.பெப்ரவரி மோடி வருகையை மனதில் வைத்து, சமீபத்தில் 'சென்னை புத்தகத் திருவிழாவில்' பேசிய தமிழருவி மணியன், '2014க்குப் பிறகும் நீங்கள் அரசியல் செய்ய வேண்டும் என்றால் எங்கள் கூட்டணிக்கு வாருங்கள். வேறு எந்தத் தழுவலிலும், அரவணைப்பிலும் (தி.மு.க.வை மறைமுகமாகக் குறிப்பிடுகிறார்) போய் விழுந்து விடாதீர்கள் விஜயகாந்த் அவர்களே' என்று எச்சரித்துப் பேசியுள்ளார். எச்சரிக்கைக்கு மதிப்பளிப்பாரா விஜயகாந்த் என்பதை வைத்தே பா.ஜ.க. அணி பலம் பெறும்.



## கருணை மனுக்களும் கருணைக் குரலும்

'கருணைக் குரல்' தமிழகத்தில் ஒலிக்கிறது. அரசியல் கட்சிகள் 'ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்றவர்களுக்கும் இந்தச் சலுகை கிடைக்க வேண்டும்' என்ற கோரிக்கை வலுக்கிறது. புத்தாண்டு பிறந்தவுடன் 15 பேரின் தூக்குத்தண்டனையை ஆயுள்தண்டனையாக மாற்றி இந்திய உச்சநீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு வழங்கியதுதான் இந்தப் புதிய அலைவரிசைக்குக் காரணம். இந்திய சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி சதாசிவம் தலைமையிலான அரசியல் சட்ட அமர்வு அளித்த தீர்ப்பால், 15 தூக்குத் தண்டனைக் கைதிகளின் குடும்பங்களில் நிம்மதி பட்டொளி வீசிப் பறக்கிறது. குறிப்பாக தமிழகக் கட்சிகள் குரல் கொடுத்த சந்தனக்கடத்தல் வீரப்பன் கூட்டாளிகள் நான்கு பேரின் தூக்கும் ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டுள்ளது. அந்த நிம்மதி பேரறிவாளன், சாந்தன், முருகன் உள்ளிட்டோரின் குடும்பத்திற்கும் கிடைக்க வேண்டும் என்பதே தமிழகத்தில் எழும்பியுள்ள ஒட்டுமொத்தக் குரல்.

தூக்குத் தண்டனை விடயத்தில் இந்திய உச்சநீதிமன்றம் பல அரிய தீர்ப்புகளை வழங்கியது. முதலில், 'கருணை மனுக்கள் மீது தாமதமாக முடிவு எடுத்தால், அதுவே தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க வழி செய்யும்' என்று 'எடிகா அம்மா' வழக்கில் தீர்ப்பளித்தது. அது இரு நீதிபதிகள் கொண்ட பெஞ்ச். பிறகு எத்தனை வருட தாமதம் இது போன்று குறைக்க உதவும் என்றும் சுப்ரீம் கோர்ட் இன்னொரு வழக்கில் தீர்ப்பளித்தது. அது தான் 'வாதீஸ்வரன்' வழக்கு. 'இரு வருடங்கள் கருணை மனு மீது முடிவு எடுக்காமல் இருந்தால், அதை வைத்து தூக்குத் தண்டனையை ஆயுளாக மாற்றலாம்' என்று தீர்ப்பளித்தது. அதுவும் இரு நீதிபதிகள் கொண்ட பெஞ்ச். பிறகு 'செர்ஷிங்' வழக்கு வந்தது. அதில் 'கருணை மனுக்களை தாமதம் செய்வதை ஒரு காரணமாக எடுத்துக் கொண்டு தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க முடியாது. ஏனென்றால் அந்தக் கைதிக்கு ஒவ்வொரு கட்டத்திலும் உரிய இயற்கை நீதி வழங்கப்படுகிறது' என்று சுட்டிக்காட்டி, '2 வருடம் காலக்கெடு' எல்லாம் ஒப்புக்கொள்ள முடி யாது எனத் தீர்ப்பளித்தது. இது மூன்று நீதிபதிகள் கொண்ட பெஞ்ச். ஆனால் 'கருணை மனுக்களை மூன்று மாதங்களுக்குள் முடிவு செய்ய வேண்டும்' என்று கட்டளையை மட்டும் பிறப்பித்தது சுப்ரீம் கோர்ட்.

பிறகுதான் புகழ்பெற்ற 'திரிவேனிபென்' வழக்கு வந்தது. அந்த வழக்கிலும், '2 வருட காலக்கெடு நிர்ணயிக்க முடியாது' என்று கூறி தீர்ப்பளித்தது மட்டுமன்றி, 'வாதீஸ்வரன்' வழக்கில் சொல்லப்பட்ட 2 வருட காலக்கெடுவை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் கூறியது. அதுவும் மூன்று நீதிபதிகள் கொண்ட பெஞ்ச். பிறகு வந்த 'தேவிந்தர்சிங் புல்லர்' வழக்கில் 'காலதாமதத்தை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் பயங்கரவாதச் சட்டங்களின் கீழ் தூக்குத் தண்டனை பெற்றவர்களின் கருணை மனுக்களை இந்த காலதாமதத்தின் அடிப்படையில் விசாரித்து ஆயுள் தண்டனையாகக் குறைக்க முடியாது' என்றும் தீர்ப்பளித்தது. இதுவும் இரு நீதிபதிகள் கொண்ட பெஞ்ச். இந்தத் தீர்ப்புகளுக்கு இடையில் உள்ள முரண்பாட்டை சரிசெய்யவே இரண்டு நீதிபதிகள் கொண்ட பெஞ்சிற்கும், மூன்று நீதிபதிகள் கொண்ட பெஞ்சிற்கும் இடையே உள்ள குழப்பத்தைத் தீர்க்கவே தலைமை நீதிபதி தலைமையிலான மூன்று நீதிபதிகள் பெஞ்ச் முன்பு இந்த 15 பேரின் வழக்குப் போனது.

இந்த வழக்கில்தான் இப்போது அதிரடித் தீர்ப்பு வெளிவந்திருக்கிறது. அதில் முத்தான விடயங்கள் சில:

'எப்போது தூக்கிலிடப்படுவோம் என்ற நிச்சயமற்ற தன்மையில் ஒரு கைதியை அடைத்து

வைப்பதே துயரத்தைத் தருவதாகும்'.

'கருணை மனுவின் மீது முடிவு எடுப்பதில் ஏற்படும் விளக்கமுடியாத தாமதம் மன்னிக்கமுடியாதது'.

'கைதியின் நடவடிக்கையால் ஏற்படாத தாமதம் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வித்திடுகிறது' 'தண்டனை வழங்கப்படுவது மட்டுமல்ல, அந்தத் தண்டனை நிறைவேற்றப்படுவதிலும் அரசியல் சட்டப் பிரிவு 21இல் அளிக்கப்பட்டுள்ள வாழும் உரிமை அடங்கியிருக்கிறது. ஆகவே தூக்குத்தண்டனையை நீண்ட காலம் நிறைவேற்றாமல் வைத்திருப்பது மனிதநேயமற்றது.'

'தூக்குத்தண்டனையை நிறைவேற்றுவதில் ஏற்படும் தகாத, அளவு மீறிய அல்லது நியாயமற்ற காலதாமதம் ஒரு சித்திரவதை. அது அரசியல் சட்டப் பிரிவு 21ஐ மீறுவதாகும்.அதனடிப்படையில் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கலாம்'

'கருணை மனு விவகாரத்தில் விளக்கப்படாத தாமதம் தண்டனையைக் குறைக்க உதவும் ஒரு காரணம். தண்டனை அளிக்கப்பட்ட பிறகு வரும் இந்த விளைவுகள் எல்லா வழக்குகளில் தண்டனை பெற்றவர்களுக்கும் பொருந்தும். ஆகவே இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் தண்டனை பெற்றாலும் சரி, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களின் அடிப்படையின் கீழ் தண்டனை பெற்றாலும் சரி பொருந்தும். அதில் பாகுபாடு பார்க்க முடியாது'

'தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கும் முன்பு நீதிமன்றங்கள் பார்க்க வேண்டியது ஒன்றே ஒன்றுதான். அதாவது கருணை மனு மீது முடிவு எடுப்பதில் ஏற்பட்ட தாமதம் முழுவதும் நிர்வாகத் தரப்பில் ஏற்பட்டதுதான் என்பது மட்டும் உறுதி செய்து கொள்ள வேண்டும்'.

'தண்டனை பெற்ற பிறகு கைதி மனநோயாளியாகி விட்டால், அவரது தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கலாம்'.

இப்படி பல்வேறு விடயங்களைச் சுட்டிக்காட்டி 15 பேரின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்துள்ளது இந்திய உச்சநீதிமன்றம். நீதிமன்ற வரலாற்றில் ஒரே தீர்ப்பில் இவ்வளவு பேரின் தூக்குத் தண்டனை குறைக்கப்பட்டுள்ளது. தூக்குத் தண்டனையை ஜனநாயக நாடான இந்தியாவில் ஒழிக்க வேண்டும் என்று எழுந்துள்ள குரலுக்கு இது நேசக்கரம் நீட்டுவது போலிருக்கிறது. இந்தப் 15 பேரில் 13 பேருக்கு 6 வருடம் முதல் 12 வருடம் வரை கருணை மனுக்கள் தாமதமாகியிருக்கிறது. மற்ற இருவர் 'மனநோயாளிகள்' என்ற காரணத்தின் அடிப்படையில் தூக்குத் தண்டனை குறைக்கப்பட்டுள்ளது. ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனையை எதிர்நோக்கும் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் கருணை மனுக்கள் மீது முடிவு எடுப்பதில் 13 வருடங்களுக்கு மேல் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தாமதம் முழுக்க முழுக்க நிர்வாகத்தின் பக்கமாக ஏற்பட்ட தாமதம் என்று சுப்ரீம் கோர்ட் முடிவுக்கு வந்தால், மூவரின் தூக்குத் தண்டனையும் ஆயுள் தண்டனையாக குறைக்கப்படும் வாய்ப்பு இருக்கிறது. அதை எதிர்நோக்கித்தான் தமிழக அரசியல் கட்சிகள் குரல் கொடுத்து வருகின்றன. ■

GET சமகாலம் DELIVERED TO YOUR HOME

3 months 600/-

6 months 1200/-

1 Year 2,400/-

Please complete the form given below, along with your Cheque/Money Order written in favour of 'Express Newspapers (Ceylon) (Pvt) Limited' and send it to our Head Office at No185,Grandpass Road, Colombo 14,Sri Lanka.
Tel:+94-11-7322700 / 7738046 Fax:+94-11-7767700

*For more details, please contact :*
Overseas & Local Subscriptions
**S.Surainie** - E-mail : subscription@kalaikesari.lk
Tel:+94 11 7322783

Subscription rates (inclusive postage) and delivery within Colombo.

ORDER FORM :

சமகாலம்

**Manager Subscriptions**
**Samakalam**
**No. 185, Grandpass Road, Colombo - 14,**
**Sri Lanka.**
**Tel : +94-11-7322783 / +94-11-7322741**
**Fax : +94-11-4614371**

FOLD HERE

**SUBSCRIBER INFORMATION :**

Title :...................... Last Name :......................................

First Name :....................................................................

Organization :..................................................................

Address :........................................................................

.......................................................................................

Phone :.............................. Mobile :...............................

Fax :.................................. E-mail :................................

Payment : Amount Rs.........................

☐ Cash ☐ Cheque

Payable to : **Express Newspapers (Cey.) (Pvt) Ltd.**

Bank :............................... Cheque No :...........................

Signature :.............................

**கலை இலக்கியம்**

# ஜோ டி குருஸின் படைப்புக்கள் காட்டும் வாழ்வியலும் அழகியலும் தமிழுக்குப் புதிது

ஆதிசேனன்

இன்று சமகால நவீன தமிழிலக்கியச் சூழலில் கவனிப்புப் பெற்ற படைப்பாளியாக இருப்பவர் ஜோ டி குருஸ். இவர் எழுதிய 'கொற்கை' எனும் நாவல் 2013 ஆம் ஆண்டிற்கான இந்திய சாகித்திய அகடெமி விருதைப் பெற்றிருக்கிறது.

குருஸ் 'ஆழிசூழ்உலகு' என்ற தனது முதல் நாவல் மூலம் தமிழிலக்கிய உலகில் சலனத்தை ஏற்படுத்தியவர். மீனவ சமூக மக்களின் வாழ்க்கையை இரத்தமும் சதையுமாக இந்நாவலில் பதிவு செய்தவர். இதே சமூகத்தில் பிறந்த குருஸ் தமிழிலக்கிய உலகில் இதுவரை தொடப்படாது இருந்த களங்களை முதன் முதலாக இந்நாவலில் பதிவு செய்துள்ளார். கடலையும் கடல்சார் உலகையும் அங்குள்ள மக்களின் கண்ணீரும் குருதியும் காதலும் குரோதமும் இழையோடும் வாழ்வியல் சித்திரமாக வெகு இயல்பாக இலக்கியமாக்கியுள்ளார். இவரது இந்த எழுத்துச் செயற்பாட்டு முறைமையின் இன்னொரு படைப்பாக 'கொற்கை' நாவல் வெளிவந்துள்ளது.



'கொற்கை' நாவல் நெய்தல் நிலத்தின் சந்ததியினரான பரதவ குல மக்களைப் பற்றிய அசலான இலக்கிய ஆவணம். சுமார் ஆயிரத்து இருநூறு பக்கங்களில் கடல் மனிதர்களின் வாழ்வை கடலின் வாழ்வை மிக நுட்பமாகவும் மிக ஆழமாகவும் பதிவு செய்து கதையாக எடுத்துரைக்கிறது. 1914 முதல் 2000 ஆவது ஆண்டு வரையிலான பரந்த காலத்தின் பின்னணியில் 86 குடும்பங்களின் கதையை தெளிவாகவும் அழகாகவும் யதார்த்தமாகவும் விரிவாகச் சொல்கிறது.

'எனது சமுதாயமும் மக்களும் அறியாமையில் ஊறிக் கிடக்கிறார்களே என்கிற ஆதங்கம் எனக்கு சிறு வயதிலேயே உண்டு. இந்த சமுதாயத்திற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்கிற வைராக்கியம் இருந்தது. இப்போதும் இருக்கிறது. இவர்களுக்கு நான் என்ன செய்யப்போகிறேன் என்று இதுவரை எனக்குத் தெரியவில்லை. பெரிதாக ஏதாவது செய்ய வேண்டுமென்கிற ஆசை இருக்கிறது'. இப்படி 2005 காலப்பகுதியில் ஒரு நேர்காணலில் குருஸ் குறிப்பிட்டிருப்பது இங்கு நம் கவனத்திற்குரியது. குருஸ் எதிர்பார்த்தது போல் ஆசைப்பட்டது போல் கொற்கை நாவல் படைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இவரது படைப்பாளுமை நன்கு வெளிப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் கடல் சம்பந்தப்பட்ட தலைப்பில் மட்டுமே இருந்த சாண்டில்யனின் 'கடற்புறா' நாவலை படித்த பின்புலத்தில் குருஸ் எழுத்துத்துறைக்கு வந்தவர். ஆனால், இன்று கடலும் கடல் சார்ந்த மக்கள் வாழ் புலத்திற்கும் உரிய இலக்கிய பெறுமானம் கொண்ட நாவல்களைப் படைப்பதில் குருஸ் முனைப்பாக உள்ளார். தமிழ் நாவல் இலக்கியத்தில் குருஸின் படைப்புகள் தனியான கவனத்தைப் பெற்றுவருகின்றன. குருஸ் நெய்தல் இலக்கியத்தின் குறியீடாகவும் பரிணாமம் பெற்று வருகிறார். அந்த வகையில் கொற்கைக்கு கிடைத்த கௌரவம் சரியானது. நமது பாராட்டுக்குரியது.

என் சமூகத்தைப்பற்றி தமிழ்ச் சமூகத்திற்குச் சொல்வதற்கு கிடைத்த பெரிய வாய்ப்பாகத் தான் எனது படைப்புகளைக் கருதுகிறேன். இதனாலே நிறைய பொறுப்புணர்வோடும் கடமை உணர்வோடும் செயற்பட வேண்டியுள்ளது. நான் சொல்ல வந்த விடயத்தில் தெளிவாக யதார்த்தமாக அதற்குண்டான நடைமுறையோடு சொல்லவேண்டும் என்று நினைத்தேனே தவிர எவரையும் சந்தோஷப்படுத்தவோ கோபப்பட வைக்கவோ நான் எனது எழுத்தை, பயன்படுத்தவில்லை. இப்படித் தான் குருஸின் சிந்தனையும் மனவோட்டமும் உள்ளது. இவரது படைப்புகள் நமக்கு காட்டும் வாழ்வியலும் அழகியலும் தமிழுக்கு புதிது. ■

## கடைசிப் பக்கம்

# சமூக வகைப்பொறுப்புக் கூறல்
## (Social Responsibility)

மனிதன் சமூகமாக வாழ முற்பட்டபோது அவனது தேவைகளும் அதிகரித்தன. தனது சொந்தத் தேவைகளை தானாகவே ஈடுசெய்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உட்பட்ட மனிதன் உழைக்கத் தலைப்பட்டான். ஆயினும் சமூகத்தின் பொதுவான தேவைகளை நிறைவு செய்துகொள்ள தனி மனிதனால் இயலாமல் போனதும் அரசைத் தாபித்து, அதனை ஆள்வதற்கு அரசாங்கத்தையும் உருவாக்கினான்.

அரசாங்கம் மனித சமூகத்தின் பொதுவான தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்கும் தலையாய கடமையைத் தன்னகத்தே கொண்டு இயங்கலாயிற்று. அரசை ஆழ்வதென்பது வீரம் மிக்க ஆட்சி என்பதற்கும் அப்பால், மக்களின் தேவைகளை அறிந்து அவற்றினை நிறைவடையச் செய்து,




அன்பழகன் குரூஸ்

மனித சமூகத்தின் விருத்திக்கான பொது விடயங்களை ஏற்படுத்திக் கொடுப்பது என்பது ஜனநாயகக் கோட்பாட்டின் நிழலாகக் காணப்படுகின்றது. அதாவது வரி செலுத்தும் மனித சமூகத்தின் உட்கட்டுமான வசதிகள் குறைவடைந்து காணப்படுமாயின், அங்கு மக்கள் அரசாங்கத்திடம் தம் தேவைகளை வலிந்து கேட்க முற்படுவர். காலப்போக்கில் அதுவே புரட்சியாக மாறிவிடக்கூடும். இங்கு மக்கள் தமது சமூகத்தில் கிடைக்கப்பெறும் பொதுவான தேவைகள் அல்லது சேவைகளில் குறைபாடுகள் காணப்படுமாயின், அங்கே அவர்கள் பிரச்சினைகளுக்கு உட்பட்டு விடுகின்றனர். அல்லது தமக்குரிய பொதுவான தேவைகளில் ஒன்று நிறைவு செய்யப்படவில்லையாயின் அங்கே அவர்கள் தேவைகளோடு வாழுகின்றனர். அதுவே அவர்களின் சமூகப் பிரச்சினையாக மாறுகின்றது.

இவ்வாறு தேவைகளோடும் பிரச்சினைகளோடும் வாழுவது சமூக வாழ்க்கையல்ல. மாறாக சமூகம் என்ற அடிப்படையில் தத்தமது தேவைகளை குறித்த அரச நிறுவனத்திடம் கேட்டுப்பெற வேண்டியது ஒவ்வொரு தனி மனிதனதும் சமூகப் பொறுப்பாகும். அவ்வாறே பொதுவான குறைபாடுகள் அல்லது பிரச்சினைகள் காணப்படுமாயின் அவற்றினையும் நிவர்த்தி செய்ய முயல வேண்டும். அது ஒவ்வொரு மனிதனதும் சமூகப் பொறுப்பாகும். பொதுவான தேவைகள் நிறைவேற்றப்படாத போதும் அவற்றைச் சகித்துக் கொண்டு சிரமங்களோடு வாழுவது விலங்கு வாழ்க்கையாகும். மனிதன் தன் சமூகத்தின் தேவைகளைக் கேட்டுப்பெற வேண்டும், தம் சமூகக் குறைபாடுகளைக் குறிப்பிட்ட பொறுப்புடைய அரச நிறுவனத்திற்குச் சுட்டிக்காட்ட வேண்டும், அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் தம் சமூகத்திற்குப் பொருந்தும் வகையில் உடனுக்குடன் ஆலோசனைகள் கூற வேண்டும். தமக்கு ஏற்படும் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும். இதுவே சமூகப் பொறுப்புடைமையாக அமைகின்றது.

இங்கே சுட்டிக் காட்டுதல், கேட்டுப் பெறுதல், ஆலோசனை கூறுதல் என்பதெல்லாம் உரிமையாக மாறிவிடுகின்றது. இவைகளை குறித்த பொறுப்புடைய அரச நிறுவனத்திற்குக் கொண்டு செல்வதற்கு கடிதங்கள், தொலைபேசி, நேரடியாகக் கலந்துரையாடுதல், பொதுக்கூட்டங்கள், முறைப்பாட்டுப் பெட்டி, சமூகக் கண்காணிப்பு, பிரஜைகள் பிரகடனம், சமூகக் கணக்காய்வுக் குழுக்கள், சமூகப் புள்ளியிடல் அட்டை, பங்குபற்றுதல் நுட்பங்கள், பொதுமக்கள் அரங்குகள் போன்ற கருவிகளைப் பயன்படுத்திப் பெற்றுக்கொள்ள முடியும். மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்கும் பொறுப்புடைமை ஒவ்வொரு அரச நிறுவனங்களினதும் தலையாய கடமையாகும். இல்லாது போனால் அல்லது காலம் தாழ்த்தப்படுமாயின் அங்கு மக்கள் குழுக்களாக இணைந்து புரட்சிப் போக்கிற்கு உட்படும் நிலையைத் தோற்றும். இதுவே அரசாங்கத்தையும் விமர்சிக்கவும், அரச எதிர்ப்புக்கு வித்திடவும் தொடக்கப்புள்ளியாக அமையும்.

இந்த வகையில் மக்கள் தம் பொதுவான சமூகத் தேவைகளைக் கேட்டுப்பெறுதல் என்பது, அல்லது சுட்டிக்காட்டுவது என்பது மனிதனது சமூகப் பொறுப்பாக மாறி அதுவே சமூகக் கடமையாகவும் ஆகிவிடுகின்றது. இதனை நம் வாழ்வின் கடமையாக மேற்கொள்ள வேண்டும். நம் தேவைகளை நாம் கேட்கும் திராணியுள்ளவர்களாக மாற வேண்டும். குறைபாடுகளைச் சுட்டிக்காட்டும் துணிவுடைமை வாழ்வின் இயல்பானதாக அமைய வேண்டும். ■



TO KNOW
» NEW ATTRACTIONS
» WHERE TO STAY
» WHERE TO DINE
» WHAT TO DO
in COLOMBO
visit
aboutcolombo.lk
Your Gateway to Sri Lanka...
01. Download the QR code app on your mobile / tab from App Store / Play Store.
02. Open the app & scan the image.
03. Visit our site through your Tab / smart phone.




Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd, at No.185,Grandpass Road,Colombo -14, Sri Lanka.